www.tamilarangam.net



கனடா/இங்கிலாந்து

# "இறுதி யுத்தத்திற்கு" நிதியுதவி செய்தல்

## புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்

HUMAN RIGHTS WATCH

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "இறுதி யுத்தத்திற்கு" நிதியுதவி செய்தல்

## புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்


I. சாராம்சமும் பரிந்துரைகளும்....2
செய்முறைமை....5
பரிந்துரைகள்.... 6

II. பின்னணி நிலவரம்....7
இலங்கையில் நிகழும் யுத்தம்....7
புலம்பெயர் தமிழ் சமூகமும் புலிகள் இயக்கத்துக்கான ஆதரவும்....12

III. பீதீ தரும் கலாசாரம்: புலிகள் இயக்கத்தின், வன்முறைகள், அச்சுறுத்தல்கள் நெருக்குவாரங்கள்....16

IV. மேற்கு நாடுகளில் உள்ள கோயில்கள் மீது புலிகள் இயக்கத்தின் ஆதிக்கம்....25

V. "இறுதி யுத்தத்திற்கு" நிதி வழங்குதல்: 2005 பிற்பகுதி மற்றும் 2006 முற்பகுதியில், புலம்பெயர்ந்த தமிழர்களிடையே புலிகள் இயக்கத்தின் நிதி திரட்டலும் பலாத்கார பணப்பறிப்பும்....29
பணம் வழங்குவதற்கான நெருக்குவாரம்....35
மறுப்பதற்கும் எதிர்ப்பதற்குமான முயற்சிகள்....37
நிதிசேகரிப்பும் பலாத்கார பணப்பறிப்பும்....39
உலகத் தமிழர் இயக்கத்தின் பதில்கள்....40

VI. இலங்கைக்குப் போகும் புலம்பெயர் தமிழர்களிடம் பலாத்கார பணப்பறிப்பு....41
பிரியாவின் கதை....42
பலாத்கார பணப்பறிப்புக்கான பொதுவான முறைகள்....45

VII. கனேடிய மற்றும் பிரித்தானிய அதிகாரிகளின் பதிலுரைகள்....48

VIII. முடிவுரை....52

நன்றிகள்....54




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 1. சாராம்சமும் பரிந்துரைகளும்

*90 வீதமான மக்கள் புலிகள் இயக்கத்தை ஆதரிக்காது விட்டாலும்கூட அவர்கள் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். கொலைகள் இலங்கையில் மட்டுமே நடந்து விடுவன இல்லை. பாரிசிலும் கனடாவிலும்கூட அவை நிகழ்கின்றன. அவர்கள் நூல் நிலையத்தை தீயிட்டு கொழுத்தினார்கள்.[1] டீ.பீ.எஸ் ஜெயராஜின் கால்களை முறித்தார்கள். கனேடிய தமிழ் ஒலிபரப்பு என்னும் வானொலிச் சேவையை நடத்த விடாமல் தடுக்க முனைந்தார்கள். பாரிசில் ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டார். இவ்அச்சுறுத்தலானது இலங்கையில் மட்டும்தான் இருக்கின்றது என்பதில்லை அது உலகளாவியதாக இருக்கிறது.*

-தமிழ் சமூக செயற்பாட்டாளர், டொரன்டோ, ஜனவரி 2006

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே 1983ம் ஆண்டிற்கும் 2002ற்கும் இடையே மோதல் நடைபெற்ற காலத்தில் நிகழ்ந்த ஆயுத மோதல்களின் காரணமாக 60,000 அல்லது அதைவிட கூடுதலான உயிர்கள் பலி கொள்ளப்பட்டது, இருதரப்பினரும் மேற்கொண்ட மோசமான மனித உரிமை மீறல்கள் இந்த யுத்தத்தின் சாரம்சம் ஆகும். இவ்யுத்தமானது இலங்கைத் தமிழர்களில் கால்வாசித் தொகையினரை நாட்டைவிட்டு வெளியேறச் செய்துள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அத்து மீறல்கள் காரணமாகவே வெளியேறியுள்ளனர். அவ்வாறு வெளியேறி இன்று உலகெங்கும் வாழும் புலம்பெயர் தமிழ் சமூகத்தினரின் எண்ணிக்கையானது பருமட்டாக 600,000ற்கும் 800,000ற்கும் இடைப்பட்ட தொகையாகும்.

புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள், கனடா, இங்கிலாந்து உட்பட ஏனைய மேற்கத்தேய நாடுகளில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டுள்ளதனால், அவர்கள், இலங்கையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் தமிழ் சிறுபான்மையினருக்காக “தமிழ் ஈழம்” என்னும் சுதந்திரமான நாடு ஒன்றை நிறுவுவதற்கு புலிகள் இயக்கத்தினால் நடத்தப்படுகின்ற போராட்டத்திற்கு, அரசியல் ரீதியானதும் மற்றும் நிதி ரீதியானதுமான ஆதரவினை வழங்குகின்ற மிகவும் குறிப்பிடத்தக்க மூல கர்த்தாக்களாக ஆகியிருக்கின்றனர். இப்புலம் பெயர் தமிழ் சமூகத்தினரிடையே பலர் புலிகள் இயக்கத்திற்கு தீவிரத்துடனும் விருப்பத்துடனும் தமது ஆதரவினை வழங்குகின்றனர். அதேவேளை, ஏனையவர்கள் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களுக்கும், பலாத்கார பணப்பறிப்பிற்கும் உடல் ரீதியான தாக்குதல்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியதாக உள்ளனர். இதற்குக் காரணம் புலிகள் இயக்கமானது தமது மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான விமர்சனங்களை ஒடுக்கி, அதன் மூலம் தமக்கான தங்கு தடையற்ற பண வருமானத்தை உறுதி செய்யும் அதன் நோக்கமேயாகும்.

புலம்பெயர் தமிழ் சமூகத்தினரிடையே, புலிகள் இயக்கத்தினை வெளிப்படையாக விமர்சிக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் கடுமையான தாக்குதல்களுக்கும் மரண அச்சுறுத்தல்களுக்கும், அவதூறுப் பிரச்சாரங்களுக்கும் மற்றும் இட்டுக் கட்டப்பட்ட கிரிமினல் குற்றச்சாட்டுகளுக்கும் முகம் கொடுக்க நேரிடுகிறது. 2005ம் ஆண்டில் புலிகள் இயக்கமானது இலண்டனில் உள்ள ஒரு இந்துக் கோயிலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக பிரிட்டிஷ் பிரஜைகளான இரு தமிழர்களை பல வாரங்கள் இலங்கையில் தடுத்து வைத்திருந்தனர். இவ்வாறான சம்பவங்கள் தமிழ் சமூகத்தினரிடையே பீதி தரும் கலாச்சாரத்தை உருவாக்கி, மாற்றுக் கருத்துக்களை நெரித்து, தனி நபர்கள் புலிகளின் அனுமதியின்றி எவ்வித நிகழ்ச்சிகளையும் நடத்த முடியாத ஒரு தயக்க நிலையை ஏற்படுத்தியுள்ளது.

---

[1] 1994 மே மாதம் டொரன்டோவில் உள்ள தமிழ் வள நிலையமானது, அதன் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் நோக்கத்துடன் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகள் இயக்கமானது பல வருட காலமாகவே தமிழ் சமூகத்தினரை தமது நடவடிக்கைகளுக்கு நிதி ரீதியான ஆதரவினை வழங்கும்படி நெருக்கி வருகிறது. வட கிழக்கில் 2005 இன் பிற்பகுதிகளில் இருந்து 2006 முற் பகுதிகளில் நிகழ்ந்த ஆயுத மோதல்கள் கடந்த நான்கு வருட காலங்களாக அமுலில் இருந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கியது. இச் சூழலைப் பயன்படுத்தி புலிகள் இயக்கமானது 'இறுதி யுத்தத்திற்கு' நிதி தேவை என்ற கோசத்துடன் மாபெரும் நிதி திரட்டல் நடவடிக்கையை கனடாவிலும் ஐரோப்பாவிலும் முடுக்கி விட்டு தமிழ் வர்த்தகர்களையும் புலம் பெயர்ந்த தமிழர்களையும் பணம் தருமாறு நெருக்கியது.

புலிகள் இயக்கத்தினரும், அவ் இயக்கத்தோடு தொடர்புடைய ஸ்தாபனங்களைச் சேர்ந்த நிதி சேகரிப்பாளர்களும், வீடு வீடாகச் சென்றும் வர்த்தக நிலையங்கள், மற்றும் தொழில் புரியும் நபர்களை அணுகியும் தமது நடவடிக்கைகளுக்கு ஆதரவாக கணிசமானதொரு நிதித் தொகையினை தரும்படி கட்டாயப்படுத்தினர். கனடாவில் வாழும் குடும்பங்கள் கனேடிய டாலர்கள் 2,500[2]க்கும் 5,000த்திற்கும் இடைப்பட்ட தொகையினை கட்டாயமாக வழங்க வேண்டும் என கட்டாயப் படுத்தப்பட்டதோடு, சில வர்த்தக ஸ்தாபனங்கள் 100,000 கனேடிய டொலர்களை வழங்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளனர். இங்கிலாந்து, பிரான்ஸ், நோர்வே மற்றும் ஏனைய பல ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் சமூகத்தை சேர்ந்தவர்களிடமும் இதற்கு சமனான தொகைகள் வழங்கப்படல் வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

இதற்கு மறுப்புத் தெரிவித்த தனிநபர்கள் சிலவேளைகளில் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர். அவ்வாறு பணம் கொடுக்க தவறுபவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்களைப் பார்ப்பதற்கு இலங்கைக்கு செல்ல முடியாது என்றும் எச்சரிக்கப் பட்டுள்ளனர். ஏனைய பலர், "உங்களை கவனித்துக் கொள்கின்றோம்" அல்லது "நல்ல பாடம் புகட்டப்படும்" என்றெல்லாம் எச்சரிக்கப்பட்டுள்ளனர். தான் 20,000 கனேடிய டொலர்களுக்கு மேற்பட்ட தொகையினை வழங்க மறுத்ததிற்காக புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் தனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எதிராக அச்சுறுத்தல் விடுத்ததாக டொரன்டோவில் இருக்கும் வர்த்தக உரிமையாளர் ஒருவர் கூறினார்.

புலிகள் இயக்கத்தினரும் அவர்களோடு தொடர்புடைய உலகத் தமிழர் இயக்கம் போன்றவர்களும் தொடர்ச்சியாக திரும்பத் திரும்ப தமிழ் குடும்பங்களுக்கு தொலைபேசி அழைப்புக்களை விடுத்து தமக்கு நிதி வழங்கும்படி நச்சரித்தனர். சில குடும்பங்களின் வீடுகளுக்கு, ஒரு கிழமைக்குள் மூன்று தடவைகளுக்கு மேல்கூட இவர்கள் சென்றுள்ளனர். அக்குடும்பத்தினர்கள், தாங்கள் நிதி வழங்குவோம் என உறுதி கூறும்வரை, இந்த நிதி சேகரிப்பாளர்கள் அவர்களின் வீடுகளைவிட்டு வெளியேறவும் மறுத்துள்ளனர். அது மட்டுமன்றி தங்களிடம் தற்போது பணம் கையிருப்பில் இல்லை எனக் கூறியவர்களிடம், யாரிடமாவது கைமாறாக பெற்றுத் தாருங்கள், அல்லது உங்களுடைய வங்கிக் கடன் அட்டைகளைப் (Credit Cards) பாவித்து அல்லது உங்கள் வீடுகளை அடைமானம் வைத்து பணம் பெற்றுத்தாருங்கள் என்றும் கேட்கப்பட்டுள்ளனர்.

புலிகள் இயக்கமானது வெளிநாடுகளில் இருந்து தமது குடும்ப உறவினர்களைப் பார்ப்பதற்காக இலங்கைக்கு செல்லும் தமிழர்கள் பற்றிய விபரங்களை தெரிந்து வைத்துக்கொண்டு, இலங்கையில் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்குள் அவர்கள் சென்றதும், அவர்களிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காக மிகத்திட்டமிட்ட முறையில் அவர்கள் மீது அழுத்தங்களை

[2] இவ்வறிக்கை எழுதப்படும் போது கனேடிய டொலர் ஒன்றின் பெறுமதி அமெ.டொலர் 0.87 அல்லது 0.50.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடுகின்றனர். இவ்வாறு வெளிநாட்டில் இருந்து சென்றவர்களிடம் அவர்கள் அந்நாடுகளில் வாழ்ந்த காலத்தைக் கணக்கிட்டு, ஒரு நாளைக்கு 1டொலர், 1யூரோ, 1பவுண்ட் என்னும் தொகையானது புலிகள் இயக்கத்தினால் அறவிடப்படுவதற்கான “வரையறுக்கப்பட்ட” தொகையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி வெளிநாடுகளில் இருந்து சென்ற தனிநபர்கள் ஆயிரக் கணக்கில் நிதியை கொடுக்க வேண்டியிருப்பதோடு, அவ்வாறு குறிப்பிடப்பட்ட தொகையைக் கொடுக்கத் தவறும் பட்சத்தில், அவர்கள் அங்கிருந்து வெளியேற முடியாது எனவும் கூறப்பட்டுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் இத் தொகையினைக் கொடுக்கும்வரை அவர்களின் கடவுச்சீட்டுகளைக்கூட புலிகள் இயக்கத்தினர் பறிமுதல் செய்து வைத்துள்ளனர்.

யுத்த காலகட்டத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல் செயற்பாடுகளை புலம்பெயர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பலர் இன்னமும் தெளிவாக நினைவில் வைத்திருப்பதனால், அவர்கள் புலிகள் இயக்கத்திற்கு தாமாகவே விரும்பி நிதி உதவி செய்கின்றார்கள். அவர்கள் புலிகள் இயக்கத்தினை தமிழ் மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கும் நியாய பூர்வமான முக்கியமான பிரதிநிதிகளாகவே காண்கின்றனர். சுதந்திரமானதொரு தமிழ் தேசத்தை நிலைநிறுத்துவதற்கான தமது இலக்கினை அடைவதற்கு புலிகள் இயக்கமானது இராணுவ ரீதியான வழிமுறைகளை பயன்படுத்துவதையும் அவர்கள் ஆதரிக்கின்றனர்.

தமிழ் சமூகத்தை சேர்ந்த ஏனைய அங்கத்தவர்கள், ஒன்றில் தமது தனிப்பட்ட பொருளாதார சூழ்நிலைகள் காரணமாக, அல்லது புலிகள் இயக்கத்தின் குறிக்கோள் மற்றும் அவர்களின் வழிமுறைகளை ஏற்றுக் கொள்ளாத காரணங்களினால் அவ்வியக்கத்திற்கு ஆதரவையோ பங்களிப்பினையோ வழங்க விரும்பவில்லை. இன்னும் சிலர் புலிகள் இயக்கத்தினால் அழிக்கப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளையும் ஆதரிக்கின்றனர். எவ்வாறாயினும், கடந்த நான்கு வருட யுத்தநிறுத்த காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தினால், தொடர்ச்சியாக சிறார்களை படைகளில் சேர்க்கும் நடவடிக்கைகள், அரசியல் படுகொலைகள் உட்பட ஏனைய மனித உரிமை மீறல்கள் மேற்கொள்ளப் பட்டாலும்கூட, தொடர்ச்சியாக புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக அவர்களை ஆதரிக்காத இந்த தனிநபர்களும்கூட அவ் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக நிதி உதவி வழங்க நிர்ப்பந்திக்கப்படலாம்.

புலிகள் இயக்கமானது தமக்கான நிதி ஆதரவுக்காக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தின் மீது தங்கி நிற்பதனாலும், அச் சமூகத்தினரின் எண்ணிக்கையானது கணிசமான தொகையாக இருப்பதாலும், இப்புலம்பெயர் தமிழ் சமூகமானது, புலிகள் இயக்கம் மனித உரிமைகள் தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் உட்பட, அதன் கொள்கைகள் மற்றும் நடத்தைகள் தொடர்பாக காத்திரமானதும் தனித்துவமானதுமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமையைக் கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும், அவ்வல்லமையானது புலிகள் இயக்கத்தினால் அச்சமூகத்தினுள் மிகத் திறம்பட மேற்கொள்ளப்படுகின்ற அச்சுறுத்தல்கள் மற்றும் பலாத்கார பணப்பறிப்பு நடவடிக்கைகள் என்பவற்றின் மூலமாக பயனற்றதாக்கப் பட்டுள்ளது.

தமிழ் மக்களைப் பெருந்தொகையாக தமது நாடுகளுக்குள் வந்து குடியேற அனுமதித்துள்ள பிற நாடுகளின் அரசாங்கங்கள், அத்தமிழ் சமூகத்தில் உள்ள தனிநபர்கள் மீது நிகழுகின்ற இவ்வாறான அத்துமீறல் சம்பவங்களில் இருந்து அவர்களை பாதுகாக்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளன. ஆனால், இவ் அத்துமீறல்களுக்கு எதிராக தாங்கள் மிகச் சிறிய அளவில் மாத்திரமே நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், இவ்வாறான சம்பவங்கள், அத்துமீறல் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு தாம் அதிக முன்னுரிமை வழங்குவதில்லை என்பதையும் அவ்வரசாங்கங்கள் ஒத்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளுகின்றன. எவ்வாறாயினும், இந்த நாடுகளில் தமிழ் சமூகத்திற்குள்ளே ஏற்பட்டுள்ள இந்த அச்ச நிலைமை காரணமாக, போலீஸ் மற்றும் சட்டத்தை நிலைநிறுத்தும் பிரிவினரிடம் ஒரு சில தனிப்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் மிகத் தெளிவாக ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் நடத்தப்படுகின்ற இந்த அச்சுறுத்தல்கள் மற்றும் பணப்பறிப்புக்கள் என்பவற்றிற்கு எதிராக பொலிஸ் விசாரணைகள், சட்ட நடவடிக்கை எடுத்தல், மற்றும் அவற்றை பொதுமக்களுக்கு பகிரங்கப் படுத்தப்படுதல் என்பன தொடர்பாக அரசாங்கமானது முன்கூட்டிய நடவடிக்கைகளை (proactive) எடுத்தாக வேண்டும். அத்துடன் தனிநபர்கள் இவை தொடர்பாக முறைப்பாடுகளை செய்வதற்கு அவர்களுக்கிருக்கும் உரிமைகள் மற்றும் வழிமுறைகளையும் பகிரங்கப்படுத்தல் வேண்டும்.

## *செய்முறைமை*

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2005 ஒக்டோபர் முதல் 2006 பெப்ரவரி மாதம்வரை, இவ்வறிக்கையைத் தயாரிப்பதற்கான ஆய்வினை மேற்கொண்டது. டொரன்டோ- கனடா, இலண்டன் - பிரிட்டன், ஜெனீவா - சுவிற்சர்லாந்து, மற்றும் டசில்டோர்வ் - ஜெர்மனி ஆகிய இடங்களில் வாழும் புலம்பெயர் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களிடம் தொலைபேசி மூலமாகவும் நேரடியாகவும் தகவல்களை அது பெற்றுக் கொண்டது. குறிப்பாக இத்தகவல் அறியும் நடவடிக்கையானது கனடா மற்றும் இங்கிலாந்தில் வாழும் தமிழ் சமூகத்தினரை மையமாக வைத்தே நடத்தப்பட்டிருப்பதுடன், இவ்விரு நாடுகளுமே உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களின் அரைவாசியை அண்மித்த தொகையினை கொண்டிருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, தமிழ் வர்த்தக உரிமையாளர்கள், உத்தியோகத்தர்கள், செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஏனைய தனிநபர்களையும் நேர்காணல் செய்தது. அனேகமான இந்த நேர்காணல்கள் ஆங்கிலத்திலும், ஏனையவை தமிழ் மொழிபெயர்ப்புடனும் நடைபெற்றன.

இலண்டன் மாநகர பொலீஸ், டொரன்டோ பொலீஸ், இலண்டனில் உள்ள வெளிநாடு மற்றும் பொதுநலவாய அமைப்பு பிரிவு (U.K. Foreign and Commonwealth Office), மற்றும் உலகத் தமிழர் இயக்கம், ஆகியவற்றின் பிரதிநிதிகள் இன்னும் தனிப்பட்ட நிபுணர்கள் ஆகியோருடனும் நாம் உரையாடினோம். 2006ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எழுந்த கேள்விகளை எழுத்து வடிவில், இலங்கையில் புலிகள் இயக்கத்திற்கு நாம் அனுப்பி வைத்திருந்த போதும், அது தொடர்பாக எவ்விதமான பதிலுரைகளும் அவர்களிடம் இருந்து எமக்குக் கிடைக்கவில்லை. 2006ம் ஆண்டு பெப்ரவரியில் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான கேள்விகள் பற்றி, பிரித்தானிய தமிழ் சங்கத்துடன் தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் நாம் தொடர்பு கொண்டபோதும் அதுபற்றி எவ்விதமான பதிலும் எமக்கு கிடைக்கவில்லை.

இவ்வறிக்கைக்காக நேர்காணல் செய்யப்பட்ட தமிழர்களின் பாதுகாப்பிற்கு மிகவும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல்கள் இருப்பதன் காரணமாக அத்தனிநபர்களில் அநேகமானவர்களின் பெயர் விபரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் உரையாடியவர்களை இனங்காணுவதில் இருந்து பாதுகாப்பதற்காக இந்த உரையாடல்கள் நடைபெற்ற இடங்கள் மற்றும் அவர்களை இனங்காணக்கூடிய ஏனைய விபரங்கள் மாற்றப்பட்டுள்ளன, அல்லது இங்கு அவை வெளியிடப்படவில்லை. சில சம்பவங்களோடு நேரடியாக தொடர்பு பட்டவர்களுக்கு, ஆபத்துக்கள் ஏற்படாத வகையில், அச்சம்பவங்களை இங்கு விபரிக்க முடியாமல் இருந்ததன் காரணமாக, அச்சம்பவங்கள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்படுவதை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது முற்று முழுதாக தவிர்த்திருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## *பரிந்துரைகள்*

**கனடா, பிரித்தானியா உட்பட புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வாழும் ஏனைய நாட்டு அரசாங்கங்களுக்கு**

*புலிகள் இயக்கத்தோடு தொடர்புள்ள வன்முறைகள், பலாத்கார பணப்பறிப்பு, அச்சுறுத்தல்கள் மற்றும் நெருக்குவாரங்களில் இருந்து தமிழ் குடியிருப்பாளர்களை பாதுகாப்பதற்காக காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். குறிப்பாக,*

- தமிழ் சமூகத்திற்குள் நடைபெறும் பலாத்கார பணப்பறிப்பு மற்றும் நெருக்குவாரங்கள் என்பவை தொடர்பாக காத்திரமாக விசாரித்து அறிவதற்கு பொருத்தமான அமைப்புக்களை உள்ளடக்கியதாக, பொலிசாரின் தலைமையில் விசேட விசாரணை செயலணிகளை (Special interagency task force) நிறுவுவதோடு சட்டரீதியாக தண்டனை வழங்கவும் ஆவன செய்ய வேண்டும்.

- புலிகள் இயக்கத்தினால் அல்லது ஏனைய குழுக்களினால் மேற்கொள்ளப்படும் நிதி சேகரித்தல், அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குதல் அல்லது நெருக்குவாரத்திற்கு உட்படுத்தல் என்பவற்றுக்கு முகங்கொடுக்கின்ற தனிநபர்களுக்கு, அவர்கள் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பவற்றை விளக்குகின்ற வகையில், அவை தொடர்பான சட்ட விடயங்களை தமிழ் மக்களுக்கு பகிரங்கமாக உணர்த்தும் வகையிலான பிரச்சார நடவடிக்கைகளை தமிழ் பத்திரிகைகள், வானொலிகள் மற்றும் ஏனைய ஊடகங்களைப் பாவித்து மேற்கொள்ளல் வேண்டும்.

- பலாத்காரப் பணப்பறிப்பு மற்றும் அச்சுறுத்தல் என்பவை தொடர்பாக முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்கு, தமிழ் பேசுகின்ற உத்தியோகத்தர்களைக் கொண்டு நியமிக்கப்பட்ட விசேடமான உடன் தொலைபேசி வசதிகளை (Hotline) செய்வதோடு அதன் மூலம் கிடைக்கப்பெறும் தகவல்களை சட்டத்தை அமுல் படுத்துகின்ற உரிய திணைக்களத்திற்கு வழங்குதல் வேண்டும்.

- புலிகள் இயக்கம் தொடர்பானதாக நிகழும் அச்சுறுத்தல்கள் மற்றும் பலாத்காரப் பணப்பறிப்பு என்பவை என்னென்ன விதமாக நிகழ்தப்படுகின்றன என்பது பற்றி கலந்துரையாடுவதற்காக தமிழ் சமூகத்தின் தலைவர்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். இவ்வாறான சந்திப்புக்களை பயன்படுத்தி, அரசாங்கமானது இவ்அத்துமீறல் நடவடிக்கைகள் தொடர்பாக எவ்வளவு ஆழமாக அக்கறைப் படுகின்றது என்றும், தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்களை பாதுகாப்பதற்காக அரசாங்கம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது என்பதையும் அம் மக்களுக்கு தெரியப்படுத்த முடியும்.

- புலிகள் இயக்கத்திற்காக சேர்க்கப்படும் நிதியானது மறைமுகமாக அவ்வியக்கத்தால் மேற்கொள்ளப்படும் சிறார்களை படையில் சேர்த்துக் கொள்வது உட்பட ஏனைய யுத்தக் குற்றச் செயல்களுக்கு உதவலாம் என்பதைத் தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

- புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்கள் மீது நடத்தப்படும் சகலவிதமான வன்முறைகள், அச்சுறுத்தல்கள், நெருக்குவாரங்கள் மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடைஞ்சல்களுக்கு உள்ளாக்குதல் என்பவற்றை, புலிகள் இயக்கம் நிறுத்த வேண்டும் என அவர்களை வலியுறுத்தல் வேண்டும்.

**புலிகள் இயக்கத்திற்கும் புலிகளுடன் தொடர்பான அமைப்புகளுக்கும்**

- மீண்டும் இலங்கைக்கு செல்லுகின்ற புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்கள் உட்பட ஏனைய தமிழ் சமூகத்தினரிடம் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளும் வன்முறைகள் அச்சுறுத்தல்கள், நெருக்குவாரங்கள் மற்றும் இடைஞ்சல்கள் ஏற்படுத்தல் என்பவற்றை உடனடியாக நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

- புலிகளின் அங்கீகாரம் இன்றி தனித்துவமான சமூக நிகழ்வுகளை ஒழுங்கு செய்கின்றவர்கள், அல்லது புலிகள் இயக்கம் தொடர்பாக விமர்சனங்களை முன்வைக்கின்ற தமிழர்கள் ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் சகல வன்முறைகள், அச்சுறுத்தல்கள், நெருக்குவாரங்கள் மற்றும் இடைஞ்சல்கள் என்பற்றை உடனடியாக நிறுத்திக் கொள்ளல் வேண்டும்.

**புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்திற்கு**

- புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றவரை, இலங்கையில் உள்ள ஸ்தாபனங்களுக்கு நீங்கள் வழங்குகின்ற நிதி உதவிகளாவன, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ புலிகள் இயக்கத்தின் பயன்பாட்டிற்கு செல்லாதிருப்பதை, உங்கள் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு உறுதி செய்யுங்கள்.

- இலங்கையில் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான சூழலை முன்னேற்றுவதில் தமிழ் சமூகத்தின் பாத்திரம் என்னும் விடயம் உட்பட, தமிழ் சமூகத்தினுள்ளே மனித உரிமைகள் தொடர்பான நிலைமையினை முன்னேற்றுவதற்காக இருக்கின்ற வாய்ப்புக்களை கண்டறியுங்கள்.

## II. பின்னணி நிலவரம்.

***இலங்கையில் நிகழும் யுத்தம்***

20 மில்லியன்களை அண்மித்த சனத்தொகையைக் கொண்ட இலங்கையில் பருமட்டாக எடுத்துக்கொண்டால், 74வீதமானோர் சிங்கள பௌத்தர்களாகவும், 18வீதமானோர் தமிழர்களாகவும் (பெரும்பாலும் இந்துக்கள்), 7வீதமானோர் முஸ்லீம்களாகவும் இருக்கின்றனர். தலைநகர் கொழும்பில் பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் குடியிருந்தாலும், மிகப் பெரும்பான்மையான தமிழர்கள் நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களிலேயே செறிந்து வாழ்கின்றனர். 1983ம் ஆண்டிற்கும் 2002ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில், இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் (LTTE அல்லது தமிழ்ப் புலிகள்) இலங்கை அரசாங்கமும் மேற்கொண்ட கொடிய

யுத்தமானது 60,000ற்கு மேற்பட்ட உயிர்களை பலி கொண்டுள்ளதோடு பொருளாதாரத்திற்கும் பாரிய நாசத்தை விளைவித்துள்ளது.

இவ் யுத்தத்திற்கு முன் கால் நூற்றாண்டுக்கு மேலாகவே தமிழ் மக்களின் பிரைச்சனைகளுக்கான கோரிக்கைகள் இருந்து வந்துள்ளன. 1956ம் ஆண்டில் சிங்கள ஆதிக்கத்துடன் பதவிக்கு வந்த (சுதந்திரம் அடைந்து 8வருடங்களின் பின்) அரசாங்கமானது தொடர்ந்து சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயற்சித்ததானது, சிறுபான்மை தமிழ் சமூகத்தினரை திட்டமிட்ட ரீதியில் பாகுபாடுடன் நடத்துவதற்கு வழி வகுத்ததோடு அவர்களை பொருளாதார, அரசியல் மற்றும் கலாச்சார ரீதியான ஒதுக்கல்களுக்கும் உள்ளாக்கியது. தமிழர்களின் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் அரசியல் கட்சிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறை அற்ற முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தன. எனவே 1970களின் பிற்பகுதியில் தமிழ் அரசியல் கட்சிகளும், பிரிவினைவாத ஆயுதக் குழுக்களும் “தமிழ் ஈழம்” என்னும் சுதந்திரமான தமிழ்த் தேசம் ஒன்றை உருவாக்குவதற்கான முன்னெடுப்புகளை ஆரம்பித்தனர். அரசாங்கத்தின் ஆயுதப் படைகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக புலிகள் இயக்கம் உட்பட ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களால் வழி நடத்தப்பட்ட தீவிரவாத செயற்பாடுகள் தொடர்ச்சியாக நிகழ ஆரம்பித்தன.

இத் தீவிரவாத நடவடிக்கைகள் 1983ம் ஆண்டில் ஒரு யுத்தமாக வெடித்துக் கிளம்பியது. வடக்கே யாழ்ப்பாண குடாநாட்டில், உயர் அதிகாரிகள் உட்பட சிங்கள இராணுவத்தினர் 13பேரை புலிகள் இயக்கம் கொன்றதன் பின்னர், அதற்கு வன்முறை ரீதியான பதிலடியாக தமிழ் சமூகத்தினரை இலக்கு வைத்து கொழும்பில் கலவரங்கள் உருவாக்கப்பட்டன. இக் கலவரத்தினால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதோடு தமிழர்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்களில் 90வீதமானவை அழிக்கப்பட்டன என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. தமிழர்கள் வாழ்ந்த பெரும்பாலான குடியிருப்பு பகுதிகள் அழிக்கப்பட்டதோடு 100,000த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொழும்பில் இருந்து இடம்பெயர நேர்ந்தது. அரசாங்கத்தின் ஒத்தாசையுடனேயே இக்கலவரங்கள் நிகழ்ந்ததாக பல சாட்சியங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன், இக்கலவரமே யுத்தத்திற்கான விசையை அழுத்திவிட்டது என்றும் பல அவதானிகள் அடையாளப்படுத்துகின்றனர்.

இம் மோதல் நிலைமையானது இருசாராரினாலும் மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்தமான மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்த சட்டங்களை மீறுதல் போன்ற சம்பவங்களினால் நிறைந்துள்ளது.[3] அரசாங்க படைகளானது தமிழ் சிவில் மக்களை கொன்று குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதோடு, சிவில் மக்கள் தமது பாதுகாப்பிற்காக ஓடி ஒதுங்கிய வணக்க ஸ்தலங்கள் மற்றும் மருத்துவ நிலையங்கள் என்பவை உட்பட சிவில் மக்கள் வாழும் பகுதிகளின் மீதும் மிக கண்மூடித்தனமான வகையில் ஆட்டிலறி மற்றும் விமான குண்டு வீச்சுக்களை நிகழ்த்தினர்.

இம் மோதல் நிலைமை நிகழ்ந்த கால கட்டத்தில் இலங்கை அரசாங்க பாதுகாப்பு படைகளின் தடுப்புக் காவலில் இருந்து பல்லாயிரக் கணக்கானோர் “காணாமல் போயுள்ளனர்”. பல்வேறு கெரில்லா இயக்கங்களின் ஆதரவாளர்கள் என சந்தேகிக்கப் பட்டவர்கள், பெருந்தொகையான கைதுகளுக்கும், சட்ட விரோதமாக கொல்லப் படுதல்களுக்கும், வழக்கு விசாரணை ஏதுமற்ற நீண்டகால தடுத்து வைப்புகளுக்கும் உள்ளாகினர். 2000ம் ஆண்டில் மாத்திரம் அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டம் என்பவற்றினால், நாடளாவிய ரீதியில் 18,000பேர் கைது செய்யப் பட்டுள்ளதோடு இவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் தமிழர்களே என்று மனித

[3] பார்க்கவும், உ+ம். 1990-1994 மற்றும் 1996-2003ம் வருடங்களில் இலங்கை நிலவரங்கள் பற்றிய மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் வருடாந்த உலக அறிக்கை.

www.tamilarangam.net

உரிமை வழக்கறிஞர் என்.கந்தசாமி மதிப்பிட்டு உள்ளார்.[4] இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் இலங்கைப் பாதுகாப்பு படையினரால் மிக மோசமாக நடத்தப்படுவதுடன் சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

இலங்கையில் இம்மோதல் நிலமை காரணமாக அனேகமான தமிழ்க் குடும்பங்கள் ஒன்றில் தமது குடும்ப அங்கத்தவர்களை இழந்துள்ளனர் அல்லது கொடுமைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர், அல்லது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அத்து மீறல்களை நேரடியாக கண்டுள்ளனர். கும்பலாக பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்குதல் (gang rapes) உட்பட, தமிழ்ப் பெண்களுக்கு எதிராக போலீசாரும் இராணுவத்தினரும் பெருமளவு பாலியல் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். சோதனைச் சாவடிகளில் மோசமாக நடத்தப்படுதல், நாளாந்தம் தாக்கப்படுதல், சித்திரவதைக்கு உட்படுத்தப்படுதல், பகிரங்கமாக சிறுமைப் படுத்தப்படுதல் போன்றவற்றிற்கு வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் குடிமக்கள் தொடர்ச்சியாக முகங் கொடுத்துள்ளனர். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பாதுகாப்பு படையினரால் பலாத்கார உடல் உழைப்பிற்கும் உள்ளாக்கப் பட்டுள்ளனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்வதற்கு காரண கர்த்தாக்களாக அரச படையினரே இருந்துள்ளதோடு, தமக்கு எதிரான சக்திகளுக்கு உள்ளூர் மக்களின் ஆதரவு கிடைப்பதைத் தடுக்கும் கைங்கரியமாகவே இந்த நடவடிக்கைகள் நிகழ்த்தப்பட்டன எனலாம். வாரக் கணக்காக வடக்குப் பகுதிக்கு உணவுப் பொருட்களையும் மனிதாபிமான உதவிகளையும் போகவிடாமல் பாதுகாப்புப் படைகள் தடுத்து நிறுத்தின.

வடக்கு கிழக்கில் வாழும் சிறார்களும் மிகக் குறிப்பாக இம்மோதல் நிலமையினால் பாதிக்கப் பட்டுள்ளனர். வடக்கிலே மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி அங்கு வாழும் சிறார்களின் மூன்றில் ஒரு பகுதியினர் தமது உறவினர் ஒருவரையேனும் இழந்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது. அவர்களில் 25வீதமானோர் நேரடியாக வன்முறைகளை கண்ணுற்றுள்ளதோடு, 25வீதமானோர் தமது சொந்த உயிருக்கான அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்துள்ளனர்.[5]

வேலுப்பிள்ளை பிரபாகரனின் தலைமையில் நடத்தப்படுகின்ற புலிகள் இயக்கமும் பாரிய அத்துமீறல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பானவர்களாவர். இக்குழுவானது இராணுவ மற்றும் சிவில் இலக்குகளை குறிவைத்து 200க்கும் மேற்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளது என்று நம்பப்படுகிறது. புலிகள் இயக்கமானது 1993ல் இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவையும், 1991ம் ஆண்டில் முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியையும் கொலை செய்வதற்கு தற்கொலை குண்டுதாரிகளை பயன்படுத்தினார்கள். 1999ம் ஆண்டில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்காவை கொல்லுவதற்கு தற்கொலை குண்டுதாரி ஒருவரைப் பாவித்து அவர்கள் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி தோல்வி கண்டதோடு அத்தாக்குதலில் ஏனைய 21பேர் கொல்லப்பட்டனர். தமக்கு எதிரான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் போன்ற பலரையும் புலிகள் இயக்கம் கொலை செய்துள்ளது. இந்தோனேசிய பயணிகள் கப்பல் ஒன்றை தீவைத்து கொழுத்தியமை, பேரூந்துகள், புகையிரதங்கள், தரித்து நிற்கும் விமானங்கள், உல்லாச விடுதிகள், மற்றும் பொருளாதார மையமான கொழும்பில் உள்ள கட்டிடங்கள் என்பவற்றின் மீது குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டமை மற்றும் கண்டியில் அமைந்துள்ள புனித பௌத்த வணக்கத் தலத்தை தாக்கியமை உட்பட, புலிகள் இயக்கமானது சிவில் மக்களோடு தொடர்புள்ள பல்வேறு மையங்கள் மீதும் பல குண்டுத்

---

4 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் 2002ம் ஆண்டுக்கான உலக அறிக்கை, பக்கம்.254ல் காண்க.

5 2002 வெளியிடப்பட்ட BMJ அறிக்கை, சிறார் படையினர்: குறிப்பிட்ட சூழ்நிலையை புரிந்து கொள்ளல். தொகுதி 324.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. 91பேர் கொல்லப்பட்டும் 1,400பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியதுமான தனியொரு குண்டுத் தாக்குதல் சம்பவமாக, 1990ம் ஆண்டு ஜனவரி மாதம் கொழும்பு மத்திய வங்கியின் மீது புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் சம்பவத்தை குறிப்பிடலாம்.

பெருந்தொகையான சிங்கள மற்றும் முஸ்லீம் கிராமத்தவர்களை, பதிலடி தாக்குதலாக படுகொலை செய்தல், போன்றவற்றிலும் புலிகள் இயக்கம் ஈடுபட்டுள்ளது. தகவல் வழங்குவோர் என சந்தேகிப்பவர்களுக்கு பகிரங்கமாக மரண தண்டனை வழங்குதல் மற்றும் மாற்று கருத்துள்ளவர்கள், அவர்களின் குடும்ப அங்கத்தவர்களை ஆயிரக்கணக்கில் தடுத்து வைத்து சித்திரவதை செய்யும் நடவடிக்கைகளையும் அவ்வியக்கம் மேற்கொண்டுள்ளது. நிர்ப்பந்தப்படுத்தல் அல்லது பலாத்காரப் படுத்தல்களின் மூலமாகவே பெரும்பாலும் அவ்வியக்கமானது ஆயிரக்கணக்கான சிறார்களை தமது ஆயுதப் படைகளில் சேர்த்துக் கொண்டுள்ளதோடு, அவர்களில் சிலரை தற்கொலை குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளவும் பயன்படுத்தி உள்ளது.

நோர்வே அரசாங்கத்தின் அனுசரனைக் குழுவினரின் அனுகூலத்தின் அடிப்படையில், 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் புலிகள் இயக்கமும் இலங்கை அரசாங்கமும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர். இவ்யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் முகமாக நோர்டிக் நாடுகளைச் (Nordic countries) சேர்ந்த சிவில் மற்றும் இராணுவ நபர்களை உள்ளடக்கிய நோர்வே நாட்டு தலைமையிலான சிறிலங்கா கண்காணிப்பு அமைப்பு (SLMM) என்பது உருவாக்கப்பட்டது.

இவ்யுத்த நிறுத்த ஒப்பந்தமானது, மோதல் நிலைமையை தற்காலிகமாக நிறுத்தியிருப்பினும், மோசமான அத்துமீறல் நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வரவில்லை. 2002ம் ஆண்டு பெப்ரவரி 1ம் திகதி முதல் 2005ம் ஆண்டு டிசம்பர் 31வரை, சாதாரண சிவில் மக்களுக்கு எதிராக வன்முறைகளையும் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்திய, 3,500 யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களை சிறிலங்கா கண்காணிப்பு குழுவினர் அறிக்கைப்படுத்தி உள்ளனர். அவற்றில் மிகப் பெரும்பான்மையானவை புலிகள் இயக்கத்தினராலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.[6] யுத்த நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து, பெரும்பாலாக தமிழர்கள் உட்பட, 200க்கும் மேற்பட்ட அரசியல் படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. இவைகளில் பெரும்பாலானவர்கள் தமிழர்கள். இவற்றில் பெரும்பான்மையானவை புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட அதேவேளை, புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக தமது இயக்கம் சாராத ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளைச் சார்ந்த அங்கத்தவர்களையும் மற்றும் தமது இயக்கத்தை விமர்சித்தவர்களையும் கொலை செய்தது.[7] நத்தார் தினத்தன்று நடைபெற்ற ஆராதனை வேளையில் புலிகளுக்கு சார்பான பாராளுமன்ற உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டமை போன்ற ஏனைய கொலைகள், புலிகள் இயக்கத்தை உடைத்துக்கொண்டு வெளியேறிய முன்னாள் புலிகளின் தளபதி கேணல் கருணாவின் பிரிவினர் அல்லது தமிழ் அரசியல் கட்சிகள் அல்லது இலங்கை பாதுகாப்பு படையினர்

---

[6] புலிகள் இயக்கம் 3,471 யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளது, அரசாங்கப் படைகள் 167 அத்துமீறல் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளது. புலிகளால் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக கருதப்படும் அத்துமீறல்களில் அரைவாசிக்கு மேலானது சிறார்களை படையில் சேர்த்துக்கொண்ட சம்பவங்களே ஆகும். எல்லா மாவட்டங்களிலும் நிகழ்ந்த அத்துமீறல் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை உள்ளடக்கிய SLMM அறிக்கையின் சாரம்சம். [இணையத்தளம்] http://www.slmm.lk/OoperationsMatter/complaints/Accumulated.pdf (2006 ஜனவரி 29ல் மீளளைக்கப்பட்டது)

[7] அரசியல் படுகொலைகள் தொடர்பாக மேலதிக விபரங்களுக்கு, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் 2005 பெப்ரவரி 11ல் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை, ***இலங்கை****: யுத்த நிறுத்தத்தின் பலவீனங்களையே கொலைகள் எடுத்துக் காட்டுகின்றன.* என்பதைப் பார்க்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக் கருதப்பட்டது. 2005ம் ஆண்டு நடுப்பகுதியில், சராசரியாக ஒரு நாளைக்கு ஒரு அரசியல் படுகொலை என்ற நிலமையை அடைந்திருந்தது.[8]

மேலும் புலிகள் இயக்கமானது யுத்த நிறுத்த காலகட்டத்திலும் சிறார்களை தமது படையணிகளில் சேர்க்கும் நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டது. 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் 2006ம் ஆண்டு ஜனவரி மாதம்வரை, சிறார்கள் படையில் சேர்க்கப்பட்ட 4,347 சம்பவங்களை யுனிசெப் நிறுவனம் ஆவணப் படுத்தியுள்ளது. இவ்வாறு சேர்க்கப்பட்ட சிறார்களில் 36 வீதமானோர், அவர்கள் படையில் சேர்க்கப்படும் பொழுது 15 வயதிற்கு குறைந்தவர்களாக காணப்பட்டனர்.[9] 2004ம் ஆண்டில் நடத்தப்பட்ட ஓர் விசாரணை நடவடிக்கையின்போது, புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படையணிகளில் சேர்க்கப்படுகின்ற பெரும் எண்ணிக்கையான சம்பவங்களை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு ஆவணப்படுத்தியது.[10] அரசு அல்லாத ஆயுதக் குழுக்களால் 18வயதிற்கு குறைந்த சிறார்களை படையணிகளில் சேர்ப்பதும் பயன்படுத்துவதும் சர்வதேச சட்டத்தை மீறுகின்ற நடவடிக்கையாகும். அத்துடன் 15 வயதிற்கு குறைந்த சிறார்களை படையணிகளில் சேர்த்தல் என்பது யுத்தக் குற்றமாகவே கணிப்பிடப்படுகின்றது.[11]

2005ம் ஆண்டு நவம்பரில் இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் பகிஸ்கரிப்பானது வடக்கில் கணிசமாக வாக்களிப்போர் எண்ணிக்கை குறைவதற்கும் கிழக்கில் பல குண்டு வெடிப்புகள் நிகழ்வதற்கும் வழி வகுத்தது. கிழக்குப் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் வாக்களிக்க செல்ல விரும்பியவர்கள், புலிகள் இயக்கத்தினால் வாக்களிக்க முடியாமல் பலவந்தமாக தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர்.

2005ம் ஆண்டு பிற்பகுதியில், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மோசமாக பாதிக்கின்ற விதத்தில் புலிகள் இயக்கமானது அதிக எண்ணிக்கையில் மறைந்திருந்து தாக்குதல் மற்றும் வேறுவிதமான தாக்குதல்களை மேற்கொண்டு இலங்கை இராணுவத்தையும் கடற்படையையும் சேர்ந்த 80 பேருக்கு மேல் கொன்றொழித்தனர். 2005ம் ஆண்டு டிசம்பரிலும் 2006ம் ஆண்டு ஜனவரியிலும் 150 பேருக்கு மேல் கொல்லப்பட்டதோடு, அவர்களில் அரைவாசிப்பேர் சிவிலியன்களாவர். புலிகள் இயக்கத்தால் நடத்தப்பட்ட இத்தாக்குதல்களுக்கு மிக கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலமே இலங்கை

---

[8] பார்க்க,2005ம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் திகதி, மனித உரிமைகள் கண்காணிப்பு குழு வெளியிட்ட ஊடக அறிக்கை: *அதிகரித்து வரும் அரசியல் படுகொலைகள்.*

[9] 2006ம் ஆண்டு பெப்பரவரி 3ம் திகதி, கொழும்பு-யுனிசெப் அமைப்பிடம் இருந்து மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு கிடைக்கப் பெற்ற மின்னஞ்சல் தகவல். சிறார்கள் படையில் சேர்க்கப்படுதல் சம்பவங்களில் அனேகமானவை யுனிசெப் அமைப்பின் கவனத்திற்கு கொண்டு வரப்படாததினால், உண்மையான சம்பவங்களின் எண்ணிக்கை மிக கணிசமான அளவு உயர்வாக இருக்கலாம்.

[10] **அச்சத்திற்குள் வாழ்தல்:** *இலங்கையில் சிறார்படையினரும் புலிகள் இயக்கமும்,* மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கை, பகுதி.16, இல.13(c), 2004 நவம்பர், [இணையதளம்]http//hrw.org/reports/2004/srilanka1104/.

[11] சிறார்களின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் இரண்டாவது சரத்தின்படி (Optional Protocol II) அரசாங்கமோ அல்லது அரச சார்பல்லாத ஆயுதக் குழுக்களோ, சிறார்களை படைகளில் சேர்த்து அவர்களை படையினராகப் பாவித்து மோதல்களில் ஈடுபடுத்தல் மற்றும் அத்துடன் சம்பந்தந்தமான ஏனைய நடவடிக்கைகளில் அவர்களைப் பாவிப்பதற்கான குறைந்த வயதெல்லையாக 18 வயது தெளிவாக நியமிக்கப்பட்டுள்ளது. (A/RES/54/263, 2000 மே இல் இணக்கம் காணப்பட்டு, 2002 பெப்ரவரி 12இல் அமுலுக்கு வந்தது). 2000ம் ஆண்டு செப்டெம்பர் 8ம் திகதி சிறீ லங்கா அரசாங்கம் இதில் கையொப்பமிட்டு ஏற்றுக்கொண்டது. 1949ம் ஆண்டு ஜெனீவா ஒப்பந்தத்தின் Iம் IIம் சரத்துக்களில் தெரிவிக்கப்படுகின்ற, நடப்பிலிருக்கும் சட்ட விழுமியங்களின் அடிப்படையிலும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் உரோமானிய சாசனத்தின்படியும், ஆயுதப் படைகளுக்காக சேர்த்துக்கொள்ளும் ஆகக்குறைந்த வயதெல்லையாக,15 நியமிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சட்டங்களை மிக மோசமாக மீறுதல் என்பது யுத்தக் குற்றங்களாகும். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள, நடப்பிலிருக்கும் சர்வதேச மனிதாபிமான சட்டதிட்டங்கள், என்பதைப் பார்க்கவும்.(கேம்ப்ரிட்ஜ்:2005). ஒழுங்குகள் 136ம் 137ம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பாதுகாப்பு படையினர் பிரதி நடவடிக்கைகளை எடுத்தனர். 2005ம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இலங்கையின் வடக்குப் பிரதேசங்களில் பாதுகாப்பு படையினரால் கைதுசெய்யப்பட்டதன் பின்னர் ஆகக் குறைந்தது 10பேராவது "காணாமல் போயுள்ளனர்."[12] டிசம்பர் 19ம் திகதி, யாழ்ப்பாண பல்கலைகழகத்தைச் சேர்ந்த ஆர்ப்பாட்டகாரர்கள் கற்களை வீசியெறிந்த பொழுது பாதுகாப்பு படையினர் அவர்கள் மீது உண்மையான துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். அச்சம்பவத்தில் பல எண்ணிக்கையானோர் காயமடைந்தனர் என்றும் தெரியவந்துள்ளது. டிசம்பர் மாத இறுதிப்பகுதியில் கொழும்பில், அரசாங்கமானது சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதோடு, நூற்றுக்கணக்கான தமிழர்களை கைதுசெய்து அவர்களை குறிப்பிட்ட அளவு நேரம் தடுத்து வைத்திருந்தது. ஜனவரி 2ம் திகதி திருகோணமலையில் ஐந்து உயர் பள்ளி மாணவர்களை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றதாகவும் நம்பப்படுகின்றது.

வன்முறைகள் அதிகரித்ததன் காரணமாக சிறிலங்கா கண்காணிப்பு குழுவினர் திருகோண மலையில் தமது நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தினர். அத்துடன் ஜனவரி 13ம் திகதி சிறீலங்கா கண்காணிப்பு குழுவினரின் மட்டக்களப்பு காரியாலயம் குண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளானது. டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் கண்காணிப்பு குழுவினர் தொடர்ச்சியாக பல அறிக்கைகளை வெளியிட்டதோடு, அதிகரித்துவரும் பதட்டமான நிலைமையின் காரணமாக மீண்டும் முழு அளவிலான யுத்த சூழல் உருவாகி விடலாம் என்பது தொடர்பாக தொடர்ச்சியாக தமது அக்கறையினை வெளிப்படுத்தினர்.[13] அரசாங்கமும் புலிகள் இயக்கமும் ஜெனீவாவில் மீண்டும் யுத்த நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்ததை தொடர்ந்து, 2006 ஜனவரி மாதத்தின் பிற்பகுதியில் பதட்ட நிலமை சற்று தணிந்தது.

### *புலம்பெயர் தமிழ் சமூகமும் புலிகள் இயக்கத்துக்கான ஆதரவும்*

1983ம் ஆண்டில் ஆரம்பித்து தொடர்ச்சியாக ஏற்பட்ட யுத்தத்தின் தாக்கங்களும், தமிழ் மக்களை இலக்கு வைத்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பாரிய அளவான அத்துமீறல் செயற்பாடுகளும், பல்லாயிரக்கணக்கான தமிழர்களை இலங்கையை விட்டு வெளியேறச் செய்தன. 2001ம் ஆண்டளவில் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கையானது 600,000 - 800,000 வரையில் இருக்கலாம் என கணக்கிடப்பட்டதோடு, இவ் எண்ணிக்கையானது உலகெங்கும் வாழும் இலங்கை தமிழர்களின் சனத்தொகையில் கால்வாசி தொகையினராக இருக்கலாம் என பருமட்டாக கணிப்பிடப்பட்டது.[14]

புலம்பெயர்ந்த பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் மேற்கு ஐரோப்பா, இந்தியா, அவுஸ்திரேலியா மற்றும் வட அமெரிக்காவிலும் காணப்பட்டனர். இவர்களில் மிகப்பெருந்தொகையான எண்ணிக்கையானோர் கனடா (பருமட்டாக 200,000-250,000), இந்தியா (பருமட்டாக 150,000), இங்கிலாந்து (110,000), ஜேர்மனி (பருமட்டாக 50,000),

---

[12] 2006 ஜனவரி 1, சர்வதேச மன்னிப்புச் சபையின் பகிரங்க அறிக்கை: *வன்முறைகள் அதிகரிப்பதையிட்டு சர்வதேச மன்னிப்புச்சபை அக்கறை கொண்டுள்ளது.*

[13] 2005 டிசம்பர், 29 ல் SLMM இனால் வெளியடப்பட்ட, *ஆபத்துக்கு உள்ளாகியிருக்கும் சமாதான நடவடிக்கையும் யுத்த நிறுத்த ஒப்பந்தமும்* என்னும் ஊடக அறிக்கையையும், 2006 ஜனவரி 13ல் SLMM இனால் வெளியிடப்பட்ட *இலங்கையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் இன்னும் இருக்கின்றதா என்பது பற்றி சில கேள்விகள்,* என்னும் ஊடக அறிக்கையையும் பார்க்கவும்.

[14] இராஜேஷ் வேணுகோபால், *இலங்கைப் பிரைச்சினையின் சர்வதேச பரிமாணம்,* ஆய்வு முன் ஏடு (Working Paper) 2003 பெப்ரவரி. இல. 99, குயின் எலிசபெத் ஹவுஸ், ஒக்ஸ்பொர்ட் பல்கலைக்கழகம்.

www.tamilarangam.net

சுவிற்சர்லாந்து, பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா (ஒவ்வொன்றிலும் பருமட்டாக 30,000).ஆகிய நாடுகளில் வாழ்கிறார்கள்.[15]

1996ம் ஆண்டுக்கும் 2001ம் ஆண்டுக்கும் இடையில் கனேடிய தமிழ் சமூகமானது 38வீதமாக பெருகியுள்ளதோடு, அந்நாட்டில் மிக வேகமாக பெருகுகின்ற இனத்துவ சனத்தொகையாக கணிப்பிடப்பட்டும் உள்ளது.[16] இக்கனேடிய தமிழர்களின் மிகப் பெரும்பான்மையானோர் டொரன்டோ பிரதேசத்தில் வாழுகின்றனர். இலங்கையிலே இருக்கின்ற எந்த ஒரு நகரத்தை விடவும் பாரிய தமிழ் குடிசனத் தொகையை உடைய நகரமாக ரொரன்டோ உருவாகி இருக்கிறது.

வெளிநாட்டிற்கு குடிபெயர்ந்த தமிழர்கள் குறிப்பாக இலண்டன் டொரன்டோ போன்ற தமிழர்கள் பெருவாரியாக செறிந்து வாழும் பகுதிகளிலேயே குடியேறியதோடு புதிதாக வந்து குடியேறுவோருக்கு வீடுகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் முகவர் நிலையங்கள், தமிழர்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்கள், ஊடகங்கள் கோயில்கள் மற்றும் தேவாலயங்கள், மற்றும் கலாச்சார, அரசியல் சேவைகள் வழங்கும் ஸ்தாபனங்கள் உட்பட அடுக்கடுக்கான பல ஸ்தாபனங்களையும் அமைப்புக்களையும் நிறுவிக் கொண்டனர். தமக்கான நிதி மற்றும் அரசியல் ஆதரவுகளை உறுதிசெய்து கொள்வதற்காக புலிகள் இயக்கமானது மேற்சொன்ன பல அமைப்புக்களையும் தமது ஆதிக்கத்திற்குள் அல்லது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான வழிவகைகளை செய்து அவற்றை கையகப்படுத்திக் கொண்டது. “தமிழ் சமூகத்தினருக்குள் எங்கே எது நடந்தாலும், அதற்குள் தமது நிகழ்ச்சி நிரலை அவர்கள் உறுதிசெய்து விடுவார்கள்” என டொரன்டோவில் வாழும் ஒரு தமிழர் குறிப்பிட்டார்.[17]

புலிகளைப் பொறுத்தவரையில் பெருகிவரும் புலம்பெயர் சமூகமானது அவர்களுக்கான நிதி வளத்தைப் பெறுகின்ற மூலாதாரமாக ஆகியது. இலங்கைப் பாதுகாப்பு படையினரால் மேற்கொள்ளப்பட்ட அத்து மீறல்களால் பாதிக்கப்பட்ட அல்லது அவற்றை நேரடியாக கண்ணுற்ற அனேகமான தமிழர்கள், புலிகள் இயக்கத்தினால் அரசாங்கத்திற்கு எதிராக நடத்தும் யுத்தத்திற்கு ஆதரவாக மிக விருப்பத்துடன் நிதி உதவிகளை செய்கின்றனர். மேற்கத்தேய நாடுகளில் வாழும் தமிழர்களிடையே இலங்கையில் தமிழர்களின் சுயாட்சிக்காக புலிகள் இயக்கம் நடத்தும் போராட்டத்திற்கு பேராதரவு இருக்கின்ற அதே வேளை புலிகளை தமிழ் மக்களினதும் அவர்களின் நலன்களினதும் நியாயபூர்வமான பிரதிநிதிகளாக அவர்கள் காண்கின்றனர். 1990களில், புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து புலிகள் இயக்கத்திற்கு நிலையான ஒரு வருமானம் கிடைக்கப் பெற்றது.

சில நிபுணர்களின் கணிப்புப்படி 1990களின் நடுப்பகுதியாகும் பொழுது, புலிகள் இயக்கத்தின் இராணுவரீதியான வரவு செலவுத் தொகையின் 80-90வீதமான தொகையானது புலம்பெயர் சமூகத்தினரின் நிதி உதவிகள் உட்பட அவர்களின் சர்வதேச ரீதியான வர்த்தகங்கள், முதலீடுகள் ஆகிய இரண்டில் இருந்துமே கிடைக்கப் பெற்றதாக நம்பப்படுகின்றது.[18] அவர்களின் உண்மையான நிதி வருமானத்தை உறுதியாக கணிப்பிட்டு சொல்ல முடியாது. உதாரணமாக 1990ன் பிற்பகுதிகளில் கனேடிய புலம்பெயர்

---

[15] புலம்பெயர் இலங்கைச் சமூகத்தினரின் எண்ணிக்கை பற்றிய கணிப்புகள் மாறுபடலாம். *ஆக்கபூர்வமான முரண்பாடு முகாமைத்துவம்* தொடர்பான பேர்கோ.்.வ் மையத்தினால் செப்டெம்பர் 2004 இல் வெளியிடப்பட்ட, பேர்கோ.்.வ் காலாந்த ஏடு இல. 26. Wolfram Zunzer. *சிவில் முரண்பாடு மாற்ற நிலைகளும் புலம்பெயர் சமூகங்களும்:* வேணுகோபால், *இலங்கைப் பிரைச்சினையின் சர்வதேச பரிமாணம்,* ஆய்வு முன் ஏடு (Working Paper) 2003

[16] Zunzer, புலம்பெயர் சமூகங்கள்..

[17] நொவம்பர் 2005, டொரன்டோ, கனடா, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[18] Peter Chalk எழுதிய, *தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) சர்வதேச ஸ்தாபன வடிவமும் அதன் நடவடிக்கைகளும்*, ஒரு ஆரம்ப ஆய்வு. விவரணம் இல.77, கனேடிய பாதுகாப்பு உளவுப் பிரிவு, 2000 மார்ச்17- என்பவற்றை உதாரணமாக பார்க்கவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சமூகத்தினரிடம் இருந்து புலிகள் இயக்கத்திற்கு போய்ச் சேரும் நிதித் தொகையானது வருடம் ஒன்றுக்கு 1 மில்லியன் கனேடிய டொலரில் இருந்து 12 மில்லியன் வரையான தொகையாக இருக்கலாம் என பல்வேறு தரப்பினர் கணிப்பீடு செய்துள்ளனர்.[19]

புலிகள் இயக்கத்தின் "தியாகிகளை" கௌரவிப்பதற்காக நடத்தப்படும் வருடாந்த மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் உட்பட, இந்து ஆலயங்கள் மற்றும் பகிரங்கமான பொதுமக்கள் கூடும் நிகழ்வுகள் போன்றவற்றிற்கு ஊடாக நிதி சேகரிக்கப்படுதல், போன்ற பல்வேறு வழிகளுக்கு ஊடாக புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பானது நடைபெறுகின்றது. தமிழர்கள் பெருமளவு புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில், தமிழர்களின் நலன்களுக்காக நிதி சேகரிப்பதற்கு என்றே பல்வேறு தர்ம ஸ்தாபனங்கள் தமிழர்களால் நிறுவப்பட்டுள்ளன. உலகத் தமிழர் இயக்கம், பிரித்தானிய தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உட்பட ஏனைய பல அமைப்புக்களும் இதற்குள் அடங்குகின்றன. இத்தர்ம ஸ்தாபனங்களால் சேர்க்கப்பட்ட நிதியானது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிவில் மக்களுக்கு பயன்படுத்துவதற்காக என்று கூறப்பட்டாலும், கனேடிய உளவுப் பிரிவினர் உட்பட ஏனைய பலரின் விசாரணைகளின்படி, சேர்க்கப்பட்ட இந்த நிதியில் மிக கணிசமானதொரு தொகை புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்படுவதாக தெரிய வந்துள்ளது. 2000ம் ஆண்டில் கனேடிய பாதுகாப்பு உளவுப் பிரிவினரின் (CSIS) விசாரணை முடிவுகளின்படி, கனடா நாட்டிற்குள் ஆக குறைந்தது 8 இலாப நோக்கற்ற ஸ்தாபங்களும் ஐந்து கம்பனிகளும் புலிகள் இயக்கத்தின் முன்னணி ஸ்தாபனங்களாக இயங்கி வருகின்றன.[20]

புலிகள் இயக்கமும் அதன் முன்னணி அமைப்புக்களும், வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளில் உள்ள தனிநபர்களையும் நேரடியாக அணுகி தமக்கான நிதி பங்களிப்புக்களை செய்யும்படி கேட்கின்றனர். தமிழர்கள் மிக நெருக்கமாக செறிந்து வாழும் குடியிருப்பு பகுதிகளுக்கு ஞாயிறு தினங்களில் வீடு வீடாக நிதி சேகரிப்பதற்கு சென்ற, 1990ன் பிற்பகுதில் பல வருடங்களாக இலண்டனில் புலிகள் இயக்கத்திற்காக சுய விருப்பில் பணியாற்றிய தமிழர் ஒருவரிடம் மனித உரிமைகள் கண்காணிப்பு குழு கதைத்தது. தமிழ் குடும்பங்கள் நிதி வழங்குவதற்கு அவர்களை இணங்க வைப்பதற்காக இவரும் ஏனைய தன்னார்வ பணியாளர்களும் (VOLUNTEERS) புலிகள் இயக்கத்தின் பத்திரிகைகள் மற்றும் புத்தகங்களை அடிக்கடி அவர்களுக்கு வழங்குவார்கள்.

ஒவ்வொரு மாதமும் புலிகள் இயக்கத்தின் பிராந்திய பொறுப்பாளர் இத்தன்னார்வ பணியாளரைச் சந்தித்து அக்குறிப்பிட்ட மாதத்திற்கு எவ்வளவு நிதி சேகரிக்கப்பட வேண்டும் என்னும் இலக்கினை தமக்கு வழங்குவார், என அம்முன்னாள் பணியாளர் எம்மிடம் கூறினார். என்ன நோக்கத்திற்காக பணம் சேகரிக்கப் படுகின்றது என்னும் விடயங்கள் மிக வெளிப்படையாகவே கூறப்பட்டன. "தாங்கள் பாரிய இராணுவ படையணியை கட்ட வேண்டும், இராணுவ வாகனங்கள் அல்லது ஆயுதங்களை வாங்கவேண்டும், என்றெல்லாம் அவர்கள் சில வேளைகளில் கூறுவார்கள். அவர்கள்

---

[19] உதாரணமாக பார்ப்பதற்கு, Danial Bymen, Peter Chalk, Bruce Hoffman, Willim Rosenau and David Branna: *தீவிரவாத இயக்கங்களுக்கு, வெளியில் இருந்த கிடைக்கும் ஒத்தாசைகள் பற்றிய போக்குகள்,* RAND Corporation அறிக்கை. 2001, பக்.50, [இணையதளம்] hhtp://www.rand.org/pubs/monograph_reports/MR1405/MR1405.ch3.pdf; மேலும் பாரக்க, Stewerd Bell: *இலங்கையின் சிவில் யுத்தமும் அதன் கனேடிய தொடர்புகளும், The National Post (Toronto)*, 2000, June 3 மற்றும் Stewerd Bell: *பயங்கரவாதத்தின் முன்னணி அமைப்புக்களாக இயங்கும் குழுக்கள், The National Post (Toronto),* 2000, டிசம்பர் 9.

[20] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினரிடம் வைக்கப்பட்டிருக்கும் CSIS இன் இரகசிய அறிக்கை.

www.tamilarangam.net

ஆயுதம் வாங்குவது பற்றி வெளிப்படையாகவே பேசினார்கள்.” என இம்முன்னாள் பணியாளர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார்[21]

தனி நபர்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் உட்பட அவர்கள் பற்றிய சகல விபரங்களையும் புலிகள் இயக்கமானது கணணி மூலம் ஆவணப்படுத்தி வைத்துள்ளது. “குடும்பங்கள் எமக்கு நிதி தராவிட்டால், நாங்கள் தொடர்ந்து அவர்களைச் சென்று பார்ப்போம். மீண்டும் அடுத்த மாதம் நாங்கள் வருவோம் என அவர்களிடம் கூறுவோம்.” என இந்த இலண்டன் முன்னாள் தன்னார்வ பணியாளர் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் கூறினார். இவ்வாறு சேர்க்கப்படும் மாதாந்த நிதி தொகைகளுக்கு மேலாக, புலிகள் இயக்கமானது ஒவ்வொரு வருடமும் விசேட திட்டங்களுக்காகவும் பெரும் நிதிச் சேகரிப்பில் ஈடுபடுகின்றது. தமிழ் சமூகத்தின் வர்த்தக நிலையங்களிடம் இருந்து 2.000 பவுண்டுகள் (3,500 அமெ.டொலர்கள்), தமிழ் சமூகத்தின் தனிப்பட்ட அங்கத்தவர்களிடம் இருந்து 200-250 பவுண்டுகள் (350-430 அமெ.டொலர்கள் என்ற அளவில் பெரும் தொகை நிதியையும் புலிகள் இயக்கம் கேட்கின்றது.

தங்களின் தொடர்ச்சியான நிதி வருமானத்தை பேணுவதற்காக, நிரந்திர மாதாந்த பங்களிப்புக்களை வழங்க வேண்டும் என்றும் புலிகள் இயக்கம் தமிழ் சமூகத்தினரை கோருகிறது. இலண்டனில் உள்ள புலிகள் இயக்கத்தின் காரியாலயத்தை நடாத்துவதற்காக, 1990களின் பிற்பகுதியில் இலண்டனில் பருமட்டாக 1,000 தனிநபர்கள் 10, 20 அல்லது 30 பவுண்டுகளை மாதாந்த நிரந்தர பங்களிப்பாக செலுத்தி உள்ளனர்.[22] இவ்வாறான மாதாந்த நிரந்தர பங்களிப்புக்கான இணக்கங்கள், கனடா உட்பட ஏனைய நாடுகளிலும் ஊக்குவிக்கப் பட்டுள்ளன. 2000ங்களின் முற்பகுதியில் டொரன்டோவில் வாழ்ந்த தமிழர்கள் தமது மாதாந்த இணக்கப் பங்களிப்புத் தொகையானது இயல்பாகவே தமது வங்கி கணக்குகளில் இருந்து மாற்றப்படுவதற்கு ஏற்ற வகையில் அனுமதி வழங்கும் படிவங்களை நிரப்பி கையளிக்கின்ற அளவிற்கு இந்நிதி சேகரிப்பு முறைமையானது, மிக நவீன மயமாக்கப்பட்டது. இவ்வாறாக வங்கிக் கணக்குகளில் இருந்து இயல்பாகவே புலிகள் இயக்கத்திற்கு நிதிப் பங்களிப்புச் செய்கின்ற முறையை ஏற்படுத்தியதன் மூலம் தமிழர்களின் வீடுகளுக்கு நிதி சேகரிப்பதற்கென தன்னார்வ பணியாளர்கள் தொடர்ச்சியாக செல்வது குறைக்கப்பட்டது.

கனடா இங்கிலாந்து மற்றும் ஏனைய நாடுகளில், அந்நாடுகளுக்கு புதிதாக வந்து இறங்குவோர் உட்பட தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்கள் பற்றி சகல தகவல்களையும், தமது ஆதரவாளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் தகவல்களையும், மற்றும் தகவல்கள் பகிரங்க ஆவணங்களில் இருந்து எடுக்கப்பட்டும் சேகரிக்கப்பட்டு, கணணிமூல விபரக் கோப்புக்களுக்கு ஊடாக (Computer Data base) புலிகள் இயக்கம் பயன்படுத்துகின்றது. டொரன்டோவைச் சேர்ந்த ஒரு பெண் மூன்று முறை டொரன்டோவிற்கு உள்ளேயே இடம் மாறினார். “ஒவ்வொரு முறையும் ஓரிரண்டு மாதங்களுக்கு உள்ளாகவே அவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து விடுவார்கள். ஒரு முறை நான் இடம்மாறி இரண்டு வாரங்களுக்குள்ளேயே அவர்கள் வந்துவிட்டனர்”.[23]

2001ம் ஆண்டு பிரித்தானிய அரசாங்கம் புலிகள் இயக்கத்தை ஓர் பயங்கரவாத இயக்கமாக உத்தியோக பூர்வமாக அறிவித்து தடை செய்த பின்னர், இலண்டனில் அமைந்திருந்த புலிகள் இயக்கத்தின் காரியாலயம் மூடப்பட வேண்டியதாயிற்று.[24] 2001ம்

---

[21] 2005 நவம்பர் 30, இங்கிலாந்து, இலண்டனில் புலிகள் இயக்கத்தின் முன்னாள் தன்னார்வ முன்னாள் பணியாளர் ஒருவருடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[22] Ibid

[23] 2005 நவம்பர்12, டொரன்டோ, கனடா. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்

[24] 2000ம் ஆண்டு பிரித்தானிய பயங்கரவாதச் சட்டத்தின் (பகுதி II, 3 (5)) கீழ், பயங்கரவாத நடவடிக்கைகளைச் செய்கின்ற, அதில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளுகின்ற, பயங்கரவாதத்திற்கு வழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆண்டு செப்டம்பர் 11ம் திகதி நியூ யோர்க் மற்றும் வாஷிங்டன் டி.சி ஆகிய இடங்களில் அல் கைதா இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை தொடர்ந்து உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையின் முன்னெடுப்புக்களால், புலிகள் இயக்கம் அல்லது அதன் முன்னணி அமைப்புக்களுக்கு நிதி உதவி செய்வதற்கு பல தனிநபர்கள் தயக்கம் காண்பித்தனர். இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையே 2002ம் ஆண்டு பெப்ரவரியில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதானது தமிழர்கள் நிதி பங்களிப்புச் செய்யும் வீதாசாரத்தை பாதித்தது. இலங்கையில் கடுமையான மோதல் நிலமை இடைநிறுத்தப் பட்டதனால், அநேகமான புலம்பெயர் தமிழ் சமூகத்தினருக்கு புலிகள் இயக்கத்திற்கு நிதிப் பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லாமல் போனது..[25] தனிநபர்கள் நிதிப் பங்களிப்புச் செய்வதில் தயக்கம் காட்டும் போக்கு அதிகரித்ததன் காரணமாக புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பு நடவடிக்கையானது மேலும் உக்கிரப்படுத்தப்பட்டதாக சில தகவல்கள் கூறுகின்றன.[26]

## III. பீதி தரும் கலாச்சாரம்: புலிகள் இயக்கத்தின் வன்முறைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் நெருக்குவாரங்கள்.

*இலங்கையில் ஒரு பிரபல தமிழ் நபராக இருப்பதைப் போன்று பீதி தரக்கூடியது வேறு எதுவும் இல்லை. -நீங்கள் ஒரு ஆசிரியரோ, ஒரு பாடசாலை அதிபரோ, ஒரு வைத்தியரோ, ஒரு ஊடகவியலாளரோ, ஒரு அரசியல்வாதியோ அல்லது ஒரு வெற்றிகரமான வர்த்தகராகவோ இருக்கலாம். எந்தவித அநாவசிய அசைவுகளையும் காட்டாது, தங்களின் அயலவர்கள் செய்வது போலவே தாங்களும் தலையைக் குனிந்து கொண்டு மௌனமாக இருப்பதற்கு சாதாரண தமிழர்கள் கற்றுக்கொண்டு உள்ளனர். அவர்கள் கற்றுக்கொண்ட விடயமானது டொரன்டோ, இலண்டன், மற்றும் பாரிஸ் போன்ற இடங்களுக்கும் அவர்களுடன் கூடவே பயணித்து இருக்கிறது. ஏனெனில் இவ் எல்லா இடங்களிலும் உள்ள சமூக அமைப்புக்கள் மற்றும் 1980களில் இருந்து நடத்தப்படும் அகதிகளுக்கான நிவாரண அமைப்புக்கள், பத்திரிகைகள், கடைகள் மற்றும் கோயில்கள் என எல்லாவற்றையும் புலிகள் இயக்கமும் அவர்களின் ஆதரவாளர்களும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து அவற்றை கையாளுகின்றனர். ஒரு சில கொலைகள், சில அச்சுறுத்தல்கள், சில சேறடிப்பு பிரச்சாரங்கள் என்பவற்றின் மூலம் அதே பாடம்தான் மீண்டும் உறுதியாக்கப்படுகின்றது..*

- இலங்கை தொடர்பான ஒரு நிபுணர்[27]

புலிகள் இயக்கத்தின் வன்முறை வரலாறானது இலங்கையிலும் மற்றும் மேற்கு உலக நாடுகளிலும் புலம் பெயர்ந்துவாழும் சமூகத்தினரிடையே ஒருவித பீதி தரும் கலாச்சாரத்தை உருவாக்கி உள்ளது. மாறுபட்ட நடவடிக்கைகள், மறுப்பான கருத்து வெளியீடுகள் மற்றும் இயல்பான சமூக நடவடிக்கைகள் கூட புலிகளுக்கு எதிரான

---

சமைக்கின்ற, பயங்கர வாதத்தை ஊக்குவிக்கின்ற அல்லது அதரவு தருகின்ற மற்றும் பயங்கரவாதத்தில் அக்கறை காட்டுகின்ற ஸ்தாபனங்கள் தடை செய்யப்படலாம். பிரத்தானிய அரசாங்கம் பட்டியலிட்டு தடை செய்த 21 அமைப்புக்களுள்' புலிகள் இயக்கமும் அடங்குகின்றது. உள்நாட்டு விவகார செயலாளர், 2001 பெப்ரவரி. 2000ம் ஆண்டு பயங்கரவாதச் சட்ட ஆணை 2001(அமைப்புக்களைத் தடை செய்தல்) (திருத்தம்) மார்ச்,29 அமுலுக்கு வந்தது.

[25] 2005 ஒக்டோபரிலும், 2006 பெப்ரவரியிலும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்கள்.

[26] புலிகள் இயக்கத்திற்கு நிதிப் பங்களிப்புச் செய்ய மறுத்தற்காக வன்முறை ரீதியான தாக்குதல்களுக்கும் மரண அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத்த மற்றும் தமது ஜீவனோபாயத்தை இழந்த தமிழ்ச் சமூகத்தை சேர்ந்த பல அங்கத்தவர்களிடம் இருந்து 2002ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது விபரமான வாக்கு மூலங்களை பெற்றுக்கொண்டுள்ளது.

[27] 2006 பெப்ரவரியில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு கிடைத்த மின் அஞ்சல் தகவலில் இருந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விமர்சனங்களாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தமிழ் சமூகத்தில் பெரும்பாலானோர் இலங்கையின் வட கிழக்கில் நிகழும் சம்பவங்களை உன்னிப்பாக கவனித்து வருகிறார்கள். இதன் பிரகாரம் யுத்த காலங்களில் மட்டுமல்ல யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த கடந்த நான்கு வருட காலப் பகுதிகளில் புலிகள் தமக்கு எதிரானவர்கள் எனக் கருதுபவர்களை திட்டமிட்டு அழித்து வருகிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே மேலே குறிப்பிட்டபடி, யுத்த நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து, அரசியல் காரணங்களுக்காகவே 200 பேர் மட்டிலான தமிழர்கள், பிரதானமாக புலிகள் இயக்கத்தின் கரங்களினால் கொல்லப் பட்டிருக்கிறார்கள். அவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள், எதிரான அரசியல் கட்சிகளோடு தொடர்புடையவர்கள், மற்றும் புலிகள் இயக்கத்தினை விமர்சிப்பவர்களாக கருதப்பட்டோர் எனப் பலரும் உள்ளடங்குவர். அவர்களில் சிலர், அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படுகின்ற சமய, சமூக மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் பணியாற்றினார்கள் என்கின்ற ஒரே காரணத்திற்காகவே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இலங்கையில் தமது குடும்ப அங்கத்தவர்கள் எஞ்சியுள்ள, மேற்கத்தேய நாடுகளில் வாழும் அனேகமான தமிழர்களுக்கு, புலிகள் இயக்கத்திற்கு விசுவாசம் இல்லாத வகையில் மேற்கொள்ளும் எந்த ஒரு சிறு நடவடிக்கைக்கும் மரணமே பதிலாக கிடைக்கும், என்ற செய்தியே கொடுக்கப்படுகின்றது.

மேற்கத்தய நாடுகளில் வாழும் தமிழர்கள், தாங்கள் மாற்றுக் கருத்துக்களை கொண்டிருப்பதற்காகவே மரண அச்சுறுத்தல்கள், உடல் ரீதியாக தாக்கப்படுதல், சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், சேறடிப்பு பிரச்சாரங்கள், இட்டுக்கட்டப்பட்ட கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் கொலை செய்யப்படுதல் என்பவற்றுக்கு முகம் கொடுக்கின்றனர். ஒப்பீட்டளவில் உண்மையான வன்முறைச் சம்பவங்கள் குறைவாக இருந்தாலும், இவ்வாறான நடவடிக்கைகள் சமூகத்துள் பரவலாக எதிரொலிப்பதானது மற்றவர்கள் புலிகளுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட மிகுந்த தயக்கத்தை ஏற்படுத்துகிறது.

2005ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஜேர்மனியில் வாழ்ந்த தமிழராகிய வைத்தியநாதன் லோகனாதன் என்பவர், யாழ்ப்பாணத்தில் பிரபலமானதும் ஒரு பெரிய பாடசாலையுமான யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரை நினைவு கூருவதற்கான நிகழ்ச்சி ஒன்றை, டசில்டோ∴ப் (Dusseldorf) நகரில் ஜேர்மனியில் வாழும் ஏனைய பல தமிழர்களுடன் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தமைக்காக மிக கடுமையாக தாக்கப்பட்டார். புலிகள் இயக்கத்தினால் சிறார்களை படைகளில் சேர்க்கும் நடவடிக்கைக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்ட அதிபர் கனகபதி இராசதுரை, 2005ம் ஆண்டு ஒக்டோபர் 12ம் திகதி அவரது பாடசாலைக்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். ஜேர்மனியில் அவ் நினைவுகூரல் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தவர்கள் அனைவருமே அப் பாடசாலையின் முன்னாள் மாணவர்களாவர். லோகனாதனும் 1979-1982ம் ஆண்டு வரையில் அங்கு கல்வி கற்பித்துள்ளார்.[28]

இந்நினைவுகூரல் நிகழ்ச்சியை நடத்துவதற்கு முன்னரே, லோகனாதனுடன் சேர்ந்து செயற்பட்ட ஏனைய பல அமைப்பாளர்களுக்கும் தினமும் 5அல்லது 6 அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. நிகழ்ச்சி நடக்கின்ற இடத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படலாம் என அச்சமடைந்த அமைப்பாளர்கள், உள்ளூர் போலீசாரை அணுகினர். பொலிசார், சீருடை அணியாத சில அதிகாரிகளை அங்கு நிலமையை கண்காணிப்பதற்காக அனுப்பி வைத்தனர்.

[28] 2006 ஜனவரி 23ம் திகதி, ஜெர்மனி டசில்டோ∴பில் உள்ள வி.லோகனாதனுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி மூலம் நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய லோகனாதன் இராஜதுரையை கௌரவித்து அஞ்சலி செலுத்தினார். அக் கொலைக்கு பொறுப்பானவர்களை அவர் கண்டித்தாராயினும், இக்கொலைக்கு குறிப்பானதொரு குழுவை அவர் குற்றம் சாட்டவில்லை ஆனால் அந்நிகழ்வில் பங்குபற்றிய வேறு ஒரு பேச்சாளர் புலிகள் இயக்கமே இக்கொலைக்கு பொறுப்பானவர்கள் என்று குற்றம் சாட்டிப் பேசினார்.

நிகழ்வு எவ்வித பிரச்சினைகளுமின்றி சுமூகமாக நிகழ்ந்து முடிந்தாலும், அதன் பின்னரும் லோகநாதனின் சக அமைப்பாளருக்கு தொடர்ச்சியாக அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்கள் வந்த வண்ணம் இருந்தன. நிகழ்வு நடந்து முடிந்து ஒரு வாரகாலத்தின் பின்னர் நவம்பர் 12ம் திகதி எசன் (Essen) என்னும் பகுதியில் உள்ள கடையொன்றில் வேலைக்குச் சென்றிருந்த தனது மனைவியை அழைத்து வருவதற்காக சென்ற வேளையில் லோகனாதன் தாக்கப்பட்டார். அவரை பின்புறமாக இருந்து தாக்கிய இரு நபர்கள், அவரைக் கீழே தள்ளி விழுத்தி அவரின் தலையில் கண்ணாடிப் போத்தல்களால் பல முறை தாக்கியுள்ளனர். மூன்றாவது நபர் இரும்பு பொல்லு ஒன்றினால் அவரின் கால்களின் மீது அடித்து உள்ளார். தாக்குதலை நடத்தியவர்கள் அவரிடம் இருந்த பணத்தையோ வேறு எந்த பெறுமதியான பொருட்களையோ எடுத்துச் செல்ல முற்படவில்லை. அருகே இருந்த உணவுச் சாலை ஒன்றின் நபர்கள் சத்தமிட்டதாலும், போலீசாரை அழைத்ததினாலும் தாக்குதலை நடத்தியவர்கள் ஓடி விட்டார்கள்.

லோகநாதனுக்கு அவரது வலது காலில் இரண்டு இடங்களில் முறிவு கண்டிருந்ததோடு, அவர் பல பற்களையும் இழந்திருந்தார். அவரது தலையில் 13 தையல்கள் போடவேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. அவர் மூன்று நாட்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டிருந்ததோடு அவருக்கு உடல் ரீதியான மிகத் தீவிரமான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட வேண்டியிருந்தது. தாக்குதலின் பின் இரண்டு மாதகாலம் கழிந்தும் அவர் இன்னும் தொழிலுக்கு திரும்ப முடியாத நிலைமை உள்ளது. “தாக்குதல் நடந்த அன்றைய தினம், அதனைக் கண்ட அக்கம் பக்கத்தில் இருந்த மக்கள் உதவிக்கு குரல் கொடுக்காது விட்டிருந்தால், அன்றைய தினம் நான் இறந்துகூட போயிருக்கலாம்.”[29] என்று அவர் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார்.

சாட்சியங்கள் விபரித்ததன்படி இத் தாக்குதலை மேற்கொண்டவர்களில் இருவர் வெள்ளை நிறமான ஆண்கள் என்றும் மற்றுமொருவர் கரு நிறமான ஆணுமாவர். இத்தாக்குதல் நடந்த சில நாட்களின் பின்னர், புலிகள் இயக்கத்திற்கு சார்பான “அந்நியன் படை” என தம்மை இனங்காட்டிய குழுவொன்று இத்தாக்குதலுக்கு தாமே பொறுப்பு என்று தொலைபேசி மூலம் தமக்கு அறிவித்திருந்ததாக, புலிகள் இயக்கத்தோடு தொடர்புள்ள தமிழ் இணையத் தளமான, *Webeelam.com* ஆனது தெரிவித்தது. அந்த இணையத் தளத்தின் கூற்றுப்படி, தொலைபேசியில் அழைத்தவர்கள், “நாங்கள் ஏற்கனவே லோகநாதனுக்கு ஒரு பாடம் புகட்டிவிட்டோம், அடுத்த நபராக நாம் இலக்கு வைத்திருப்பது பெண்ணொருவரையே.” என்றும் கூறியுள்ளனர்.[30]

தாக்குதல் நடந்து இரு மாதங்களின் பின்னர் எம்மோடு பேசுகின்ற பொழுது, லோகனாதன் பின்வருமாறு கூறினார்,

> கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாகவே, இதுபோன்ற பல தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. குறிப்பாக புலிகள் இயக்கத்திற்கு எதிராக விமர்சனங்களை முன்வைப்பவர்கள், அல்லது புலிகள் இயக்கத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைக்க முயல்பவர்களுக்கு

---

[29] Ibid

[30] அந்நியன் படை மீண்டும் எச்சரிக்கிறது!! 2005 நவம்பர், 16, http://www.webeelam.com

www.tamilarangam.net

> எதிராகவே பிரதானமாக இவை நிகழ்கின்றன........... ஆகவே முக்கியமாக, சமூகத்தை மௌனமாக்கி வைத்திருப்பதற்காக இதுபோன்ற தாக்குதல்கள் அடிக்கடி நிகழ்கின்றன.
>
> எனது தலைக்கு மேல் மரண அச்சுறுத்தல் என்பது எப்போதும் தொங்கிக் கொண்டிருப்பதால், அச்சம் என்பது எப்போதும் இருக்கத்தான் செய்கிறது. இது வெறுமனே ஒரு நினைவுகூரல் கூட்டம்தான். எனது கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை, நான் என்னை வெளிப்படுத்துகின்ற உரிமையை நான் விட்டுக்கொடுக்க முடியாது. உதாரணமாக, தற்போது நான் வானொலியின் மூலம் எனது கருத்தை வெளியிடலாம், அல்லது நான் ஒரு கலாச்சார நிகழ்வில் பேசலாம். அது அவர்களுக்கு (புலிகள் இயக்கத்திற்கு) எதிரான விடயமாக கருதப்படலாம். ............ ஆகவே இங்கு இன்னும் ஒரு தாக்குதலுக்கான அச்சம் கூடவே வியாபித்து இருக்கிறது.[31]

புலிகளை விமர்சிக்கின்ற வகையிலான தகவல்களை அச்சிட்டு வெளியிடுவது அல்லது ஒலிபரப்புவது போன்றவை, பாரிய பின்விளைவுகளை கொண்டுவரும் என புலம்பெயர் பத்திரிகையாளர்கள் அறிந்து வைத்திருக்கின்றனர். இலங்கையில் நடக்கின்ற சம்பவங்களுடன் தொடர்புபட்ட செய்திகளையும் கட்டுரைகளையும் மேற்கு நாடுகளில் வாழும் சமூகத்தினருக்கு என்று வழங்கி வந்த சுதந்திரமான வாராந்த தமிழ் பத்திரிகை 'மஞ்சரி'யை, பிரபல தமிழ் பத்திரிகையாளரான டீ.பீ.எஸ், ஜெயராஜ், 1990களின் நடுப்பகுதியில் டொரண்டோவில் அச்சிட்டு வெளியிட்டார். இலங்கையில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் இலங்கை இராணுவத்தினர் முன்னேற்றம் கண்டபொழுது ஏனைய தமிழ் பத்திரிகைகள் இராணுவ நடவடிக்கைகள் பற்றி புலிகளுக்கு சாதகமான செய்திகளை வெளியிட்ட வேளையில் மஞ்சரி பத்திரிகையானது புலிகள் இயக்கத்திற்கு ஏற்பட்ட பின்னடைவுகளைப் பற்றி செய்திகளை வெளியிட்டது. இவ்வாறான செய்திகளை அவர் வெளியிட்டதன் பலனாக, நாளாந்தம் மிகத் திட்டமிட்ட வகையில் ஜெயராஜிற்கு அச்சுறுத்தலான தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. 1995 நவம்பர் மாதத்தில் ஒரு நாள் மட்டும் அவருக்கு எதிராக வசைபாடும், 37 தொலைபேசி அழைப்புக்கள் வந்தன.

அவர் தொடர்ச்சியாக புலிகளுக்கு ஏற்பட்ட பின்னடைவுகள் தொடர்பாக விமர்சன ரீதியாக செய்திகளை வெளியிட்ட பொழுது, ஜெயராஜின் பத்திரிகைகளுக்கு விளம்பரங்களை வழங்கியவர்கள் மற்றும் அவரின் பத்திரிகைகளை விநியோகித்த கடைகளையும் புலிசார்பு செயல்பாட்டாளர்கள் குறிவைக்கத் தொடங்கினர். ஒரு கட்டத்தில் புலிகள் இயக்கத்திற்கு சார்பான இந்த நபர்கள், ஜெயராஜின் பத்திரிகைகளை விநியோகித்த 10, 15 கடைகளுக்கு சென்று அவரின் பத்திரிகைப் பிரதிகளை பறிமுதல் செய்து அவற்றை குப்பைத் தொட்டிக்குள் வீசினர். விளம்பரங்களினால் பெற்ற வருமானத்தையும் பத்திரிகைக்கான விநியோகத்தையும் இழக்க நேர்ந்ததால், 1995துடன் தனது பத்திரிகை வெளியிடுவதை நிறுத்தும் நிலைக்கு ஜெயராஜ் தள்ளப்பட்டார்.[32]

---

[31] 2006 ஜனவரி 23ம் திகதி, ஜேர்மனி டசில்டோ∴பில் உள்ள வி.லோகனாதனுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி மூலம் நடத்திய நேர்காணல்.

[32] ஒரு பத்திரிகையின் மரணம் என்ற தலைப்பில், மஞ்சரி பத்திரிகையின் வெளியீட்டை இடைநிறுத்துவதற்கு தான் எடுத்த முடிவு தொடர்பாக 1996, ஏப்பிரல் 7ம் திகதி, *Sunday Times (London)* பத்திரிகைக்கு டீ.பீ,எஸ். ஜெயராஜ் எழுதிய பகிரங்க கடிதத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளைப் பார்க்க. www.sinhaya.com/newspaper_death.html என்னும் இணையத்தளத்தில் 1996,ஏப்ரல் 7ல் மீள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. 2006, பெப்ரவரி10 இல் (மீளழைக்கப்பட்டது). மேலும் பார்க்க: கனேடிய பாதுகாப்பு புலனாய்வுச் சேவை, சர்வதேச பயங்கரவாதம்: கனேடியர்களுக்கு அச்சுறுத்தல், *RCMP Gazette,* Vol 63, NO.6.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

1993ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில், தனது மனைவியோடு ஓர் திரைப்படம் பார்த்துவிட்டு வெளியே வந்த ஜெயராஜ் வாகனத் தரிப்பிடத்தில் வைத்து நான்கு நபர்களால் தாக்கப்பட்ட சம்பவமானது தமிழ் சமூகத்தினரிடையே பரவலாக அறியப்பட்ட சம்பவமாக இருந்தது. தாக்குதலை மேற்கொண்டவர்கள் பேஸ் போல் மட்டைகளால் ஜெயராஜைத் தாக்கி அவரின் இரு கால்களையும் முறித்தார்கள். இச் சம்பவம் தொடர்பாக பொலீசாரிடம் அவர் முறைப்பாடு செய்திருந்தாலும், அவரை தாக்கியவர்களின் அடையாளங்கள் பற்றிய தகவல்கள் ஜெயராஜிடம் இருந்தாலும், இக்குற்றச் செயல் தொடர்பாக இதுவரையும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இத்தாக்குதல் நடந்து 13 வருடங்கள் சென்றுவிட்ட நிலையிலும்கூட, மேற்கு நாடுகளில் இருந்துகொண்டு தமிழ் ஊடக துறையில் ஈடுபடுவது தொடர்பாக, ஒருவித பயப்பிராந்தியே மேற்கு நாட்டில் இருக்கும் ஊடகவியலாளர்களை தொடர்கிறது. புலிகளின் அத்துமீறல் தொடர்பாக எழுதும்படி ஊடகவியலாளர்கள் ஊக்குவிக்கப்படும் பொழுது "ஜெயராஜின் கதிக்கு நானும் ஆளாகுவதை நீங்கள் விரும்புகிறீர்களா" என அவர்கள் பதில் அளிக்கின்றனர். புலிகள் இயக்கத்திற்கு சவால் விடக்கூடிய கருத்துக்களை வெளியிடுவதற்கு தயங்குவதற்கான ஒரு காரணமாக மாற்றுக் கருத்துக்கொண்ட தமிழ் சமூகத்தை சேர்ந்த அங்கத்தவர்கள் ஜெயராஜிற்கு ஏற்பட்ட அனுபவத்தையே குறிப்பிட்டு காட்டுகின்றனர்.[33]

1994ம் ஆண்டு, பாரிசில் சபாரட்ணம் சபாலிங்கம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமும் தமிழர்கள் அடிக்கடி கவனத்தில் எடுத்துக் கொள்ளும் ஒன்றாகும். தனது குடும்பத்தவர்களின் கண் முன்னாலேயே மரண தண்டனை வழங்கப்படுகின்ற பாணியில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். புலிகள் இயக்க தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் தனக்கிருந்த தொடர்புகளை அடிப்படையாக வைத்து, புலிகள் இயக்கத்திற்கு எதிரான ஒரு புத்தகத்தை வெளியிடுவதற்கான பணிகளை சபாலிங்கம் மேற்கொண்டிருந்ததாக சொல்லப்படுகிறது. இக்கொலைகளை செய்தவர்கள் என சந்தேகிக்கப் பட்டவர்கள் நன்கு பயிற்றப்பட்ட இரு புலி இயக்க ஆயுததாரிகள் என்று இனங் காணப்பட்டாலும், அதை நேரடியாக உறுதிப்படுத்த சாட்சிகள் முன்வராத நிலையில் இந்த நபர்கள் ஒரு காலமும் தண்டனைக்கு உள்ளாக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.[34]

சுதந்திரமான தமிழ் ஊடகவியலாளருக்கான அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. புலிகள் இயக்கத்தை விமர்சிக்கும் வகையிலான கட்டுரைகளை எழுதுபவர்களை கைவிடும்படி பத்திரிகை உரிமையாளருக்கு தொடர்ச்சியான அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன.[35] தமக்கு அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்கள் வருவதாக தனிப்பட்ட ஊடகவியலாளர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர். "உன்னுடைய பத்திரிகைக்கூடாக புலிகள் இயக்கத்தின் குறிக்கோளை நீ ஆதரிக்கவில்லை என்றால், நாங்கள் உன்னை கவனித்துக் கொள்ளுவோம்" என புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர் ஒருவர் தமிழ் பத்திரிகையாளர் ஒருவரிடம் கூறியுள்ளார்.[36]

2005ம் ஆண்டு ஒக்டோபரில், மேற்கு அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தில் நீதித்துறை விரிவுரையாளரும் அரசியல் பத்தி எழுத்தாளருமான செல்லையா நாகராஜா என்பவருக்கு எதிராக, அவுஸ்திரேலியாவில் உள்ள புலிகள் இயக்கத்தோடு தொடர்பான குழு ஒன்று மரண அச்சுறுத்தல் விடுத்தது . புலிகள் இயக்கத்திற்கு எதிராக எழுதுவதை நாகராஜா நிறுத்த வேண்டும் என எச்சரித்து, "இது எமது இறுதி எச்சரிக்கை" என்று குறிப்பிடப்பட்ட

---

[33] 2006, ஜனவரி கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[34] 2001, ஜுன் 6, National Post :கனேடியர்களுக்கு அச்சுறுத்தல், Stward Bell, என்பதைப் பார்க்க.
[35] 2005, நவம்பர் 2006, ஜனவரி, கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[36] 2005, நவம்பர், கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

www.tamilarangam.net

துண்டுப் பிரசுரங்களை, எல்லாளன் படை என்னும் குழுவானது மெல்போர்னில் உள்ள இந்து ஆலயமொன்றில் வைத்து விநியோகித்தது.[37] அதே மாதம் நாகராஜாவிற்கு கிடைக்கப் பெற்ற எச்சரிக்கைக் கடிதத்தில், "உன்னுடைய எழுத்து உன்னை மரணத்தில்தான் கொண்டு போய்விடும். துரோகிகளைக் களையெடுப்பதற்கான காலம் இதுதான். வெகு விரைவில் உனது மரணத்தைப்பற்றி தமிழ் சமூகமும் உனது நண்பர்களும் தெரிந்து கொள்ளுவார்கள். மற்றைய துரோகிகளுக்கும் இது ஒரு பாடமாக இருக்கும்". என்று எழுதப்பட்டிருந்தது.[38]

இலண்டனில் இருந்து இயங்கும் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (TBC) என்னும் வானொலியும் அங்கு சுயவிருப்பில் பணியாற்றுபவர்களும் குறிப்பான இலக்குகளாக்கப் பட்டுள்ளனர். TBCயானது, புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அத்துமீறல் செயற்பாடுகள் தொடர்பாக தொடாச்சியாக நிகழச்சிகளை ஒலிபரப்புச் செய்கின்ற, சுதந்திரமானதொரு வானொலியாகும். TBC வானொலியின் நிகழ்ச்சிப் பணிப்பாளர் வீ.ராமராஜ், தொடாச்சியாக மரண அச்சறுத்தல்களைப் பெற்றுள்ளதோடு, அந்நிலையத்தில் கடமையாற்றும் தன்னார்வப் பணியாளர்களும்கூட அச்சுத்தல் மற்றும் அவதூறு நிறைந்த தொலைபேசி அழைப்புக்களை கிரமமாகப் பெறுகின்றனர்.

TBC வானொலி வாராந்தம் நடத்துகின்ற நிகழ்ச்சி ஒன்றில் சுய விருப்பில் பங்குபற்றிய ஒருவர் 2005 நவம்பர் மாதத்தில் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் பின்வருமாறு கூறினார். "TBC வானொலிக்கு நான் உதவி செய்ய ஆரம்பித்த உடனேயே எனக்கு தொலைபேசி அழைப்புக்கள் வர ஆரம்பித்தன. அவர்கள் எனது மனைவியை அச்சுறுத்தினார்கள், நான் TBC வானொலிக்கு உதவி செய்வதை நிறுத்த வேண்டும் எனவும், TBC வானொலியானது துரோகிகளின் வானொலி என்றும் அவர்கள் என் மனைவியிடம் கூறினார்கள். அவர் இலங்கையில் வட பகுதிக்கு திரும்பிப் போனால் அங்கு எனக்கு பாதிப்பு ஏற்படும் எனவும் சில தொலைபேசி அழைப்புக்களில் அச்சுறுத்தல் விடப்பட்டதாக அவர் கூறினார். 2005ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தொலை பேசியில் தன்னை அழைத்த ஒருவர், "அவர்கள் உன்னை சிறையில் அடைப்பார்கள், நீ ஒரு துரோகி, நீ கொல்லப்படுவாய்." என்று கூறியதாகவும், அவர் எம்மிடம் கூறினார்.[39] 2005 பிற்பகுதியில் அதே பணியாளரின் மனைவிக்கு கிடைக்கப் பெற்ற மின்னஞ்சல் செய்தியில், அவளுடைய கணவர் TBC வானொலிக்கு செல்வதை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. "உனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றன, உனது கணவரை அதில் இருந்து விலத்தச்சொல். அல்லது நீ விதவையாக நேரிடும்." என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.[40]

2004 ஜூலை மாதம் TBC வானொலி நிலையம் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும், என தொலைபேசியில் ஒருவர் எச்சரிக்கை விடுத்தார். 2005 மே மாதம் இலண்டனில் உள்ள TBC காரியாலத்திற்குள் உடைத்துக்கொண்டு அத்துமீறி நுழைந்தவர்கள் அதன் சொத்துக்களை சேதப் படுத்தியதோடு ஒலிபரப்பு கருவிகளையும் கொள்ளையிட்டுச் சென்றனர். இலண்டன் நகரப் பொலீசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தியபோதும், இக்குற்றச் செயல்கள் தொடர்பாக இதுவரை எவரும் தண்டிக்கப்படவில்லை.

---

[37] செல்லையா நாகராஜாவின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் அச்சுறுத்தல்:Asian Tribune, 2005, அக்டோபர் 4. [இணையதளம்] www.asiantribune.com/show_news.php?id=15774 (மீளழைக்கப்பட்டது, 2006 பெப்ரவரி,10).
[38] இக்கடிதத்தின் ஒரு பிரதி மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்பின் கோப்பில் வைக்கப்பட்டுள்ளது.
[39] 2005 நவம்பர், இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[40] Ibid



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

TBCயானது, தமிழ் சமூகத்தில் இருந்து கிடைக்கப்பெறும் சுய விருப்பிலான பங்களிப்புக்களின் மூலமே முற்றும் முழுதாக நடத்தப்படுகின்றது. அங்குள்ள பிரதிநிதி ஒருவர் எம்மிடம் கருத்துக் கூறுகின்ற பொழுது "நாங்கள் வர்த்தக ரீதியில் இதை நடத்த முடியாது. மக்கள் எம்மிடம் விளம்பரம் செய்தால் அவர்கள் இடைஞ்சலுக்கு உள்ளாக்கப் படுவார்கள், அவர்களின் வீடுகளுக்கு நபர்கள் செல்லுவார்கள். ஆகவே எங்களால் வர்த்தக விளம்பரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது." என்று சொன்னார்.[41]

கனடாவிலும் இங்கிலாந்திலும் புலிகள் இயக்கத்தின் அத்துமீறல்களுக்கு எதிராக வெளிப்படையாக பேசுபவர்கள், அல்லது புலிகள் இயக்கத்தை தவிர்த்து சுதந்திரமான நிகழ்வுகளை ஒழுங்கு செய்யும் செயற்பாட்டாளர்கள், சேறடிப்பு பிரச்சாரங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். நாம் மேலே குறிப்பிட்ட, TBC வானொலியில் பணியாற்றும் அதே நபர் எம்மிடம் கூறும் பொழுது, தான் இந்திய இரகசிய புலனாய்வுப் பிரிவினரிடம் இருந்து பணம் பெற்றுக் கொள்வதாக, தனக்கு எதிரான வதந்திகள் தமிழ் சமூகத்தினரிடையே பரப்பி விடப்பட்டுள்ளதை, 2005ம் ஆண்டு பிற்பகுதியில் நடந்த ஒரு சமூக நிகழ்வில் வைத்து, தான் அறிந்து கொண்டதாக கூறினார். அவர் மேலும் கூறுகையில், "அவர்கள் என்னைப் பற்றி இலண்டன் முழுவதும் கதைத்துத் திரிகிறார்கள். நான் ஒரு துரோகி என்று கதைகளைப் பரப்புகிறார்கள். நியாயமான உண்மைகள் வெளிக் கொண்டுவரப்படல் வேண்டும் என்பதற்காகவே TBCக்கு நான் உதவி செய்ய வந்தேன். ஆனால் அவர்கள், நான் ஏதோ தவறானதை செய்வதுபோல் படம்போட்டுக் காண்பிக்க முயற்சிக்கின்றனர்."[42] என்றார். இங்கிலாந்தில் வசிக்கும் வழக்கறிஞரான செய்யத் பசீர் என்பவர், புலிகள் இயக்கத்தினால் கிழக்கு இலங்கையில் முஸ்லீம்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்பாக பகிரங்கமாக பேசியதற்காக, அல் கைதா இயக்கத்தோடு அவருக்கு தொடர்பு இருப்பதாக, புலிகள் இயக்கத்தோடு மிக நெருக்கமாக தொடர்பைக் கொண்ட இணையதளம் ஒன்று, 2005ம் ஆண்டு டிசம்பரில், அவரைக் குற்றம் சாட்டியது. பசீர் ஓர் தமிழ் பேசுகின்ற முஸ்லீம் என்றும், இலங்கையில் அல் கைதா பிரிவின் இங்கிலாந்துப் பிரதிநிதி அவர் என்றும், நிதர்சனம் வெப்தளம் கூறியதோடு, "ஒசாமா பின்லாடனின் ஜிகாத் கொள்கை மற்றும் கோட்பாடுகளை பரப்புவதன் மூலம், இவர் வன்முறைகளை தூண்டுகிறார்" என்றும் கூறியது. அவ் இணையதளமானது பசீருடைய புகைப்படத்தை பிரசுரித்தித்ததோடு, "இவ்வாறான தனிநபர்களின் நடவடிக்கைகள் நசுக்குவதற்காக" இங்கிலாந்து அரசாங்கத்தை நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக்கொண்டது.[43]

புலிகள் இயக்கத்தோடு தொடர்புள்ள இணைய தளங்கள் மூலமாக தாங்கள் குறி வைக்கப்படுகின்றமை தொடர்பாக புலம்பெயர் தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்கள் மிகவும் அவதானமாக இருப்பது நியாயமானதே. ஏனெனில் பசீருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதற்கு இரண்டு மாதங்களுக்கு பின்புதான், நிதர்சனம் இணையதளமானது, யாழ்ப்பாணத்தில் உள்ள மத்திய கல்லூரியின் அதிபர் கே.இராஜதுரை தொடர்பாக குறிப்பு ஒன்றை பிரசுரித்து இருந்தது. அதில், "அவரின் கழுத்தைச் சுற்றி கட்டப்பட்ட பெயர்ப் பலகையுடன் அவரின் பிரேதம் விரைவில் கண்டெடுக்கப்படும்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது பிரசுரிக்கப்பட்ட சில நாட்களின் பின்னர் இராஜதுரை அவரின் பாடசாலைக்கு அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். (மேலே பார்ப்பதற்கு)[44]

---

[41] 2005 நவம்பர், இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு TBC பணியாளர்களுடன் நடத்திய நேர்காணல்.

[42] 2005 நவம்பர் இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[43] 2006 ஜனவரி 12, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசியில் நடத்திய நேர்காணல். பார்க்க: nitharsanam.com, 2005 டிசம்பர் 9,[இணையதளம்] http://www.nitharsanam.com/?art=13690

[44] யாழ். பல்கலைக்கழக மனித உரிமைகளுக்கான ஆசிரியர்கள், அறிக்கை இலக்கம்39, 2005 நவம்பர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

2005 ஒக்டோபர் மாதம், நமு பொன்னம்பலம் என்னும் தமிழ் சமூகத்து தலைவர், தன்னை உடல் ரீதியாக தாக்கியதாக புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர் ஒருவர் வழங்கிய பிழையானதொரு முறைப்பாட்டினால் டொரன்டோ பொலீசாரினால் அவர் கைது செய்யப்பட்டார். செப்டம்பர் மாதப் பிற்பகுதியில், இலங்கையில் உள்ள அரசியல் கட்சியான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பங்குபற்றிய பொதுக்கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்வதற்கு ஆதரவு வழங்கியதோடு நமு பொன்னம்பலம் அக்கூட்டத்திற்கு தலைமையும் தாங்கினார். இது நடந்து ஒரு வாரத்தின் பின்னர் ஒக்டோபர் 4ம் திகதி, கொல்லப்பட்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் பங்குபற்றிய ஒருவர், கடந்த வார நிகழ்வின் பொழுது பொன்னம்பலமும் இன்னும் சிலரும் தன்னை அச்சுறுத்தியதாகவும் உடல் ரீதியாக தாக்கியதாகவும் முறையிட்டார். பொலீசாரினால் கைது செய்யப்பட்ட பொன்னம்பலம், கை விலங்கிடப்பட்டு, டொரன்டோ பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவர் மீதான குற்றச் சாட்டுக்கள் எவ்வித ஆதாரமும் அற்றவை என வெளிப்படையாக தெரிய வந்ததால் ஒரு சில மணி நேரத்திற்குள் அவர் விடுவிக்கப்பட்டார். எவ்வாறாயினும், அவரின் கைது தொடர்பான விபரங்கள் டொரன்டோவில் வெளிவரும் பிரசித்தமான தமிழ்ப் பத்திரிகையான ஈழநாடுவில் வெளிவந்தது.[45] இச்சம்பவம் தொடர்பான செய்தி அப்பத்திரிகையில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பிரசுரிக்கப் பட்டமையானது, தனது குடும்ப அங்கத்தவர்களை நெருக்குவாரத்திற்கு உட்படுத்துவதற்கும் தனது குடும்ப கௌரவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காகவும், வேண்டும் என்றே செய்யப்பட்டதாக பொன்னம்பலம் நம்புகின்றார்.[46]

புலிகள் இயக்கமும் அதன் ஆதரவாளர்களும், மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை எச்சரிக்கும் செய்திகளை அனுப்புவதற்கு, மேற்கு நாடுகளிலும் இலங்கையில் வாழும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களையே அனேகமாக பயன்படுத்துகின்றனர். புலிகள் இயக்கத்தின் பிரதிநிதி ஒருவர் தன்னை எச்சரித்ததாக சொல்லிய தனது உறவினர் ஒருவர், "நீ உன்னை கட்டுப்படுத்திக் கொள்ளவில்லையானால் அவர்கள் உன்னை கவனித்துக் கொள்ளுவார்கள்" என்று தனக்கு தொலைபேசி மூலம் அறிவித்ததாக டொரன்டோவில் உள்ள ஒரு செயற்பாட்டாளர் எம்மிடம் கூறினார்.[47] இலண்டனில் வாழும் செயற்பாட்டாளர் ஒருவர் வானொலி நிகழ்ச்சி ஒன்றுக்கூடாக புலிகள் இயக்கத்தை விமர்சித்த பின்னர், இலங்கையில் வாழும் அவரது சகோதரனால் தொடர்பு கொள்ளப்பட்டார். அவரது சகோதரன் இலங்கையில் அவரின் நண்பன் ஒருவரின் வீட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார். அங்கு அவர் இரு புலிகள் இயக்க அங்கத்தவர்களை சந்திக்க நேர்ந்தது. "உனது சகோதரன் வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டும் அல்லது அது அவருக்கு நன்மையாக இராது,"என அப்புலிகள் இயக்கத்தவர்கள் அவரிடம் கூறியுள்ளனர். புலிகள் இயக்கத்தின் வெளிப்படையான உத்தரவின் பேரிலேயே தான் அவரை வீட்டுக்கு அழைத்திருந்ததாக அந்த நண்பர் பின்னர் சகோதரனிடம் கூறினார். "தற்போது எனது சகோதரன் தனது குடும்ப அங்கத்தவர்களைப் பற்றி மிகவும் யோசித்தவாறு உள்ளார்." என இலண்டனில் வசிக்கும் அந்த செயற்பாட்டாளர் எம்மிடம் கூறினார்.[48]

புலிகள் இயக்கம் தொடர்பாக விமர்சிப்பவர்களை மௌனமாக்குவதற்கு அனேகமான சம்பவங்களில், வெளிப்படையான அல்லது முழுமையான அச்சுறுத்தல்கள் கூட அவசியப்படுவதில்லை. பிரபலமாக எல்லோரும் அறிந்த சம்பவங்களான கொலைகள், தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் போன்றவையே புலம்பெயர் சமூக அங்கத்தவர்கள்

---

[45] 2005 செப்டம்பர் 12, ஈழநாடு, ஆனந்தசங்கரியின் கூட்டத்தில் கேள்வி கேட்டவர் மீது குண்டர்கள் தாக்குதல்

[46] 2005 நவம்பர், கனடா டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[47] 2005 நவம்பர், கனடா டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[48] 2006 ஜனவரி, இங்கிலாந்தில், இலண்டன், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

தங்களைத் தாங்களே எச்சரித்துக்கொள்ளப் போதுமானவை. இலங்கையில் வாழுகின்ற குடும்ப அங்கத்தவர்கள் உட்பட, நிகழக்கூடிய மோசமான பின் விளைவுகளைப் பற்றி கவலைப்படுவதினாலேயே, தங்கள் குடும்ப அங்கத்தவர்களை அவர்களது உறவினர்கள் வெளிப்படையாக கதைக்காதீர்கள் என வலியுறுத்துகிறார்கள். இலங்கையில் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டப்படுகின்ற தொடர்ச்சியான அரசியல் கொலைகளாவன, எவருமே ஆபத்தான நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதையே அனேகமான தமிழர்களுக்கு உணர்த்திக்கொண்டு இருக்கிறது.

"புலிகள் இயக்கத்திற்கு எதிரானது" என தமிழ் ஊடகங்களால் இனங் காட்டப்படுகின்ற, டொரன்டோவில் கலாச்சார நிகழ்வுகளை மேற்கொள்ளும் அமைப்பு ஒன்றுடன் தொடர்புள்ள நபர் ஒருவர், தமிழ் சமூகத்தின் மீது புலிகள் இயக்கம் வைத்திருக்கும் ஆதிக்கத்தின் தாக்கத்தைப் பற்றி எமக்கு விபரித்தார். "கனடாவில் உண்மையான ஜனநாயகம் எமக்கு இல்லை, ஏனெனில் புலிகள் இயக்கத்திற்கு எதிராக நாம் இங்கே வாயைக்கூட திறக்க முடியாது. மக்கள் தமது வாய்களை திறக்கவே அச்சப்படுகிறார்கள். உண்மையில் மிகச் சிறுபான்மையினரே இங்கு தமது வாய்களைத் திறக்கிறார்கள், அல்லது ஏதாவது சிறு சிறு வேலைகளைச் செய்கிறார்கள்."[49]

இலண்டனில் புலிகள் இயக்கத்தின் முன்னைய தீவிர ஆதரவாளர் எனக் கூறிக்கொண்ட ஒருவர் எம்மிடம் கூறும்போது:

> தனிப்பட்ட முறையில் நான் புலிகள் இயக்கத்தை ஆதரித்தேன். 90வீதமான எமது மக்கள் அவர்களை ஆதரிக்கிறார்கள் அனேகமான மக்கள் அவர்களுக்கு பின்னாலேயே நிற்கிறார்கள், நாங்கள் துப்பாக்கிகளை ஏந்தாவிட்டாலும், நாங்கள் அவர்களை ஆதரிக்கின்றோம். ஆனால் பின்னர் நிலமைகள் மாறின. சில சில குழுக்கள் குறிவைக்கப்பட்டன. யார் யார் அவர்களை கேள்வி கேட்கிறார்களோ. அவர்களின் நடத்தையை எம்மால் பார்க்க முடிந்தது. அவர்களின் நடவடிக்கைகள் பற்றி யாராவது கேள்வி கேட்டால், அவர்களை அவர்கள் உயிர் வாழ விடமாட்டார்கள். உங்களுக்கு பேச்சு சுதந்திரம் என்பது கிடையாது. எனது குடும்பம் இலங்கையில் இருந்ததால் நான் சில காலம் மிகவும் மௌனமாகவே இருந்தேன், நான் என்னை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் மட்டும் வைத்திருந்தேன். நான் என்னை வெளிக்காட்டிக் கொள்ள விரும்பவில்லை. நான் ஏதாவது செய்தால் அதற்கு நிறைய பின் விளைவுகள் ஏற்படும் என்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறேன்......... நான் எனது உயிர் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும் அக்கறைப்படுகிறேன். சமூகம் மிகவும் அச்சம் அடைந்திருக்கிறது.[50]

பல் கலாச்சார ஸ்தாபனம் ஒன்றில் ஈடுபட்டமைக்காக ஒரு முறை பிரச்சனைக்குள்ளான ரொரன்டோவைச் சேர்ந்த ஒருவர் பின்வருமாறு கூறினார். "நான் என்ன உணர்கிறேன் என்பதை முன்னர் நான் வெளிப்படையாக பேசுவேன். ஆனால் இப்போது நான் அதிக கவனமாக உள்ளேன். வெளிப்படையாக வருகின்ற நபர்கள் குறி வைக்கப்படுகிறார்கள் ஆகவே அவர்களின் பணி மிக மிக குறுகியதாக உள்ளது. நீங்கள் மனித உரிமைகளுக்காக வேலை செய்ய வேண்டும், ஆகவே நீங்கள் எதையாவது தொடங்க வேண்டும், நீங்கள் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும், ஆனால் அதற்கான இடைவெளி இங்கே மிக மிக குறைவாகவே இருக்கிறது."[51]

---

[49] 2005 நவம்பர், கனடா டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[50] 2005 நவம்பர், இங்கிலாந்து, இலண்டனில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[51] 2005 நவம்பர், கனடா டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

www.tamilarangam.net

## IV. மேற்கு நாடுகளிலுள்ள இந்துக் கோயில்கள் மீது புலிகள் இயக்கத்தின் ஆதிக்கம்.

*கோயில்கள் பணம் சம்பாதிக்கப்படும் இடங்கள் ஆகும். ஆகவே அதை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால், அங்குள்ள பணத்தின் மீது அவர்களின் கட்டுப்பாடு வரும், உபரியான பணத்தை அவர்கள் கட்டுப்படுத்தலாம், அங்கு வருகின்ற மக்களை அவர்கள் கட்டுப்படுத்தலாம்.*

- 2005 ஒக்டோபர், இலண்டன், இந்துக் கொயில் ஒன்றின் பரிபாலகர்.

பெரும்பான்மையான தமிழர்கள் இந்துக்கள். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தின் அனேகமான அங்கத்தவர்களைப் பொறுத்த வரையில், இந்துக் கோயில்கள் அவர்களுக்கு இறை வழிபாட்டுக்கான இடமாக மட்டுமல்லாது, அவர்களின் சமூக செயற்பாடுகளுக்கான ஓர் மையமாகவும், மற்றும் அவர்களின் நன்கொடைகள், தர்ம செயற்பாடுகள் என்பவற்றுக்கு வழிசமைக்கும் ஓர் இடமாகவும் விளங்குகின்றது. டொரன்டோப் பகுதியில் இலங்கைத் தமிழர்கள் செல்லுகின்ற, நாற்பது இந்து கோயில்கள் பருமட்டாக இருக்கின்றன. இலண்டனில் 22 இந்துக் கோயில்கள் இருக்கின்றன. இவ் இந்துக் கோயில்கள் தமிழ் சமூகத்துடன் உடனடி தொடர்பினை ஏற்படுத்துவதற்கு, மற்றும் நிதி சேருவதற்கு வாய்பான இடமாக இருப்பதால் புலிகள் இயக்கமானது அக்கோயில்களில் நடக்கும் நிகழ்வுகள், அவற்றின் நிர்வாகம், மற்றும் அவற்றின் வருமானம் என்பவற்றின் மீது தமது கட்டுப்பாட்டை வைத்திருக்க முயற்சிக்கின்றது.

மேற்கு நாடுகளில் உள்ள இந்துக் கோயில்களின் மீது புலிகள் இயக்கத்தின் ஆதிக்கமானது மிக வெளிப்படையாகவே இருக்கின்றது. புலிகள் இயக்கத்தின் கருத்துக்களைப் பிரச்சாரப் படுத்துகின்ற வீடியோ கசட்டுக்கள் DVDகள், பிரபாகரனின் உரைகள் அடங்கிய CDகள், மற்றும் புலிகள் இயக்கத்தின் கொடிகள் என்பவை இந்து ஆலயங்களில் விற்பனை செய்யப்படக் கூடியதாக இருக்கின்றது. புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் புகைப்படங்களும் இவ்வாலயங்களில் தொங்க விடப்படுகின்கின்றன. தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்கு[52] என்று அல்லது ஏனைய புலிகள் இயக்க முன்னணி குழுக்களுக்கு இக்கோயில்கள் நிதியை சேகரித்துக் கொடுக்கின்றன. இலண்டனில் உள்ள ஒரு இந்துக் கோயிலில் பங்குபற்ற வந்த அனைவருமே “மாதாந்த நிரந்தரக் கொடுப்பனவு” (Standing Order) ஒன்றை புலிகள் இயக்கத்திற்காக கொடுக்க வேண்டும் என கேட்கப்பட்டனர். அந்தப் பணம் பின்னர் பிரித்தானிய தமிழர் சங்கத்தினால் சேர்த்து எடுக்கப்பட்டது.[53]

டொரன்டோ பிரதேசத்தில் உள்ள ஒரு இந்து ஆலயத்தின் தர்மகர்த்தா மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் கூறுகின்ற பொழுது, அண்மையில் புலிகள் இயக்கத்தினால் முடுக்கி விடப்பட்ட நிதி சேகரிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, 2005ன் பிற்பகுதியில், புலிகள் இயக்கத்தின் அங்கத்தவர்கள் தனது கோயிலுக்கு பலமுறை வந்து ஒரு மில்லியன் கனேடிய டொலர்களை கேட்டார்கள். தன்னை முதல் முதலாக அணுகியவர்கள் தம்மை பொட்டு அம்மானின் (புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவுத் தலைவர்) உளவுப் பிரிவு அங்கத்தவர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டதோடு,

---

[52] தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது 1985ம் ஆண்டில் புலிகள் இயக்கத்தினால் அமைக்கப்பட்டது. தென் இந்தியாவிற்கு சென்று தஞ்சம் கோருகின்ற இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்காகவே ஆரம்பத்தில் இது தொடங்கப்பட்டது என்று அவர்கள் கூறினாலும், பின்னர் படிப்படியாக இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தினால் பாதிக்கப்படுகின்ற நபர்களுக்கு உதவி செய்வதற்காக என்று கூறி, அது தனது முன்னைய நோக்கத்தை மாற்றிக் கொண்டது.

[53] 2005 ஒக்டோபர், இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நாங்கள் விரைவில் தமிழீழ பிரகடனம் [உ+ம்.சுதந்திரம் –கீழே பார்க்க], செய்யப் போகின்றோம். ஆகவே உடனடியாக எமக்கு நிதி தேவை."[54] என்றனர்.

பல உள்ளூர் கோயில்களின் நிர்வாக கட்டமைப்புக்களை புலிகள் இயக்கமானது தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக எவ்வாறு திட்டமிட்ட வகையில் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றது என்பது பற்றி வேறு பல வழிகளிலும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. டொரன்டோவில் உள்ள இன்னும் ஒரு கோயில், எவ்வாறு "கைப்பற்றப்பட்டது" என்பது பற்றியும் அந்த பரிபாலகர் எம்மிடம் விபரித்தார். "அவர்கள் முதலில் புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களை அங்கத்தவர்களாக உள்ளே நுழைத்து விடுவார்கள், பின்னர் அவர்கள் பெரும்பான்மையாகியதும், அவர்களே அக்கோயிலின் தர்மகர்த்தாவை தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும்."[55]

அவுஸ்திரேலியாவில் நடந்த ஒரு சம்பவத்தில் பேர்த் (*Perth*)என்னும் இடத்தில் அமைந்துள்ள இந்துக் கோவிலை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, தமது நிதி சேகரிப்பு நடவடிக்கைக்காக அதனை பாவிப்பதற்கு புலிகள் இயக்கத்தினர் முயற்சிகளை மேற்கொண்டதாக சொல்லப்படுகிறது. புலிகளின் இந்த முயற்சியானது அரசாங்கத்தின் விசாரணைகளுக்கு வழி வகுத்ததோடு, புலிகள் இயக்கத்தின்மீது அரசாங்கம கடுமையான கட்டுப்பாட்டை வைத்திருப்பதற்கும் இச்சம்பவம் ஒரு வாதமாக முன்வைக்கப்பட்டது. 2001ம் ஆண்டு பிற்பகுதியில் புலிகள் இயக்கத்தினதும், பயங்கரவாதத்தோடு தொடர்புள்ள ஏனைய பிரிவுகளினதும் சொத்துக்களை உடனடியாக முடக்குவதற்கான நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் எடுத்தார்.[56] அதை தொடர்ந்து அடுத்த வருடம், அவ் இந்துக் கோவிலின் நிர்வாக கமிட்டி அங்கத்தவரான சுப்பிரமணியம் முத்துலிங்கம் என்பவர், கொழும்பில் வசித்த தனது குடும்பத்தவர்களை சந்திக்க சென்ற போது இனந்தெரியாத இரு தமிழ் இளைஞர்களால் குத்திக் கொல்லப்பட்டார். இலங்கையில் அரசியல் படுகொலைகள் மிக அரிதாகவே விசாரணை செய்யப்படுகின்றன. இச் சம்பவம் தொடர்பாக குற்றவாளிகள் எவரும் இனங்காணப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை. எவ்வாறாயினும் மனித உரிமை குழுக்கள் வெளியிட்ட அறிக்கையின்படி, அவுஸ்திரேலியாவில் இந்துக் கோயிலை கைப்பற்றுவதற்கு புலிகள் இயக்கம் மேற்கொண்ட முயற்சியை தடுப்பதற்கு முத்துலிங்கம் வெளியிட்ட வெளிப்படையான விமர்சனங்களுக்காகவே அவர் குத்திக் கொல்லப்பட்டதாக தமிழர்கள் அறிந்திருந்தனர்.[57]

இலண்டனில் உள்ள ஒரு தனியார் கோயிலொன்றின் பணிப்பாளர் ஜெயதேவன் இராஜசிங்கம் மற்றும் அதன் செயலாளர் மற்றும் ஆறுமுகம் கந்தையா விவேகானந்தன் ஆகியோருக்கு நடந்த சம்பவமானது மிகவும் பிரபலமான செய்தியாக வந்தது. புலிகள் இயக்கத்தோடு தொடர்புடைய ஒரு குழுவிடம் அந்தக் கோயில் நிர்வாகத்தை கையளிக்க ஒப்புக்கொள்ளும் வரையில், 2005 முற்பகுதியில், அவர்கள் இருவரும் இலங்கையின் வட பகுதியில் பல வாரங்களாக தடுத்து வைக்கப்பட்டனர்.[58]

---

[54] 2006 ஜனவரி, கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[55] 2006 ஜனவா, கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[56] ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் (பயங்கரவாத தடுப்பு – நபர்கள்,சக்திகள்) பட்டியல் 2001 (இல.2). பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சக்திகள் மற்றும் நபர்களின், பொருளாதார வளங்கள் மற்றும் சொத்துக்களை, எவ்வித தாமதமுமின்றி முடக்கும்படி அரசுகளைக் கொருகின்ற, ஐக்கிய நாடுகள் சபையின் பிரேரணை 1373, பந்தி 1(c) இன்படி, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர், புலிகள் இயக்கம் உட்பட, இருபத்தி ஐந்து குழுக்களைப் பட்டியலில் இட்டார். பார்க்க: http://www.draft.gov.au/icat/persons_entities/2_proscribed_entities_10dec2001.html.

[57] 2002 ஒக்டோபர் 4, மனித உரிமைகளுக்கான யாழ. பல்கலைக்கழக ஆசிரியர்கள் வெளியிட்ட அறிக்கை இல.15: *அவுஸ்திரேலியாவில் நிகழ்தது*

[58] 2005 ஒக்டோபர், இலண்டனில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

25 வருடங்களுக்கு மேலாக இங்கிலாந்தில் வாழ்ந்துள்ள ஜெயதேவன், புலிகள் இயக்கத்தினால் தடுத்து வைக்கப்படுவதற்கு முன்னர் அவ்வியக்கத்தின் மிகத் தீவிர ஆதரவாளராக இருந்தார். 1999ம் ஆண்டில், தனது மருத்துவ கவனிப்புக்காக இலங்கையை விட்டு வெளியேறி, நோர்வேக்கு செல்லுவதற்கான அனுமதியைப் பெற முயற்சித்துக் கொண்டிருந்த புலிகள் இயக்கத்தின் பிரதான அரசியல் பிரதிநிதியும், இலங்கைக்கு வெளியே அவ்வியக்கத்தின் பிரதான பேச்சாளருமான அன்ரன் பாலசிங்கத்திற்கும், அப்போது ஜெயதேவன் உதவி செய்திருந்தார். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் புலிகள் இயக்கத்தின் மனிதாபிமான வேலைத் திட்டங்களுக்கு என்று 1999 மற்றும் 2000ம் ஆண்டுகளில் அவரது கோயிலுக்கூடாகவும் நிதி சேகரிக்கப்பட்டது. 2001ம் ஆண்டு பிற்பகுதியில் பிரிட்டிஷ் அரசு புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாக பெயரிட்ட பொழுது, அத்தடைச் செயற்பாடானது, மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஒப்பந்தத்தின்படி, சுதந்திரமாகக் கூடுவது மற்றும் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரங்களை மீறுகின்றது என்று வாதித்து, ஜெயதேவன் தானே சுயாதீனமாக அத்தடைச் சட்டத்தை, சட்ட ரீதியான மீளாய்வுக்கு உட்படுத்தம்படி கோருகின்ற விண்ணப்பமொன்றை பிரித்தானிய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். எவ்வாறாயினும், அவருடைய இந்த முயற்சிக்கு புலிகளின் அனுமதி கிடைக்காமல் இருந்ததோடு, அவர் பாலசிங்கத்தினதும் புலிகள் இயக்கத்தினதும் ஊடகங்களினதும் விமர்சனத்திற்கு உள்ளானார்.

தான் நிர்வகித்த இந்துக் கோயிலான ஈழப் பதீஸ்வரர் ஆலயத்தை புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக எடுத்த முயற்சியை எதிர்த்ததன் மூலம் ஜெயதேவன் புலிகள் இயக்கத்தை மேலும் சீற்றத்திற்கு உள்ளாக்கினார். இலண்டனில் உள்ள புலிகள் இயக்கத்துடன் தான் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடுவதற்காக, புலிகள் இயக்க தலைவர்களுடன் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட சந்திப்பொன்றில் பங்குபற்றுவதற்காகவே 2004ம் ஆண்டு இறுதிப் பகுதியில், அவர் இலங்கையின் வடபகுதிக்கு பயணமானார். அவரும் அவருடைய சகபாடியுமான விவேகானந்தனும் அங்கு சென்ற பின்னர், ஆரம்பத்தில் அவர்கள் கிளிநொச்சியில் உள்ள புலிகள் இயக்கத்தின் விருந்தினர் விடுதியில் தங்கவைக்கப்பட்டு, சில நாட்களின் பின்னர் புலிகள் இயக்கத்தின் இன்னுமொரு கட்டிடப் பகுதிக்குள் மாற்றப்பட்டனர். “நாங்கள் மிகவும் வஞ்சகமான முறையில் ஒரு பொறிக்குள் சிக்க வைக்கப்பட்டு, மிகவும் குள்ளத்தனமான முறையில் தடுத்து வைக்கப்பட்டோம். இரண்டு அறைகள் மட்டும் இருந்த கைவிடப்பட்ட கட்டிடம் ஒன்றிற்குள் வைக்கப்பட்டு இருந்தோம். அக்கட்டிடமானது சிலந்தி வலைகள் நிறைந்தும், மிகவும் அழுக்குத் துணிகளுடனும், மிக அழுக்காகவும் இருந்தது. தண்ணீர் தாங்கிக்குள் ஒரு எலி செத்துக் கிடந்ததையும் நாம் கண்டோம்.”[59]

புலிகள் இயக்கத்தின் படையினர் நால்வர் அவர்களுக்கு காவல் நின்றனர். இலண்டனில் அவர்களின் செயற்பாடுகள் பற்றி பல்வேறு தருணங்களில் புலிகள் இயக்கத்தின் நிதிப் பிரிவு மற்றும் உளவுப் பிரிவு அங்கத்தவர்களால் நீண்டநேர விசாரணைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்பட்டனர். அவர்கள் தமது குடும்பத்தினரோடு எந்தவிதமான தொடர்புகளையும் வைத்திருக்க அனுமதிக்கப்படவில்லை, மிக அடிப்படையான மருத்துவ வசதிகளே அவர்களுக்கு வழங்கப்பட்டன.

இலண்டனில் உள்ள கோயிலை, புலிகள் இயக்கம் குறிப்பிடுகின்ற ஓர் அமைப்பிடம் சட்டபூர்வமாக கையளிப்பதற்கு உரிய பத்திரங்களில் இருவரும் கையொப்பம் இட்டால் மட்டுமே, விவேகானந்தன் விடுதலை செய்யப்படுவார் என்று, ஆறுவாரங்களின் பின்பு ஜெயதேவனுக்கும் விவேகானந்தனுக்கும் முடிவாக கூறப்பட்டது. அவ்வாறான பத்திரங்கள் கையொப்பமிடப்பட்ட பின்னர், விவேகானந்தன் இலண்டன் சென்று கோயில் கைமாறும்

[59] 2005 ஒக்டோபர், இலண்டனில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடவடிக்கைகளை நேரடியாக மேற்கொண்ட பின் ஜெயதேவன் விடுதலை செய்யப்படுவார் என்றும் அவர்களிடம் கூறப்பட்டது.

“நாங்கள் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுக்கு தமிழிலேயே கடிதங்களை எழுதினோம், எங்களுக்கு வேறு எந்த வழியும் இருக்கவில்லை. நாங்கள் விடுதலையாக வேண்டும் என்பதே எங்களின் ஒரே அக்கறையாக இருந்தது. என ஜெயதேவன் எம்மிடம் கூறினார். இக்கட்டத்தின்போது ஜெயதேவன் ஒரு மட்டுப் படுத்தப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார், 15 நாட்களாக அவர் ஒருவேளை உணவு மட்டுமே உட்கொண்டார். பெப்ரவரி 20ம் திகதி விவேகானந்தன் விடுதலை செய்யப்பட்டதன் பின்னர், அடுத்த வந்த 15 நாட்களும் ஜெயதேவன் முழுமையான உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அதனால் அவர் மருத்துவ சிகிச்சைக்காக கொண்டு போகப்பட்டார். அவர் உடனடியாக கொழும்பு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என அங்கிருந்த வைத்தியர்கள் புலிகள் இயக்கத்திடம் தெரிவித்தனர். ஆனால், தான் மீண்டும் தடுப்பு முகாமுக்கே கொண்டு செல்லப்பட்டதாக ஜெயதேவன் கூறினார்.

மாச் 2ம் திகதி இலண்டனுக்கு திரும்பிய விவேகானந்தன், புலிகள் இயக்கத்தினால் நியமிக்கப்பட்ட ஒரு அமைப்பான சிவயோகத்திற்கு, கோயிலின் முழுமையான பொறுப்பை கையளிக்கின்ற ஒப்பந்தப் பத்திரங்களில் கையொப்பமிட்டார்.[60] கோயில் கைமாற்றப்பட்டுவிட்டதை உறுதிப்படுத்துவதற்காக அவர் புலிகள் இயக்கத்தோடு தொடர்பு கொண்டார். ஆனாலும், ஜெயதேவனின் நடவடிக்கைகள் தொடர்பாக தாங்கள் மேலதிகமாக விசாரணைகளை நடத்திக்கொண்டு இருப்பதால் அவரை தாங்கள் விடுதலை செய்யமாட்டோம் என புலிகள் இயக்கத்தினர் அவருக்கு பதிலளித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஜெயதேவனின் குடும்பத்தாரும், விவேகானந்தனும் இவ்விவகாரத்தை பகிரங்கமாக்கியதோடு, இத் தடுத்துவைப்பு பற்றி இலண்டன் பொலீசாருக்கும், இலங்கையில் உள்ள பிரித்தானிய உயர் ஸ்தானிகர் காரியாலயத்திற்கும், இங்கிலாந்தில் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் மற்றும் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தினர். அதன் தொடர்ச்சியாக தொடுக்கப்பட்ட ஊடக மற்றும் அரசியல் அழுத்தங்கள் காரணமாக, இறுதியாக 2005 மார்ச் 12ம் திகதி, ஜெயதேவன் விடுவிக்கப்பட்டார்.

கோயிலின் உரிமையாளரும், கோயிலின் உண்மையான பரிபாலகர்கள் நால்வரும், கூட்டாக இணைந்து கோயிலின் இக் கைமாற்ற நடவடிக்கைக்கு எதிராக இங்கிலாந்து நீதிமன்றத்திற்கூடாக சவால் விடுத்தனர். இச்செயற்பாடானது விவேகானந்தனுக்கும் ஏனைய ஆலய பரிபாலகர்களுக்கும் பல அச்சுறுத்தல் வருவதற்கும் வழி சமைத்தது. மார்ச் 24ம் திகதி, இலண்டனில் உள்ள விவேகானந்தனின் கடைக்கு வந்த ஒரு நபர், “நீங்கள் திரும்பவும் கோயிலை எடுத்துக் கொள்ளுவீர்களாயின், நாங்கள் உங்களை சுட்டுக் கொல்லுவோம்.” என்று அவரிடம் கூறியுள்ளார். அதன் பின்னர் “ஆலய உரிமையாளருடன் நீதிமன்றத்திற்கு ஒரு சாட்சியமாக நீரும் போவதாக இருந்தால், வழக்கு விசாரணையின் பொழுது நீர் சீவரட்ணம் என்பவரையே ஆதரிக்க வேண்டும். [நாகேந்திரம் சீவரட்ணம் என்பவர் சிவயோகம் அமைப்பின் தலைவர் ஆவார்]. நீர் அவரை ஆதரிக்காவிட்டால் உமக்கு ஓர் முடிவு கட்டும்படி புலிகள் இயக்கத்திடம் இருந்து எமக்கு உத்தரவு வந்திருக்கிறது.” என தனக்கு கூறப்பட்டதாக விவேகானந்தன் மேலும் கூறினார். “நீங்கள் புலிகள் இயக்கத்தை மிக மோசமாக கைவிட்டுள்ளீர்கள். இது தொடர்பாக புலிகள் இயக்கம் அவ்வளவு மகிழ்ச்சியாக இல்லை. அவர்கள் உங்களைக் கவனித்துக் கொள்வார்கள்.” என ஏனைய ஒரு பரிபாலகருக்கும் கூறப்பட்டுள்ளது.[61]

---

[60] ஆவணங்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கோப்பில் வைக்கப்பட்டுள்ளன.

[61] 2005 ஒக்டோபர், இலண்டனில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

2005ம் ஆண்டு ஏப்ரல் 7ம், திகதி வழக்கு விசாரணையின் பொழுது உயர் நீதிமன்றமானது, இக்கோயில் கைமாற்றமானது செல்லுபடியற்றது எனத் தீர்ப்பு வழங்கியதோடு, ஆலயத்தின் பரிபாலனத்தை அதன் ஆரம்ப பரிபாலகர்களிடமே மீள ஒப்படைத்தது. சிவயோகம் அமைப்பானது சட்டரீதியான கட்டணமாக 35,000 பவுண்டுகளை கொடுக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டது. கோயில் மீளக் கையளிக்கப்பட்ட பின்னர் ஜெயதேவனுக்கும் ஏனைய பரிபாலகர்களுக்கும் அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. டிசம்பர் மாதத்தில் நடந்த ஒரு சம்பவத்தை ஜெயதேவன் கூறும்போது, கோயிலுக்குள் சென்ற ஒரு நபர் கோயில் சொத்துக்களை அடித்து நொறுக்கி நாசம் செய்தார். "அவர் வெறி பிடித்தவர்போல் அறிவிப்பு பலகையை பிடிங்கி எறிந்து Traffic corn ஒன்றினால் அடித்து கதவிற்கு சேதம் விளைவித்தார். அத்தோடு, தான் ஒரு கரும்புலி என்றும் எங்கள் எல்லோருக்கும் நல்ல பாடம் புகட்டுவதாகவும் கூறினார்"[62] என ஜெயதேவன் எம்மிடம் கூறினார். 2006ம் நடுப் பகுதியில், "ஜெயதேவன் தமிழர் போராட்டத்திற்கு எதிரான துரோகி, அவருக்கு நல்ல பாடம் கற்பிக்கப்படும்." என தமிழில் கையால் எழுதப்பட்ட சுவரொட்டிகள் கோயிலை அண்டிய குடியிருப்பு பகுதிகள் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன.[63]

கோயில்களை, புலிகள் இயக்கம் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர மேற்கோள்ளும் முயற்சிகளை தவிர்ப்பதற்கு, சில கோயில்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளன. உதாரணமாக டொரன்டோ பகுதியில் உள்ள ஒரு பொதுக் கோயிலானது, தமது அங்கத்தவர்கள் சேர்க்கும் விடயத்தை நிறுத்தியுள்ளதோடு, யாராவது தனிநபர்கள் அங்கத்தவர்களாக வர விரும்பின் அவர்கள் மூன்று வருடகாலத்திற்கு தன்னார்வ தொண்டு செய்த பின்னரே அங்கத்தவர்களாக அனுமதிக்கப்படுவர் என்னும் கோட்பாட்டை வைத்துள்ளனர்.[64]

## V. "இறுதி யுத்தத்திற்கு" நிதி வழங்குதல்: 2005 பிற்பகுதி மற்றும் 2006 முற்பகுதியில், புலம்பெயர் வாழ் தமிழர்களிடையே புலிகள் இயக்கம் மேற்கொண்ட நிதி திரட்டலும் பலாத்கார பணப்பறிப்பும்.

*அங்கே [இலங்கையில்] எனக்கொரு சகோதரன் இருக்கின்றார். அவர் பாதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை. அவர்கள் என்ன கேட்கிறார்களோ நான் அதைச் செய்யப்போகிறேன்.*

- டொரன்டோவில் புலிகள் இயக்கத்தினால் பணம் தரும்படி கேட்கப்பட்ட ஒரு பெண்.[65]

அனேகமான தமிழர்கள் தாம் விரும்பியே புலிகள் இயக்கத்திற்கான நிதிப் பங்களிப்பினை செய்தாலும், ஏனைய பலர் அவர்களுக்கு வேறு வழியில்லை என்ற காரணத்தினால் அதைச் செய்ய நேரிடுகின்றது. புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளை அவர்கள் ஆதரிக்காவிட்டாலும் கூட, எந்தம் அச்சம் புலிகள் இயக்கத்தை விமர்சிப்பவர்களை

---

[62] கரும்புலிகள் என்போர், தற்கொலை குண்டுத் தாக்குதலில் ஈடுபடுகின்ற புலிகள் இயக்கத்தின் ஒரு விசேட பிரிவினர் ஆகும்.
[63] 2006 ஜனவரி30, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு கிடைத்த மின்னஞ்சல் தகவல்.
[64] 2006 ஜனவரி, கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[65] 2006 ஜனவரி, கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

www.tamilarangam.net

மௌனமாக்குன்றதோ, அதே அச்சம்தான், புலம்பெயர் சமூகத்தின் அங்கத்தவர்களை புலிகள் இயக்கத்திற்கான நிதி ஆதரவை வழங்க நிர்ப்பந்திக்கின்றது.

2005ம் ஆண்டு பிற்பகுதியில் இலங்கை படையினருக்கு எதிராக புலிகள் இயக்கம் தனது தாக்குதல்களை அதிகரித்ததுடன் இரு பக்கத்தினராலும் மனித உரிமை மீறல்கள் அதிகரித்த சூழ்நிலை உருவானது. இக் கால கட்டத்தில் கனடா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பாவில் உள்ள ஏனைய நாடுகளில் வாழும் புலம்பெயர் வாழ் தமிழர்களிடையே, புலிகள் இயக்கமானது தனது பாரிய நிதி சேகரிப்பு நடவடிக்கையை முடுக்கி விட்டது. தமிழர்களுக்கு சொந்தமான வர்த்தக நிலையங்கள் மற்றும் தமிழர்கள் வாழும் பகுதிகளில், வீடு வீடாக சென்ற புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள், பெரும்பாலும் நேரடியான அச்சுறுத்தல்கள் மற்றும், நெருக்குவாரம் அளித்தல், மற்றும் பலாத்காரப் படுத்தல் போன்றவற்றுக்கு ஊடாகவே கணிசமானதொரு தொகையை தங்களுக்கு தருவதற்கு இணங்குமாறு அவர்களை வற்புறுத்தினர்.

டொரன்டோவில் ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும் 2,500 முதல் 5,000 கனேடிய டொலர்வரையான தொகையை கட்டாயம் செலுத்த வேண்டும் என கேட்கப்பட்டதோடு சில குடும்பங்கள் 10,000 கனேடிய டொலர் போன்ற பெரிய தொகையினை செலுத்த வேண்டும் எனவும் கேட்கப்பட்டனர். வர்த்தக உரிமையாளர்கள் 25,000 கனேடிய டொலரில் இருந்து 100,000 கனேடிய டொலருக்கு இடைப்பட்ட ஒரு தொகையை வழங்க வேண்டும் என கேட்கப்பட்டனர்.[66] 1மில்லியன் கனேடிய டொலர்களை கொடுக்க வேண்டும் என ஒரு இந்துக் கோயிலிடம் கேட்கப்பட்டுள்ளது.[67] இலண்டனில் அனேகமான தனிப்பட்ட குடும்பங்கள் 2,000 பவுண்டுகள் கொடுக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளதோடு, வர்த்தக நிறுவனங்கள் 10,000 பவுண்டில் இருந்து 1லட்சம் பவுண்டுவரை கொடுக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர்.[68] பிரான்ஸ், நோர்வே ஆகிய இடங்களில் வாழும் தமிழ் சமூகத்தினரிடமிருந்தும் இதே மாதிரியான தொகைகள் கோரப்பட்டதாக கூறப்படுகிறது.[69] இந்த நிதியானது “கடனாக” பெறப்படுகின்றது என்றும் அது பின்னர் வட்டியுடன் திருப்பி தரப்படும் என்றும் சில வேளைகளில் ஒருசில தனிநபர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் சொல்லப்பட்டுள்ளது. ஏனையவர்கள் முழுமையான பங்களிப்பாகவே அந்நிதியை கொடுக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நிதி கேட்டு வந்த தனிநபர்கள், தாங்கள் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் என்றே சிலவேளைகளில் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர். ஏனைய சந்தர்ப்பங்களில், புலிகள் இயக்கத்தின் முன்னணி அமைப்புக்கள் என பரவலாக நம்பப்பட்ட உலகத் தமிழர் இயக்கம் அல்லது பிரித்தானிய தமிழ்ச் சங்கம் என்பவற்றில் இருந்து தாம் வருவதாக அவர்கள் கூறினர். நிதி சேகரிப்பதற்காக தாங்கள் “பிரபாகரனால் (புலிகள் இயக்கத்தின் அதி உயர் தலைவர்) அனுப்பப்பட்டு இருக்கிறோம்” என தங்களின் வீடுகளுக்கு வந்தவர்கள் நேரடியாகவே சொன்னார்கள், என்று சில குடும்பத்தினர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர். நிதி சேகரிப்பாளர்கள் அனேகமாக இருவர் இருவராகவே செல்வது வழமை. சிலவேளைகளில் நிதி கேட்டு அணுகியவர்கள் மூன்று அல்லது நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட

---

[66] 2005 நவம்பர், மற்றும் 2006 ஜனவரி, கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[67] 2006 ஜனவரி, கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[68] 2005 டிசம்பர், இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[69] 2006, பெப்ரவரி 22ல். மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு கிடைத்த மின்னஞ்சல் தகவல் தெரிவித்தபடி, பாரீசில் வாழும் தமிழர்களை அணுகிய புலிகள் இயக்கத்தினர் 2000 யூரோக்கள் தரும்படி கேட்டுள்ளனர். ஒஸ்லோவில் உள்ள ஒர் ஊடகம் தெரிவித்தபடி, அங்குள்ள தமிழர்களிடம் புலிகள் இயக்க அங்கத்தவர்கள் 20,000 நோர்வேஜிய குரோணர்களை தரும்படி கோரியுள்ளனர். (பருமட்டாக அமெ.டொலர் 3,000 அல்லது 1,700 பவுண்டுகள் அல்லது அதைவிட அதிகம்) பாாக்க Ny Tid, பெப்ரவரி17. 2006. http://www.nytid.no/?sk=irix&id=3454



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழுவினராக இருந்தனர், என மேலும் சிலர் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர்.[70]

இந்த நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பாக, புலிகள் இயக்கத்தினர் பல்வேறு விதமாக விளக்கங்களைக் கொடுத்தனர். அநேகமாக "இறுதி யுத்தத்திற்காக" என்று கூறியே நிதி கேட்கப்பட்டுள்ளது என எமக்கு தெரிவிக்கப்பட்டது.. இரண்டு மாத காலத்திற்குள் வடக்கு கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தினர் அனைவரையும் துரத்தி அடிப்பதற்கு புலிகள் இயக்கம் திட்டமொன்றை வைத்துள்ளனர் என்றும், அந்த காலகட்டத்தோடு யுத்தம் முடிவுக்கு வந்துவிடும் என்றே புலிகள் இயக்கம் தமிழ்க் குடும்பங்களிடமும் வர்த்தக உரிமையாளர்களிடமும் கூறியது. ஏனைய பலரிடம், தாங்கள் தமிழீழப் பிரகடனம் செய்யப் போகின்றோம். ஆகவே எமது திறைசேரிக்கு பணம் தேவைப்படுகின்றது என்று அவர்கள் கூறியுள்ளனர். இன்னும் சில இடங்களில் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு, தாங்கள் ஐக்கிய நாடுகள் சபையிடம் (UN) தமிழீழத்திற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, இப் பெருந்தொகை நிதி தங்களுக்கு தேவைப்படுவதாகவும், அதன் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் சபை புதிய தமிழீழ அரசிற்கான நிதியை வழங்கும் எனவும் கூறியுள்ளனர்.[71]

டொரன்டோவில் உள்ள ஒரு குடும்பத்தின் வீட்டிற்கு, ஒரு வாரத்திற்குள் மூன்று முறை அவர்கள் சென்றுள்ளனர். முதல் முறை வரும்பொழுது, வந்த மூவரும் தாங்கள் உலகத் தமிழர் இயக்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வருவதாக கூறியுள்ளனர்.

> தாங்கள் நிதி சேகரிப்பிற்காக பிரபாகரனால் அனுப்பப்பட்டிருப்பதாக அவர்கள் கூறினர். எங்களுடைய முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் பல தகவல்கள் உட்பட பல்வேறு ஆவணங்கள் தங்களிடம் இருப்பதாக அவர்கள் கூறினார்கள். இந்த நிதி எதற்காக சேகரிக்கிறீர்கள் என்று அவர்களிடம் கேட்டபொழுது "நாங்கள் எங்கள் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். இலங்கை இராணுவத்தை வெளியேற்றுவதற்கு இன்னும் இரண்டு மாதங்களே உள்ளன. சகல திட்டங்களும் தயாரிக்கப்பட்டு விட்டன, நாங்கள் இறுதியான ஆதரவையே தமிழ் மக்களிடம் இருந்து இப்போது கேட்கின்றோம்."[72]

அக்குடும்பத்தினரிடம் 5,000 கனேடிய டொலர்கள் தரும்படி அங்குவந்த நபர்கள் கேட்டனர். "அவர்கள் எம்மிடம் பணத்தைக் கேட்கின்ற பொழுது தங்களிடம் இருந்த கோப்பு (file) ஒன்றை பார்த்தனர். நாங்கள் எவ்வளவு காலம் அந்த வீட்டில் வசிக்கின்றோம் என்று கேட்டனர். நாங்கள் அதைக் கூறியதும் அவர்கள, 5,000 டொலர்கள் எனக் கூறினர்."[73]

அக்குடும்பத்தினர் அந்த பணத்தை கொடுக்க மறுத்ததும், அந்த நபர்கள் மீண்டும் இரண்டு முறை அவர்களின் வீட்டுக்கு வந்தனர். ஒரு முறை அவர்கள் வந்த பொழுது தாங்கள், "இறுதி யுத்தத்திற்காகவே" இந்த நிதியை சேகரிப்பதாக திரும்பவும் கூறினர்.[74] 5,000 டொலர்களை வழங்குவதற்காக, 2006 பெப்பிரவரி மாதம் வரை, அக்குடும்பத்திற்கு கால அவகாசம் தரலாம் என அவர்கள் கூறினர். ஆனாலும் அக்குடும்பம் அதற்கு மறுத்துவிட்டது.

---

[70] 2005 நவம்பர், 2006 ஜனவரி, கனடா, டொரன்டோவில், மற்றும் இங்கிலாந்து இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[71] 2005 நவம்பர், 2006 ஜனவரி கனடா, டொரன்டோவில், மற்றும் இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[72] கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[73] Ibid

[74] Ibid



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

25 வருட காலத்திற்கு மேலாக இலண்டனில் வசிக்கும் ஒரு தமிழர், 2005ம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில், புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் தமது வீட்டிற்கு வந்த சம்பவத்தை எமக்கு விபரித்தார்:

> "நாங்கள் இன்று இந்தப் பகுதியிலேதான் நிற்கிறோம். இங்குள்ள ஒவ்வொருவரிடமும் இருந்து பணம் சேர்க்கும்படி வன்னியிலே[75] இருக்கும் எமது தலைவர் கூறியுள்ளார்." என அவர்கள் கூறினர். பின்னர் அவர்கள் 2,000 பவுண்டுகள் தரும்படி கேட்டார்கள். "நீங்கள் இங்கே நிதிப் பங்களிப்பு செய்தால், நீங்கள் இலங்கைக்குப் போய் உங்கள் குடும்பத்தினரைப் பார்க்கலாம். நாங்கள் உங்களுக்கு ஒரு அடையாள( PIN) இலக்கத்தைத் தருவோம். நீங்கள் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமாக நடமாடுவதற்கு அந்த இலக்கம் வகைசெய்யும். இல்லாவிட்டால் உங்களுக்கு பிரச்சினை வரும். நீங்கள் இங்கே நிதி கொடுக்காவிட்டால், இலங்கைக்கு செல்லும்போது, இரண்டு மூன்று மடங்காக அதை நீங்கள் கொடுக்க வேண்டி வரும்."[76]

அந்த அச்சுறுத்தல் காரணமாக தான் கவலையடைந்திருப்பதாக அவர் கூறினார். "எனது பெற்றோரில் ஒருவரும் எனது சகோதர சகோதரிகளும் இலங்கையில் இருக்கின்றார்கள், அவர்கள் எனது பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என நான் விரும்புகின்றேன்."

அந்நிலமை தொடர்பாக அவர் கவலையடைந்தாலும், தான் தொழில் இல்லாமல் இருப்பதாகவும் அதன் காரணமாக தன்னிடம் தருவதற்கு பணம் இல்லை என்றும் அவர் விளக்கியதோடு, நிதி வழங்க மறுக்கவும் முயற்சித்தார். ஆனால் புலிகள் இயக்கம் தன்மீது தொடர்ச்சியாக அழுத்தங்களை இடுவதாக அவர் கூறினார். "நீர் இலங்கையை சேர்ந்தவர் என்றால், நீர் கட்டாயம் தந்துதான் ஆகவேண்டும். அது உமது பொறுப்பு. உமக்கு உமது குடும்பத்தை கவனிக்க வேண்டும் என்றால், அது உமது பிரச்சினை. ஆனால் நாங்கள் விடுதலைப் போராட்டத்திற்காகவே உம்மைப் பங்களிக்கச் சொல்கின்றோம். என அவர்கள் கூறினர்."[77] இறுதியாக, தான் 2,000 பவுண்டுகள் வழங்குவேன் என உறுதி கூறி, அதற்கான ஒப்பந்தம் ஒன்றில் அவர் கையொப்பம் இட்டு இணக்கம் தெரிவிக்கும்வரை, ஒன்றரை மணி நேரத்திற்கு மேலாக புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் அங்கு அமர்ந்திருந்தனர். இலங்கையில் அவரின் குடும்பத்தாரின் முகவரி மற்றும் அவரின் வருமானம் உட்பட பல தகவல்களை கோருகின்ற படிவம் ஒன்றையும் அவர் நிரப்பினார். "அவர்கள், தாங்கள் இணக்கம் தெரிவிக்கும்வரை, அல்லது பிந்தி திகதி இடப்பட்ட ஒரு காசோலையை பெற்றுக்கொள்ளும்வரை, அங்கிருந்து செல்ல மாட்டார்கள். மணிக் கணக்காக குந்தியிருந்து கதைத்துக் கொண்டே இருப்பார்கள், என்று நான் ஏனைய பலரிடம் இருந்து கேள்விப் பட்டிருக்கிறேன்." என்றும் அவர் எம்மிடம் கூறினார்.[78]

2005ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், தான் வியாபாரம் செய்கின்ற மாவட்டத்தில் உள்ள உள்ளுர் தமிழ்க் கடை உரிமையாளர்களை இரகசியமான ஒரு இடத்திற்கு கூட்டம் ஒன்றிற்காக அழைத்துச் செல்லுவதற்கு என்று வாகனங்கள் வந்ததாக, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் இலண்டனில் உள்ள ஒரு வர்த்தகர் தெரிவித்தார். அன்றைய தினம் தன்னுடைய கடைக்கு வந்த புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள், தாங்கள் சகல வர்த்தகர்களுடனும் கதைக்க வேண்டும் எனவும் தன்னை அழைத்துச் செல்வதற்கு 30 அல்லது 60 நிமிடத்திற்குள் தாங்கள் திரும்பி வருவதாகவும் கூறிச் சென்றனர். தனக்கு நேரம் இல்லை என்று கூறி அவர் செல்லவதற்கு மறுத்து விட்டார். ஆனால் தனது

---

[75] வன்னி என்பது, இலங்கையின் வட பகுதியில் புலிகள் இயக்கத்தின் தலைமையகம் அமைந்திருக்கும், புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசமாகும்.
[76] இங்கிலாந்து, இலண்டனில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[77] Ibid
[78] Ibid

மாவட்டத்தில் உள்ள 25 வர்த்தக உரிமையாளர்கள் பங்குபற்றிய கூட்டத்தைப் பற்றி அவர் வேறு ஒருவரிடம் இருந்து தெரிந்து கொண்டார். பிரிட்டிஷ் தமிழச் சங்கம் மற்றும் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள், அக்கூட்டத்தில் பேசியதாகவும் அவர்கள் "இறுதி போருக்கு" வர்த்தக உரிமையாளர்கள் நிதி வழங்க வேண்டும் என்று கோரியதாகவும்,

அதன்படி பல கடை உரிமையாளர்கள் அக்கூட்டத்தில் வைத்து ஒரு குறிப்பிட்ட தொகையை தாங்கள் வழங்குவதற்கு ஒப்புக்கொண்டு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டதாகவும் அவர் அறிந்து கொண்டார். அனேகமான மக்கள் பணத்தை வழங்குகின்றார்கள். சிலர் ஒரு இலட்சம் பவுண்டுகள் கூட கொடுக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு கொடுக்க மறுக்கின்ற பட்சத்தில், "அப்படியானால், நீங்கள் இனி இலங்கைக்கு திரும்பி போக மாட்டீர்கள்" என அவர்களுக்கு கூறப் படுகின்றது.[79]

அச்சந்திப்பு நடந்து அதிக நாட்கள் செல்லுவதற்கு முன்னரே அவரின் கடைக்கு வந்த மூன்று நபர்கள் அவரிடம் 50,000 பவுண்டுகள் தரவேண்டும் எனக் கேட்டனர். "எல்லாக் கடைக்காரர்களிடமும் தாங்கள் 50,000 பவுண்டுகள் தரவேண்டும் என நாங்கள் கேட்டுள்ளோம், என அவர்கள் கூறினர். அவ்வளவு தொகையை நான் உங்களுக்கு தந்தால் எனது கடையை மூடிவிட வேண்டியதுதான் என நான் அவர்களிடம் கூறினேன். அப்படியானால், என்னால் அதிக பட்சம் எவ்வளவு தொகையை தரமுடியும் என அவர்கள் கேட்டனர். நான் என்னிடம் பணம் இல்லை என்று அவர்களிடம் கூறினேன் ஆனால் அவர்கள் தாம் இன்னும் ஒரு மாதத்தின் பின் திரும்பி வருவதாக கூறிச் சென்றார்கள். தான் பொருளாதாரக் காரணங்களுக்காகவும் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் உட்பட சிறார்களை படைகளில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றியெல்லாம், புலிகள் இயக்கத்திற்குள் உள்ள தனது உறவினர் ஒருவருக்கு உடாக அறிந்துள்ளதாலும் புலிகளுக்கு நிதி வழங்க தான் விரும்பவில்லை என அவர் மனித உரிமை கண்காணிப்புக் குழுவிற்கு தெரிவித்தார்.

பல வாரங்கள் கழிந்த பின்னர் முதல் முறை வந்த அதே மூன்று நபர்கள் திரும்பவும் வந்ததாக அக்கடை உரிமையாளர் எம்மிடம் கூறினார். "நாங்கள் புலிகள் இயக்கத்தில் இருந்து வருகின்றோம். நாங்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டுபோகவே வந்தோம், என அவர்கள் என்னிடம் கூறினர்." கடை உரிமையாளர் தன்னிடம், தருவதற்கு பணம் ஏதும் இல்லை என மீண்டும் கூறினார். அவர் தான் பொலிசாரை அழைக்கப் போவதாக அச்சுறுத்திய பின்னரே அவர்கள் அங்கிருந்து நகர்ந்தனர்.[80]

2005ம் ஆண்டு டிசம்பரில், புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிக்கும் நடவடிக்கையானது டொரன்டோவில் மிக தீவிரப்படுத்தப்பட்டதாக பல்வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன. தனது தொழில் காரணமாக அதிக எண்ணிக்கையான தமிழர்களோடு தொடர்பு கொண்டுள்ள ஒரு தமிழர் எம்மிடம் கூறும்பொழுது, தனக்கு தெரிந்த 70, 80பேர்களிடம் பணம் கேட்கப்பட்டுள்ளது, அவர்களில் பெரும்பாலானோர் பணம் கொடுத்து உள்ளனர் என்பதும் தனக்கு தெரியும், என்றும் கூறினார்.[81] அவர்களின் நிதி திரட்டும் செயற்பாடு அதிகரித்து இருக்கிறதா என அவரிடம் கேட்டபொழுது, "நிட்சயமாக. முன்னர் இவ்வளவு அதிகமானவர்களிடம் அவர்கள் சென்று பணம் கேட்கவில்லை. ஆனால் இப்பொழுது எல்லோரும் அதைப்பற்றி பேசுகின்றனர். 2,000-3,000 கனேடிய டொலர்களை வழங்கிய அதிகமான நபர்களுடன் நான் கதைத்து இருக்கிறேன். அவர்கள் (புலிகள் இயக்கம்)

[79] 2005 நவம்பரில், இங்கிலாந்து, இலண்டனில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[80] 2006 ஜனவரியில், இங்கிலாந்து, இலண்டனில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[81] 2006 ஜனவரியில், கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

www.tamilarangam.net

பெருந்தொகையான பணத்தை சேகரிக்கிறார்கள். அவர்களுக்கு நிறைய பணம் கிடைக்கின்றது."[82]

டொரன்டோவில் உள்ள ஒரு பெண் எம்மிடம் கூறும்பொழுது, "எனது அக்கம் பக்கத்தில் ஆறு குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் எல்லோருடனும் கதைத்தேன். அவர்கள் எல்லோரினதும் வீட்டிற்கும் வந்துள்ளனர்." ஒவ்வொரு குடும்பத்தினரினதும் வருமானம் மற்றும் சொத்துக்களின் அடிப்படையிலேயே அக்குடும்பங்களிடம் கேட்கப்படும் தொகை வித்தியாசப்படுவதாக அவர் நம்புகின்றார். தமது வீட்டு அடைமானத் (Mortgage) தொகையை செலுத்தி முடித்த குடும்பம் ஒன்றிடம் 10,000 கனேடிய டொலர்கள் கேட்கப்பட்ட அதேவேளை சிறிய வீடு ஒன்றில் வாழ்ந்த இன்னும் ஒரு குடும்பத்தினரிடம் 2,000 கனேடிய டொலர்கள் கேட்கப்பட்டுள்ளது.[83]

பல ஆயிரம் டொலர்களை வழங்க வேண்டும் என தாங்கள் மிகவும் அழுத்தப்பட்டதாக, டொரன்டோவில் வாழும் இன்னும் ஒரு குடும்பம் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறியது. தாங்கள் பணம் தரமாட்டோம் என அக்குடும்பம் திரும்பத் திரும்ப கூறியதன் பின்னர். புலிகள் இயக்கத்தினர் அவர்களிடம் ஒரு படிவத்தைக் கொடுத்து, "அப்படியானால் நீங்கள் இப்படிவத்தை நிரப்பி, புலிகள் இயக்கம் செய்பவற்றை நீங்கள் நம்பவில்லை என எழுதித் தரமுடியுமா?" எனக் கேட்டார்கள். அதற்கும் கணவன் மறுத்துவிட்டார். "அதன் பின்னர் அவர்களே அவ்விண்ணப்ப படிவத்தை எழுதி அதை பின்புறம் திருப்பி அதில் என்னை கையொப்பம் இடும்படி கேட்டனர். என்று அவர் தெரிவித்தார்.[84]

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவிக்கப்பட்ட இன்னுமொரு சம்பவத்தில், புலிகள் இயக்கத்திற்கு பணம் கொடுக்க மறுத்த டொரன்டோவில் வாழும் ஒரு குடும்பத்தினரின் வீடு சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டது. என்று கூறப்பட்டது. குற்றவாளிகள் யார் என்பதை பொலீசாரால் இன்னும் இனங்காண முடியாது இருக்கின்ற அதே வேளை, இதற்கு புலிகள் இயக்கமே பொறுப்பு என்று அக்குடும்பத்தினர் நம்புகின்றனர். அதே முகவரியில் தொடர்ந்து தங்கி இருப்பதற்கு அச்சம் அடைந்ததனால் அக்குடும்பம் வேறு ஒரு வீட்டிற்கு இடம்மாறி உள்ளதாக சொல்லப்படுகின்றது.[85]

2005 ஒக்டோபரில், டொரன்டோப் பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரிடம் வந்த புலிகள் இயக்கத்தினர் 8,000 கனேடிய டொலர்கள் செலுத்தும்படி கேட்டனர். தன்னுடைய வியாபாரத்தில் தான் பிரச்சினைக்கு முகம் கொடுத்து இருப்பதாகவும் தன்னிடம் தருவதற்கு பணம் இல்லை என்றும் அவர் கூறினார். மீண்டும் சில வாரங்களின் பின்னர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு நபர்கள் அவ் வர்த்தகரிடம் வந்தனர். இந்தமுறை அவர்கள், 20,000 கனேடிய டொலர்களை அவர் தரவேண்டும் எனக் கேட்டனர். அவர்களுக்கு பங்களிப்புச் செய்வதற்கு தன்னிடம் பணம் ஏதும் இல்லையென அவர் மீண்டும் அவர்களிடம் சொன்னார். "ஏனையவர்களுக்கும் பணம் தருவதற்கான வசதி இல்லைதான், ஆனால் அவர்கள் எப்படியாவது ஒரு வழியைக் கண்டுபிடிக்கிறார்கள். இது உங்களுடைய கடமை. இங்கிருந்து நீங்கள் உங்கள் சமூகத்திற்கு உதவி செய்ய வேண்டும். இது திரு.பிரபாகரனின் கோரிக்கை. யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும்." என்றனர்.

---

[82] Ibid

[83] 2006 ஜனவரியில், கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[84] 2006 ஜனவரியில், கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[85] 2006 ஜனவரி 12ல், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு கிடைத்த மின்னஞ்சல் தகவல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தான் தொடர்ச்சியாக பணம் தருவதற்கு மறுத்தபொழுது, "நீர் பங்களிப்பு செய்ய விரும்பாவிட்டால், நீர் விரும்பவில்லை என நேரடியாகச் சொல்லும்" என புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சொன்னதாக அவ் வர்த்தகர் எம்மிடம் கூறினார். பொருளாதார ரீதியான நிலமை காரணமாகவே தன்னால் பங்களிப்பு செய்ய முடியாமல் இருப்பதாக அவ் வர்த்தகர் மீண்டும் சொன்னார். அதற்கு புலிகள் இயக்கத்தினர் இறுதியாக, "சரி எங்களுக்கு உதவி செய்ய நீர் விரும்பவில்லை என்று நாம் புரிந்து கொள்கின்றோம். ஆனால் விரைவில் நீர் ஒரு பாடம் படிப்பீர். உமது மனைவி பிள்ளைகள் பற்றி நீர் கவலைப்படவில்லை என்றே நாம் நினைக்கின்றோம்."[86] அவ்வர்த்தகர் தனது மனைவி பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவலையடைந்து உள்ளாரா, என மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அவரிடம் கேட்டபொழுது, "ஆம், நிட்சயமாக" என அவர் தெரிவித்தார்.

### *பணம் கொடுப்பதற்கான நெருக்குவாரங்கள்.*

தமிழ் புலிகள் இயக்கம் தொடர்பாக புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் பல்வேறுபட்ட பார்வைகளைக் கொண்டிருப்பதுடன், மிகச்சிக்கலான பல காரண காரியங்களின் அடிப்படையில் இருந்தே, தாங்கள் நிதி உதவி செய்வதா இல்லையா என்பது பற்றிய தீர்மானத்தை அவர்கள் எடுக்கின்றனர். மேலே ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல பலர் புலிகள் இயக்கத்திற்கு தீவிரமான ஆதரவாளர்களாக இருப்பதோடு புலிகள் இயக்கத்தை தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பாக மிக முக்கியமான செயல் தன்மை வாய்ந்த பிரதிநிதியாகவே காண்கின்றனர். புலிகள் இயக்கத்தினால் வடக்கு கிழக்கு பிரதேசங்களின் சுதந்திரத்திற்காக நடத்தப்படுகின்ற இராணுவ ரீதியான போராட்டத்தை அவர்கள் நம்புகின்ற அதே வேளை "அக் குறிக்கோளுக்கு" சுய விருப்புடன் நிதி உதவிகளை வழங்குகின்றனர்.

தமிழ் சமூகத்தில் உள்ள ஏனையவர்கள், புலிகள் இயக்கத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை ஆதரிக்காதவர்களாக இருந்தாலும் தமிழ் சமூகத்தினுள் தங்கள் வர்த்தக நலன்களை உயர்த்துவதற்காக அல்லது தமிழ் சமூகத்தினுள் தங்களினது இருப்புக்களை பாதுகாத்துக் கொள்வதற்காக நிதி வழங்குகின்றனர்.

ஏற்கனவே இவ்வறிக்கையில் பேசப்பட்டது போல, இலங்கையில் குடும்பங்கள் மற்றும் சொத்துக்களை கொண்டிருப்பவர்கள், தாங்கள் இங்கு பணம் கொடுக்காவிட்டால் தங்களது குடும்பத்தினருக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள், மற்றும் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படலாம் என்பவற்றைக் கருத்தில் கொண்டே, அவர்களக்கு நிதி வழங்குகின்றனர். புலிகள் இயக்கத்தோடு எவ்விதமான பிரச்சினைகளையும் ஏற்படுத்திக் கொள்ளாத விதத்தில், தமது குடும்ப அங்கத்தினர்களைச் சென்று பார்த்து வருவதற்கான சூழ்நிலையை பேணிக் கொள்ளுதல் வேண்டும் என்றும் அவர்கள் கருதுகின்றனர். சில தமிழர்கள் எம்மிடம் கருத்து தெரிவிக்கையில், புலிகள் இயக்கத்திற்கு தாங்கள் நிதி வழங்காவிட்டால் தாங்கள் இலங்கைக்கு போக முடியாது. என்றும், அவ்வாறு சென்றால் தங்களுக்கு "பிரச்சினை" வரலாம் என்றும் கூறினர். தங்களுக்கு பணம்தர மறுப்பதன் மூலம் இலங்கையில் உள்ள குடும்ப அங்கத்தவர்கள் ஆபத்தான நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்று புலிகள் இயக்கத்தினர் கூறி உள்ளனர், என சிலர் தெரிவித்தனர். இலண்டனில் வசிக்கும் ஒரு தமிழர் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் கருத்து தெரிவிக்கின்ற பொழுது, "உங்களை வெருட்டலாம் என அவர்கள் உணர்ந்து விட்டால், நீங்களும் அவர்களால் நெருக்குவாரத்திற்கு உட்படுத்தப்படுவதாக உணர்ந்தீர்களானால், அவர்கள் ஒட்டு மொத்தமாக இப்படிச் சொல்லுவார்கள். 'உங்களை

---

[86] 2006 ஜனவரியில், கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

www.tamilarangam.net

எப்படிக் கையாளுவது என்று எங்களுக்குத் தெரியும். உமக்கு ஊரில் அப்பா, அம்மா, ஒரு குடும்பம் இருப்பதும் எமக்குத் தெரியும். அது எல்லாவற்றிற்கும் ஒரு வழி பார்ப்போம்'." என அவர்கள் கூறுவார்கள்.[87]

இலங்கையில் புலிகள் இயக்கத்தினர் தமிழர்களை கடத்திச் சென்று பணயமாக வைத்துக் கொண்டு, வெளிநாடுகளில் உள்ள அவர்களின் குடும்ப உறவினர்கள் பெருந்தொகைப் பணத்தை புலிகள் இயக்கத்திற்கு செலுத்தும் வரைக்கும் அவர்களை தடுத்து வைக்கின்றனர் எனவும் அந்த நபர் எம்மிடம் கூறினார்.

> அங்கே எமது நாட்டில் கடத்தல்கள் நிகழ்கின்றன. குறிப்பாக வியாபாரிகள் அல்லது ஒப்பீட்டளவில் வசதியுடன் இருந்து கொண்டு புலிகள் இயக்கத்திற்கு பணம் கொடுக்க மறுத்தவர்கள், மற்றும் வெளிநாடுகளில் தமது பிள்ளைகள் இருப்பதால் வசதியோடு இருப்பவர்கள் - என பலதரப்பட்ட நபர்கள் அங்கு கடத்தப் படுகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டிலேதான் தொடக்கி வைக்கப்படுகின்றன. ஒரு அளவு கணிசமான பணத்தை வைத்துக்கொண்டு பெரிதாக அதைப் பயன்படுத்தாமல் இருப்பவர்களை அவர்கள் இலக்கு வைக்கின்றனர். அவ்வாறான நபர்களின் அனேகமான பிள்ளைகள் அல்லது உறவினர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்தால் அவர்கள் கடத்தப்படுகின்றனர். அதனைத் தொடர்ந்து இங்குள்ள அவர்களின் உறவினர்கள் பணத்தைச் சேகரித்து ஊருக்கு அனுப்புவார்கள். இவ்வாறான சம்பவங்கள் இங்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, இது தங்களுக்கும் நிகழக்கூடும் என உணர்பவர்கள் அதிகம் கேள்வி கேட்காமல் பணத்தை கொடுத்து விடுகின்றனர். இவ்வாறு நிகழ்ந்த பல நபர்களை எனக்கு நேரடியாகத் தெரியும், இது போன்றவை கடந்த காலங்களில் நிறையவே நிகழ்ந்துள்ளன.[88]

தமிழ் சமூகத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் தொழில்துறை சார்ந்தவர்கள் (Professionals) போன்றவர்களுக்கு இந் நெருக்குவாரம் இன்னும் அதிகம். இந் நபர்கள் தமது வர்த்தகம் மற்றும் தொழில்துறை போன்றவற்றில் மிகப்பெரும் பங்குக்காக தமிழ் சமூகத்தின் மீதே தங்கி இருக்கின்றனர். எனவே, தாங்கள் புலிகள் இயக்கத்திற்கு எதிரானவர்கள் என முத்திரை குத்தப்பட்டுவிட்டால் தமது வாடிக்கையாளர்களை இழக்க வேண்டி வரலாம் என அவர்கள் அஞ்சுகின்றனர். "நான் தொடர்ந்து அவர்களுடைய கோரிக்கைகளை புறக்கணித்துக் கொண்டிருந்தால் அவர்கள் என்னை புலிகள் இயக்கத்திற்கு எதிரான ஒருவர் என முத்திரை குத்துவதோடு, என்னோடு எந்த விதமான கொடுக்கல் வாங்கலும் செய்ய வேண்டாம் என தமிழ் மக்களிடம் கூறுவார்கள்" என்று, ஒரு கடை உரிமையாளர், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறினார்.[89] ஒரு வழக்கறிஞர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறுகின்ற பொழுது, "தொழில்துறை சார்ந்த அனேகமானவர்கள், அவர்களுக்கு பணம் வழங்குவதற்கு காரணம், பணம் கொடுக்காவிட்டால் உலகத் தமிழர் இயக்கம் தங்களைப்பற்றி மோசமான பிரச்சாரங்களை மேற்கொள்ளும், அதனால் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளின் காரணமாக தாம் தமது வாடிக்கையாளர்களை இழக்க நேரிடும் என்று அவர்கள் அச்சம் அடைகின்றனர்.[90]

இன்னும் சில சந்தர்ப்பங்களில், தாங்கள் மீண்டும் மீண்டும் தொலைபேசியால் அழைக்கப்பட்டு தொந்தரவு செய்யப்படாமல் இருக்க வேண்டும், மீண்டும் மீண்டும் அவர்கள் வருவார்கள் எனகின்ற காரணத்திற்காகவே சிலர் பணம் தருவதற்கு ஒத்துக்கொண்டு விடுகின்றனர்.

---

[87] 2005 நவம்பர் 8ல், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு கிடைத்த மின்னஞ்சல் தகவல்.
[88] 2005 நவம்பர் 8ல், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு கிடைத்த மின்னஞ்சல் தகவல்.
[89] 2005 நவம்பரில், கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[90] 2005 நவம்பரில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

www.tamilarangam.net

முடிவாக, தமிழ் சமூகத்தில், ஒரு குறிப்பான பிரிவினர் (கிடைக்கப்பெற்ற அனேகமான தகவல்களில் இருந்து, ஒரு கணிசமான சிறுபான்மையினர்) புலிகள் இயக்கத்தை தீர்கமாக எதிர்க்கின்றனர். அவர்களில் சிலர் முன்னர் புலிகளின் செயற்பாட்டிற்கு ஆதரவாளர்களாக இருந்து, தற்போது, ஒன்றில் புலிகள் இராணுவரீதியாக தமது இலக்குகளை ஒருபோதும் அடையப்போவது இல்லை என முடிவுக்கு வந்தவர்கள். அல்லது புலிகள் மேற்கொள்ளுகின்ற மனித உரிமை மீறல்கள், தமக்கு எதிரான அரசியல் செய்பவர்களை கொலை செய்தல் சிறார்களை படைகளில் சேர்த்தல், போன்று அவர்கள் தொடர்ந்து செய்கின்ற அத்துமீறல் செயல்களினால் புலிகளைப்பற்றி வெறுப்படைந்திருப்பவர்கள் ஆவர். இக்குறிப்பிட்ட குழுவினருள் சிலர் தமக்கு வேறு வழி இல்லை என உணர்வதால் புலிகள் இயக்கத்திற்கு நிதி வழங்கக் கூடும். அதே வேளை, ஏனையவர்கள் கொள்கை அடிப்படையில் அவர்களுக்கு நிதி வழங்க மறுக்கின்றனர்.

“அவர்களுக்கு நிதி வழங்குகின்ற அனேகமானவர்கள், போராட்டத்திற்காக என்று நிதியை வழங்குவதில்லை. என்றே நான் நினைக்கிறேன். அவர்கள் அச்சத்தினாலேயே அதனை வழங்குகின்றனர்.”[91] என்று, இலண்டனில் உள்ள ஒரு தமிழர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார். 2005ம் ஆண்டு பிற்பகுதியில், டொரன்டோவில் மருத்துவ தொழிற் துறையில் ஈடுபட்டுள்ள ஒருவரின் காரியாலத்திற்கு, ஒரு குறிப்பிட்ட 10 நாட்களுக்குள் மட்டும், புலிகள் இயக்கத்தினர் தொடர்ச்சியாக மூன்று முறை வந்தனர். ஒவ்வொருமுறை அவர்கள் வரும்பொழுதும், தான் நோயாளிகளுடன் வேலையில் இருப்பதால் தனக்கு கதைப்பதற்கு நேரம் இல்லை என அவர் கூறியுள்ளார். அவர் மேலும் எம்மிடம் கூறும்பொழுது “அவர்கள் வர்த்தகர்களிடம் பணம் கேட்கிறார்கள் என நான் கேள்விப்பட்டிருந்தேன்” என்றார். இருந்தாலும் அதிக விபரங்களைத் தரும்படி அவர் அழுத்தப்படவில்லை. “இங்கே, நீங்கள் யாரோடு பேசுகிறீர்கள் என்பது உங்களுக்கு தெரியாது, அவர்களுக்கு சாதகமானவர்களா இல்லையா என்பதும் தெரியாது”. அவருக்கும் யாழ்ப்பாணத்தில் உறவினர்கள் இருக்கின்றனர். “அவர்களுக்கு என்ன நடக்குமோ என நாங்கள் அச்சப்படுகின்றோம்.”[92]

### *மறுப்பதற்கும் எதிர்ப்பதற்குமான முயற்சிகள்.*

புலிகள் இயக்கம் பணம் கேட்கின்ற பொழுது மிகச் சில தனிநபர்களே நேரடியாக அதை மறுக்கத் துணிகின்றனர். இந்த அடிப்படையில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இவ் அறிக்கைக்காக நேர்காணல் செய்த பல தனிநபர்களைப் போன்றவர்களே, தமிழ் சமூகத்தில் அதிகமாக இருக்கின்றாகள் என்பது இல்லை. தமது அனுபவங்களைப் பற்றி மனித உரிமைகள் அமைப்புக்களுடன் துணிந்து பேசக்கூடியவர்களாக இருக்கும் தனிநபர்கள் அனேகமாக புலிகள் இயக்கத்திற்கு எதிராக துணிந்து முகம் கொடுக்கிறார்கள். மனித உரிமை கண்காணிப்பு அமைப்புக்கு தெரியவந்த ஏனைய பல சம்பவங்களில், பல நபர்கள் அழுத்தங்கள் காரணமாக பணம் கொடுத்திருந்தாலும் தங்களைப் பற்றிய விபரம் வெளியே வந்தால் புலிகள் இயக்கத்தினால் பின் விளைவுகள் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தினால் எம்முடன் கதைப்பதை விரும்பவில்லை.

இவ்வறிக்கைக்காக நேர்காணல் செய்யப்பட்ட பலர், தாங்கள் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடைமுறைகளை ஆதரிக்காதததினாலும், அவர்களுக்கு நிதி வழங்க மறுத்ததினாலும், நிதி வழங்க வேண்டும் என்று தொடர்ச்சியான அழுத்தங்கள் அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. “நீங்கள் பயப்பட்டால், அவர்கள் வந்து

[91] 2005 டிசம்பரில், இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[92] 2005 நொவம்பரில், கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

குந்திவிடுவார்கள். ஆனால் எப்படியோ நீங்கள் கொடுக்க மாட்டீர்கள் என்று தெரிந்து கொண்டால் அவர்கள் போய்விடுவார்கள்."[93] என புலிகளுக்கு நிதி வழங்க மறுத்த டொரன்டோவில் உள்ள ஒருவர் எம்மிடம் கூறினார். அதேபோல் இன்னும் ஒரு நபர் எம்மிடம் கூறுகின்ற பொழுது "நீங்கள் பயப்பட்டால் அவர்கள் உங்களை அழுத்துவார்கள், நீங்கள் உறுதியாக நின்றால், அவர்கள் பின்வாங்குவார்கள்."[94]என்றார்.

எவ்வாறாயினும் அவ்வாறு உறுதியாக மறுப்பு தெரிவிப்பதனால் அக் குடும்பத்தை பேசாமல் விட்டுவிடுவார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. 2006 ஜனவரியில் டொரன்டோவில் வாழ்ந்த ஒரு தமிழரின் வீட்டிற்கு உலகத் தமிழர் இயக்கத்தின் பிரதிநிதிகள் என தம்மை இனங்காட்டிக்கொண்ட இரு நபர்கள் வந்தனர். அந்த நபர் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களிடம் கேள்விகளை எழுப்பியதோடு, தான் புலிகள் இயக்கதை ஆதரிக்கவில்லை எனவும் கூறினார். அதற்கு உலகத் தமிழர் இயக்கத்தின் பிரதிநிதிகள், "நாங்கள் உன்னை கவனித்துக் கொள்ளுகின்றோம்" என அச்சுறுத்தினர். [*"நீ கவனமாய் இரு, உன்னைக் கவனிப்போம், நீ போறதைப் பார்ப்போம்"*] "போன்ற சொற்தொடர்களை ஆங்கிலம் பேசும் ஒருவருக்கு மொழி பெயர்த்தால் அவர்கள் அது பற்றி பெரிதாக எடுக்கமாட்டார்கள். ஆனால் தமிழர் ஒருவருக்கு இவற்றின் அர்த்தம் புரியும். , நீ கொல்லப்படுவாய் என்பதே அதன் தாற்பரியம்" என அவர் தெரிவித்தார்..[95]

நேரடியாக மறுப்பு சொல்லுதல் மிக குறைவாகவே இருந்தாலும், பணம் கொடுப்பதை தவிர்த்துக் கொள்வதற்கு புலம்பெயர் சமூகத்தைச் சேர்ந்த பலர் பல்வேறு விதமான வழிமுறைகளை பாவிக்கின்றனர். புலிகள் இயத்தால் நிதி சேகரிப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட குடியிருப்பு அல்லது வீட்டுக் கட்டிடத் தொகுதிக்குள் வந்தால், சில குடும்பங்கள் தங்களுடைய வீடுகளுக்கு அவர்கள் வந்து போனதுமே, தமது அயலவர்களை தொடர்பு கொண்டு, நிதி சேகரிப்பவர்கள் இப்பகுதியில் நிற்கிறார்கள், எச்சரித்து விடுவார்கள். உடனே பலரும் நிதி சேரிப்பாளர்கள் தங்களின் கதவுகளை தட்டுகின்ற பொழுது வீட்டில் ஒருவரும் இல்லை என்பதுபோல் பாசாங்கு பண்ணி கதவுகளைத் திறப்பதில்லை..

ஏற்கனவே மேலே பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டதுபோல, நிதி சேகரிப்பாளர்கள் தனிநபர்களை அணுகுகின்றபொழுது, அவர்கள் அனேகமாக தங்களுக்கு பொருளாதாரப் பிரச்சினை இருப்பதாகவும், அதனால் பணம் தரமுடியாமல் இருப்பதாகவும் கூறுகின்றார்கள். தங்களிடம் இருந்த பணம் எல்லாவற்றையும் தங்களது தொழிலில் முதலீடு செய்துவிட்டோம், அல்லது தாங்கள் தொழில் இல்லாமல் இருக்கிறோம், அல்லது மிகுந்த குறைந்த சம்பளமே எடுக்கின்றோம், அல்லது தாங்கள் தமது குடும்பத்தைக் கவனிக்க வேண்டும் போன்ற காரணங்களை சொல்லுகின்றனர். அவர்கள் கேட்கும் முழுமையான தொகையை கொடுப்பதைத் தவிர்ப்பதற்காக, மேற்சொன்ன காரணங்களைக்கூறி குறைந்த ஒரு தொகையை வழங்குவதற்காக கதைத்துப் பார்ப்பார்கள். இவ்வாறான காரணங்கள் தொடர்பாக புலிகள் இயக்கம் அதிக இரக்கம் காட்டுவதில்லை. இவ்வாறான காரணங்களை சொல்ல முயற்சித்தவர்களுக்கு, நீங்கள் யாரிடமாவது பணத்தை வாங்கித் தாருங்கள், வங்கி அட்டைகளைப் பாவித்து அல்லது, உங்கள் வீடுகளை அடைமானம் வைத்து நிதியை வழங்குங்கள் என புலிகள் இயக்கத்தின் நிதி சேகரிப்பாளர்களால் கூறப்பட்டுள்ளது. இலண்டனில் தொழில் இல்லாமல் இருக்கும் தனிநபரை நிதி

[93] 2006 ஜனவரியில், கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[94] 2006 ஜனவரியில், கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[95] 2006 ஜனவரியில், கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

www.tamilarangam.net

சேகரிப்பிற்காக அணுகிய பலிகள் இயக்கத்தினர், தங்களுக்கு நிதி தருவதற்காக அவர் ஒரு நாளைக்கு ஒருவேளை உணவை குறைத்துக் கொள்ள வேண்டும் அவர்களால் கேட்கப்பட்டுள்ளார்.[96]

## *நிதி திரட்டுதலும் பலாத்கார பணப்பறிப்பும்*

புலிகள் இயக்கமானது வெறுமனே தீவிரமானதொரு நிதி சேகரிப்பு உபாயங்களில் மட்டுமே ஈடுபட்டுள்ளது, ஒவ்வொரு தனிநபரும், அவனோ அவளோ, தாங்கள் நிதி வழங்கப் போகிறோமா இல்லையா என்பதை அவர்களே சுதந்திரமாக முடிவெடுக்கலாம், என்பதே சிலரின் வாதமாகும். ஆனால் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சேகரித்த சாட்சியங்கள் மற்றும் தகவல்களின்படி, நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக புலிகள் இயக்கத்தினர் பல்வேறு சம்பவங்களில மேற்கொண்டுள்ள அழுத்தங்களின்படி அது பலாத்கார பணப்பறிப்பு என்ற அர்த்தத்தையே தருகிறது [97] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் நேர்காணல் செய்யப்பட்ட பலர், தாம் நிதி கொடுக்கமாட்டோம் என மறுத்த பொழுது நேரடியாகவே அச்சுறுத்தப்பட்டுள்ளனர். ஏனையவர்கள், இங்கே நிதி பங்களிப்புச் செய்யாவிட்டால், ஒன்றில் இலங்கையில் தங்கள் குடும்ப அங்கத்தவர்களைப் பார்க்கப் போவதற்கு முடியாமல் போகும், அல்லது வெளியிலே சொல்ல முடியாத வகையில "பிரச்சினைகளுக்கு" முகம்கொடுக்க வேண்டிவரும், என கூறப்பட்டுள்ளனர். இத்துடன் புலிகள் இயக்க அல்லது உலகத் தமிழர் இயக்க பிரதிநிதிகள், அச்சுறுத்தி பணியவைக்கும் பாணியிலான நடத்தைகளிலும் ஈடுபடுகின்றனர். உதாரணமாக, மேலே குறிப்பிட்ட அந்த குடும்பத்தினரிடம், அவர்கள் நிதி வழங்க மறுப்பதற்கு காரணமாக, அவர்கள் புலிகள் இயக்கத்தின் போராட்டத்தை தாங்கள் ஆதரிக்கவில்லை என்று கூறுகின்ற அறிக்கை ஒன்றை எழுதி, அதில் கையொப்பமிட்டுத் தரும்படி அவர்களை வற்புறுத்திய சம்பவத்தை கூறலாம்.

அத்துடன் மேலே விபரித்தபடி, இலங்கையில் நடத்தப்படுகின்ற அரசியல் கொலைகள், மற்றும் மேற்கு நாடுகளின் பத்திரிகையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் வன்முறை ரீதியான தாக்குதல்கள் மற்றும் சேறடிப்பு பிரச்சாரங்கள் என்பவற்றினால், தமிழ் சமூகத்தினரிடையே உருவாகியிருக்கும் பீதிக் கலாச்சாரம் ஆனது, புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கோரிக்கைகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் எதிர்ப்பும் இன்றி அவர்களை இணங்கிப்போக வைக்கின்றது. நேரடியான அச்சுறுத்தலுக்கான அவசியம் அருகி இருப்பதற்கான காரணி யாதெனில், மேற் சொன்ன சம்வங்கள் சமூகத்திற்கு நன்கு தெரியும் என்பதும் இச் சம்பவங்களின் வடிவமைப்பு மக்களை ஒரு பயச் சூழலில் ஆழ்த்தியிருப்பதுமாகும்.

---

[96] 2005 நவம்பரில், இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[97] உதாரணமாக பலாத்காரப் பணப்பறிப்பு தொடர்பாக, கனடாவின் குற்றவியல் சட்ட விதியானது பின்வருமாறு வரையறுக்கிறது: ஒரு நபரை, அச்சுறுத்தல்கள், குற்றஞ்சாட்டுதல்கள், அதட்டுதல்கள், அல்லது வன்முறைகள் மூலம் தூண்டுதல் அல்லது தூண்டுவதற்கு முயற்சித்தல் மூலமாக, நியாயமான காரணங்கள் அல்லது நியாயப்படுத்தல்கள் ஏதுமில்லாமலும் ஏதாவதொன்றை எடுத்துக்கொள்ளும் நோக்கிலும்......... ஏதாவதொன்றை செய்தல் அல்லது எதாவதொன்றை செய்வதற்கு வகை செய்தல். கனடாவின் குற்றவியல் சட்ட விதி, பிரிவு 346. பிரத்தானிய சட்டப்படி, பலாத்காரப் பணப்பறிப்பு நடவடிக்கையானது இவ்வறிக்கையில் விபரிக்கப்பட்டதன்படி அச்சுறுத்திப் பறிப்பதாகும் (Blackmail), அது பின்வரும் பிரிவுகளுக்கூடாகவும் வரையறுக்கப்படுகின்றது: தனக்கோ அல்லது இன்னொருவருக்கோ இலாபத்தை ஏற்படுத்துவதற்காக, மற்றவருக்கு இழப்பை ஏற்படுத்துகின்ற நோக்கத்தில், எந்தவிதமான அனுமதிகளும் இன்றி அச்சுறுத்தி கோருவாரானால், ஒரு நபர் அச்சுறுத்திப் பறித்தல் செய்தமைக்காக குற்றவாளியாகிறார். திருட்டு சம்பந்தமான இங்கிலாந்துச் சட்டம் 1968, பிரிவு 21 (1).



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டொரன்டோவில் உள்ள ஒரு செயற்பாட்டாளர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறுகின்றபொழுது, வெளிநாடுகளில் நேரடியான வன்முறைச் சம்பவங்கள் அடிக்கடி நிகழாவிட்டாலும்,

> புலிகள் இயக்கம் அடிக்கடி வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடாமல் இருந்தாலும் ஏற்கனவே நிகழ்ந்துள்ள ஒருசில சம்பவங்கள் அதற்கான தேவையை பூர்த்தி செய்கின்றன. புலிகள் இயக்கத்தினால் நிகழக்கூடிய வன்முறைகள் மற்றும் தீங்குகள் என்பவற்றுக்கு அவர்களது எச்சரிக்கையும் சமிக்ஞையும் போதுமானது.. மேலோட்டமாக பார்க்கின்ற பொழுது சுமுகமாகத் தோன்றினாலும், அச்சம்பவங்களின் தாக்கமானது மிகவும் கணிசமானதாகும். புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர்களோ, தாங்கள் எப்பொழுதும் வெளிப்படையாக அச்சுறுத்தல் மற்றும் நெருக்குவாரமளித்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்று கூறுகின்றனர். ஆனால் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அவ்வாறு வெளிப்படையாக செய்ய வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதும், எதையும் செய்யக்கூடியவர்கள் என்பதும் எல்லோருக்கும் தெரியும்.[98]

## *உலகத் தமிழர் இயக்கத்தின் பதில்கள்*

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் பேசிய, கனடா, உலகத் தமிழர் இயக்க தலைவர், சித்தா சிற்றம்பலம், “உலகத்தமிழர் இயக்கமானது கனடாவில் வாழுகின்ற தமிழர்களின் நலன்களுக்காக பணியாற்றுகின்ற அதேவேளை, அங்கு நாட்டிலே நடக்கின்ற விடுதலைப் போராட்டம் மற்றும் உரிமைகள் நசுக்கப்படுதல் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் அக்கறைப் படுகின்றது.”[99] என்று கூறினார்.

புலிகள் இயக்கத்தோடு உலகத் தமிழர் இயக்கத்திற்கு இருக்கின்ற உறவு தொடர்பாக கேட்டபொழுது, “அங்கு நடக்கின்ற எமது போராட்டம் தொடர்பாக நாம் அனுதாபம் கொண்டிருக்கின்றோம். அத்துடன் புலிகள் இயக்கமானது எங்கள் உரிமைகளுக்காக அங்கு முன்னணியில் இருந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவுவதற்காக நாங்கள் எப்பொழுதும் சில பிரச்சாரங்களை மேற்கொள்ளுகின்றோம். என சிற்றம்பலம் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார். ஆனாலும் அவ்வியக்கத்தின் இணைய தளத்தில், புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கருத்து மேற்கோள்கள் மிக முக்கியத்துவப் படுத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன.[100] எவ்வாறாயினும், உலகத் தமிழர் இயக்கமானது, புலிகள் இயக்கத்திற்கோ அல்லது வேறு எந்தவொரு அமைப்புக்களுக்கோ நேரடியாக நிதி சேகரிப்பதை சிற்றம்பலம் மறுத்தார். அவர் மேலும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவிக்கின்ற பொழுது:

> நாங்கள் நிதி சேகரிப்பது கிடையாது. ஆனால் இலங்கையில் சுனாமியாலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு அழிக்கப்பட வேண்டிய எமது மக்களுக்கு உதவி செய்யும்படி இங்குள்ள மக்களுக்கு ஆலோசனை சொல்லுவதுடன், பிரச்சாரமும் செய்வோம். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) அல்லது தமிழர்களுக்கான சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கம் (SEDAT) ஆகியவற்றிடம் உங்கள் பங்களிப்புக்களை வழங்குங்கள் என்று, நாங்கள்

---

[98] 2006 பெப்ரவரியில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு கிடைத்த மின்னஞ்சல் தகவல்
[99] 2006 பெப்ரவரி 3ல் டொரன்டோ, உலகத் தமிழர் இயக்க தலைவர், சித்தா சிற்றம்பலத்துடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.
[100] பார்க்க. www.worldtamilmovement.com

www.tamilarangam.net

> அவர்களிடம் சொல்லுவோம். சிலர் இங்குள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளையிடம் வழங்குவார்கள். அல்லது வங்கிக்கூடாக மற்றொரு வங்கிக்கு மாற்றி விடுவார்கள். மக்கள் தாங்கள் விரும்பியபடி தனிப்பட்ட ரீதியிலேயே இதைச் செய்கிறார்கள்.

உலகத் தமிழர் இயக்கத்தின் பிரதிநிதிகள் நேரடியாக பணம் கேட்கிறார்கள் எனச் சொல்லப்படுகின்றதே, என அவரிடம் கேட்டபொழுது "அது சரியல்ல என்றே நான் நினைக்கிறேன். ஏனெனில் நாங்கள் அந்த மக்களுக்கு உதவி செய்யுங்கள் என்று இவர்களை கேட்கின்றோம், அவர்கள் தாங்களாகவேதான் அவற்றை (பணத்தை) அனுப்புகின்றனர்." என சிற்றம்பலம் பதிலளித்தார். புலிகள் இயக்கத்திற்காக உலகத் தமிழர் இயக்கம் பணம் சேகரிக்கின்றது என்பதையும் அவர் மறுத்தார். "நாங்கள் 'புலிகள் இயக்கத்திடம் கொடுங்கள் என்று சொல்லுவதில்லை. ஏனெனில் இங்கு நிதி கேட்பதிற்கு புலிகள் இயக்கம் என்று யாருமே இல்லை."[101] அவரின் இந்த வாக்குமூலமானது மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சேகரித்த ஏனைய பல வாக்குமூலங்களோடு முரண்படுகின்றது.

## VI. இலங்கைக்குப் போகும் புலம்பெயர் தமிழர்களிடம் பலாத்கார பணப்பறிப்பு

2002ம் ஆண்டு பெப்ரவரியில், இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையேயான யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னர், ஏற்பட்ட ஒப்பீட்டளவிலான சமாதான சூழ்நிலையை வாய்ப்பாக பயன்படுத்தி, இலங்கையில், பெரும்பாலும் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமான வடக்கு கிழக்கில், இன்னும் தங்கியிருக்கும் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களைப் பார்வையிடுவதற்காக வெளிநாடுகளில் இருந்து செல்லும் தமிழர்களின் எண்ணிக்கையானது படிப்படியாக அதிகரித்தது. அவ்வாறு சென்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அது புலிகள் இயக்கத்தின் நிதி வருமானத்திற்கான ஊற்றாக அமைந்தது. புலிகள் இயக்கமானது வெளிநாடுகளில் இருந்து அங்கு செல்லும் தமிழர்களை மிக திட்டமிட்ட வகையில் இனங்கண்டு தங்களுக்கான நிதிப் பங்களிப்பை செய்யும்படி அழுத்தமிட்டது.

இலங்கையில் வடபிரதேசத்திற்கு பயணிப்பவர்களுக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்றில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் செல்லுதல். அல்லது இலங்கையின் வடக்கு தொங்கலில் உள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து தெற்கே கண்டி வரையும் நீண்டுள்ள A9 பெருந் தெருவின் உடாக வடக்கிற்கு பயணித்தல். வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி பயணிப்பவர்கள் அரசாங்கத்தினதும் புலிகள் இயக்கத்தினதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை பிரிக்கின்ற, ஓமந்தை மற்றும் முகமாலை சோதனைச் சாவடிகளுக்கு ஊடாக செல்ல வேண்டியுள்ளது. அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைவிட்டு - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் கண்காணிக்கப்படுகின்ற, சில கிலோ மீட்டர்கள் நீளமான, எவரது கட்டுப்பாட்டிலும் இல்லாத நிலப் பகுதியை (No mans land) கடப்பதற்கு முன்னர், இப்பயணிகள், தமது வாகனங்களை விட்டு வெளியே இறங்கி அரசாங்க சோதனைச் சாவடியில் தமது ஆவணங்களை காண்பிக்க வேண்டும். மறு புறத்தில் புலிகள் இயக்கத்தின் சோதனைச் சாவடியிலும் அப்பயணிகள் மீண்டும் நிறுத்தப்பட்டு, புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லு முன்னர் தமது ஆவணங்களை காண்பிக்க வேண்டும். அங்கு பயணிகள், இலங்கை பிரஜைகள்,

---

[101] 2006, பெப்ரவரி 3, டொரன்டோவில், உலகத் தமிழர் இயக்க தலைவர், சித்தா சிற்றம்பலத்துடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாட்டு கடவுச் சீட்டு வைத்திருப்பவர்கள் என்னும் அடிப்படையில் வெவ்வேறான வரிசைகளில் நிற்கும்படி அடையாளம் இடப்பட்ட இடங்களுக்கு போகும்படி பணிக்கப்படுகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து அண்மையில் இலங்கையின் வடபகுதிக்கு சென்ற தமிழர்களிடம் அச் சோதனைச் சாவடியில் வைத்து 1,000 ரூபாய்கள் (பருமட்டாக அமெ.டொ.10) பெறப்பட்டு, அனுமதி அட்டை (pass) ஒன்று வழங்கப்படுகின்றது. அப்பயணிகள் தாங்கள் போய்ச் சேரவேண்டிய இடத்தை சென்றடைந்து மூன்று தினங்களுக்கு ஒன்றில் யாழ்ப்பாணம் அல்லது கிளிநொச்சில் உள்ள புலிகள் இயக்கத்தின் உள்ளூர் காரியாலயத்திற்கு அவ் அனுமதி அட்டையுடன் செல்ல வேண்டும் என கூறப்படுகின்றது.

வெளிநாட்டில் இருந்து சென்றவர்கள், புலிகள் இயக்க காரியாலயத்தில் தாங்கள் எவ்வளவு காலம் வெளிநாடுகளில் வாழ்ந்தோம் அங்கு சொந்த வீடு வைத்திருக்கிறோமா, சம்பள விபரங்கள், தமது தொழில் உரிமையாளர் மற்றும் வீட்டு முகவரி, தொலைபேசி மற்றும் தனது பெயர் என, சகல தனிப்பட்ட விபரங்களையும் தெளிவாக வழங்க வேண்டும். கடந்த காலத்தில் புலிகள் இயக்கத்திற்கான அவர்களின் நிதிப் பங்களிப்புக்கள் பற்றி தகவல்கள் அவர்களிடம் கேட்கப்படுகின்றன. அவ்வாறான தமது பங்களிப்புக்கள் பற்றி தெளிவான கணக்கு வழக்கை கூற முடியாத பட்சத்தில், ஒரு குறிப்பிட்ட பணத் தொகை அவர்களிடம் கூறப்பட்டு, புலிகளுக்கு இவ்வளவு தொகை நீங்கள் 'தருமதி' இருக்கிறது என்று சொல்லப்படுகின்றது. அத்தொகையானது ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுகின்ற அதே வேளை, அவர்கள் மேற்குநாடுகளில் வாழ்ந்த காலத்தை கணக்கிட்டு அதில் ஒரு நாளைக்கு 1 டொலர், 1 பவுண்ட் அல்லது 1யூரோ என்ற அடிப்படையிலேயே அது கணக்கிடப்படுகின்றது. மிக நீண்டகாலமாக மேற்குநாடுகளில் வாழ்ந்த நபர்களுக்கு அவர்களால் கூறப்படுகின்ற தொகையானது கணிசமானதாகக்கூட இருக்கலாம். உதாரணமாக டொரன்டோவில் 20வருடமாக வாழ்ந்த ஒருவர் 7,300 கனேடிய டொலர்களை செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படலாம். அல்லது அவர்கள் மீண்டும் அந்நாடுகளுக்கு திரும்பியதும் மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்துவதற்கான இணக்கப்பத்திரம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என அழுத்தப்படுகின்றனர்.[102]

### *பிரியாவின் கதை*

1990களின் முற்பகுதியில் இலங்கையைவிட்டு வெளியேறிய பிரியா (உண்மைப் பெயரல்ல) தற்போது டொரன்டோ பகுதியில் வசிக்கிறார். பத்து வருடங்களுக்கு மேலான காலத்தின் பின்பே, 2005 நடுப்பகுதியில் அவர் இலங்கையின் வடபகுதியில் உள்ள தனது பெற்றார் ஒருவரையும் சகோதர சகோதரிகளையும் பார்ப்பதற்காக கொழும்பில் இருந்து தரைமார்க்கமாக வடக்கே பயணித்தார். அவர் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் கீழ் கண்டவாறு சொன்னார்.

> ஒவ்வொரு குடும்பமும் 1,000 ரூபாய்கள் வழங்கி அனுமதி அட்டை (pass) ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும், என அச் சோதனைச் சாவடியில் வைத்து அவர்கள் எம்மிடம் கூறினார்கள். அது ஒரு கட்டாய விதி, என்றும் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அடுத்து நாங்கள் எங்கள் ஊருக்கு போய் சேர்ந்த பின்னர் புலிகள் இயக்கத்தின் காரியாலயத்திற்குச் சென்று எம்மைப்பற்றி சகல விபரங்களையும் கொடுக்க வேண்டும். நான் 1,000 ரூபாயையும் என் பெயரையும் கடவுச்சீட்டு இலக்கத்தையும் கொடுத்தேன்.

---

[102] 2005 நவம்பரில் கனடா டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இரண்டாவது நாள் நான் புலிகள் இயக்கத்தின் காரியாலயத்திற்குச் சென்றேன். அங்கே அவர்கள் என்னிடம், நான் எவ்வளவு காலம் வெளிநாட்டில் வசிக்கிறேன், அங்கு வசித்த காலத்தில் அவர்களுக்கு ஏதாவது நிதி பங்களிப்புச் செய்திருக்கிறேனா எனக் கேட்டார்கள். நான் அப்படிச் செய்யவில்லை என்று கூறினேன். நான் நலன்புரி (welfare) உதவியில் சீவிப்பதாகவும் எனக்கு பிள்ளைகள் இருப்பதாகவும் நான் கூறினேன். அந்த நிலமையில் மிகவும் கஷ்டங்கள் இருந்ததால் நான் பணம் கொடுக்கவில்லை என்றும் கூறினேன்.

"நீர் திரும்பிச் சென்றதும், கட்டாயம் பணம் செலுத்தவேண்டும். எமது போராட்டத்திற்கு உதவி செய்யவேண்டும். எங்களுக்கு உதவி செய்வது உங்கள் கடமை." என புலிகள் இயக்கத்தினர் என்னிடம் கூறினர். நான் திரும்பிச் சென்றதும் மாதாந்தம் பணம் செலுத்துவதாக கூறினேன். நான் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நின்ற படியால் அதை எற்றுக் கொண்டேயாக வேண்டும் என்று உணர்ந்தேன். அவ்வாறு ஏற்றுக் கொள்ளாவிட்டால் அவர்கள் அந்த நேரத்திலேயே பணத்தை தரும்படி கட்டாயப் படுத்தலாம், என அச்சப் பட்டேன். மாதம் ஒன்றுக்கு 50 டொலர்கள் தரவேண்டும் என அவர்கள் கேட்டனர். என்னால் 50 டொலர்கள் தரமுடியாமல் இருக்கும் என்று கூறினேன், 30 டொலர்கள் தருகிறேன் என்றேன். இறுதியாக அவர்கள் மாதம் ஒன்றுக்கு 40 டொலர்களுக்கு இணங்கியதோடு, அப்பணத்தை உலகத் தமிழர் இயக்கத்திடம் நான் கொடுக்க வேண்டும் என கூறினர்.

ஒரு படிவத்தை நிரப்பி என்னை கையொப்பம் இடும்படி அவர்கள் கூறினர். அதில் எனது பெயர் வீட்டு முகவரி நான் கொடுப்பதற்கு இணங்கிய தொகை என்பன உள்ளடக்கப்பட்டு இருந்தன. நான் அந்தக் காரியாலயத்தில் நின்ற பொழுது அங்குவந்த பலரிடம் அவர்கள் அப்பொழுதே பணத்தைச் செலுத்தும்படி கேட்கப்படுவதை நான் கண்டேன். ஆனால் எனது விடயத்தில் நான் பின்னர் பணம் செலுத்துவதை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். சிலவேளை நான் அவர்களிடம் கதைத்த விதத்தினால் அப்படி நடந்திருக்கலாம்.[103]

அந்த நிலமையில், புலிகள் இயக்கத்தின் காரியாலயத்திற்கு சென்று அவ்விணக்கப் பத்திரத்தில் கையொப்பம் இடுவதைத் தவிர தனக்கு வேறு எந்த வழியும் இருக்கவில்லை என பிரியா எம்மிடம் கூறினார். "நான் அவர்களின் காரியாலயத்திற்கு செல்லாது இருந்திருந்தால் அவர்கள் என்னை தேடி வந்திருப்பார்கள். நான் எங்கே தங்குகிறேன் என்று சோதனைச் சாவடியில் வைத்து அவர்கள் என்னிடம் கேட்டிருந்தார்கள். நான் பணம் தரமாட்டேன் என அவர்களோடு வாதிட்டிருந்தால் நான் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டி வந்திருக்கலாம்."

இணக்கப் பத்திரத்தில் அவர் கையொப்பமிட்ட பின்னர், அவருக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி அட்டையில் புலிகள் இயக்கத்தினர் சீல் ஒன்றைக் குத்தி அவர் திரும்பி புலிகள் இயக்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விட்டு கொழும்புக்கு செல்லுகின்ற பொழுது அதனை தமது சோதனைச் சாவடியில் திருப்பி செலுத்திவிட்டுச் செல்லுமாறு கூறினர்.

பிரியா திரும்பி டொரன்டோவிற்கு வந்து ஒரு வாரத்திற்கு உள்ளேயே, உலகத் தமிழர் இயக்கத்தின் பிரதிநிதிகள் அவரை தொலைபேசியில் அழைக்க ஆரம்பித்தனர். "அவர்கள் மூன்று அல்லது நான்கு தடவைகள் தொலைபேசியில் செய்தி விட்டார்கள் ஆனால் நான்

[103] 2005 நவம்பர், கனடா டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

தொலைபேசியை தூக்கவில்லை. எனது பிள்ளைகள் பதிலளித்தாலும், நான் வேலைக்கு போய்விட்டேன் என்றே கூறிவிடுவார்கள்."

சில நாட்களின் பின் பிரியாவின் வீட்டிற்கு ஒரு நபர் வந்தார். "எனது கடவுச் சிட்டு உட்பட சகல விபரங்களையும் அவர் வைத்திருந்தார், 'நான் உலகத் தமிழர் இயக்கத்தில் இருந்து வருகிறேன் நீங்கள் பணம் தருவதாக இலங்கையில் வைத்துக் கூறியிருக்கிறீர்கள் நான் அதை வாங்கிச் செல்வதற்காகவே வந்திருக்கிறேன். என்றார். அவரிடம், ஏனைய நபர்களுடைய பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்று இருந்ததை நான் கண்டேன். அதில் எனது பெயர், பிள்ளைகளின் பெயர், எனது கடவுச் சீட்டு இலக்கம் மற்றும் எனது முகவரி என்பன இருந்தன" என்று பிரியா எம்மிடம் கூறினார்.

தான் இலங்கைக்கு செல்வதற்கு கூட பணம் கடன் வாங்கித்தான் சென்றேன் என்றும், எனவே தன்னால் பணம் தருவதற்கான வசதி இல்லை என்றும் பிரியா அந்த நபரிடம் கூறினார். "அதற்கு அந்த நபர், 'ஒரு மணித்தியாலத்திற்கு 6 அல்லது 7 டொலர்கள் உழைப்பவர்கள் கூட பணம் தருகிறார்கள் ஆகவே நீர் தந்தேயாக வேண்டும்.' என்றார். நான் அவருடன் வாதிட முயற்சித்தேன். தற்போது என்னால் தர முடியாமல் இருக்கிறது, ஆகவே அவரை சில மாதங்கள் கழித்து வரும்படி கூறினேன். அதற்கு அவர், 'உம்மைவிட மோசமான நிலையில் உள்ள ஏனைய மக்கள் எல்லாம் தருகிறார்கள், ஆகவே நீர் தந்தேயாக வேண்டும்.' என்று கூறினார்."

இறுதியாக பிரியா தான் கொடுப்பதாக ஒத்துக் கொண்ட தொகையை செலுத்துவதற்கு இணங்கினார். சில மாதங்கள் கழித்து, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் அவர் பேசும் பொழுது, தான் பணம் கொடுப்பதை நிறத்திவிட யோசித்ததாகவும், ஆனால் தான் பணம் கொடுப்பதை நிறுத்தினால், "அவர்கள் தொடர்ந்து வந்து எனக்கு இடைஞ்சல் தரலாம். அல்லது தொடர்ச்சியாக என் கதவை தட்டிக்கொண்டே இருக்கலாம்." என அச்சப்படுவதாக கூறினார். அதுமட்டுமின்றி தான் அவர்களுக்கு கூறியபடி பணத்தை செலுத்தாவிட்டால், தனது குடும்பத்தினரைப் பார்ப்பதற்கு தான் இலங்கைக்கு செல்ல முடியாமல் போய்விடும் என்று கவலைப்படுவதாகவும் கூறினார். "நான் பணத்தைக் கொடுக்காவிட்டால், நான் மறுமுறை செல்லகின்ற பொழுது எல்லாத் தொகையையும் சேர்த்து வைத்து அவர்கள் என்னிடம் கேட்கலாம், என்னால் அவ்வளவு பெரிய தொகையை கொடுக்க முடியாது."

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் பேசுகின்ற பொழுது பிரியா மிகவும் பாதிப்பு அடைந்திருப்பதை காணக்கூடியதாக இருந்தது. புலிகள் இயக்கத்திற்கு தான் பணம் கொடுக்க விரும்பாததற்கு ஒரு காரணம், சிறார்களை அவர்கள் படையில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையாகும் என கூறினார்.

> எனது சகோதரனின் பிள்ளைகள் வன்னியிலேயே இருக்கிறார்கள். புலிகள் இயக்கத்தினர் இங்கே பணத்தை சேகரித்து அதனைப் பாவித்து அங்கே உள்ள பிள்ளைகளை பயிற்றுவித்து அவர்களை இராணுவத்துடன் மோதவிட்டு சாக செய்கிறார்கள். இங்கே பணம் சேகரிப்பவர்கள் அழகான கார்களில் ஓடித்திரிந்து நல்ல வாழ்க்கை வாழ்கிறார்கள். அங்கே பலாத்காரமாக பிடிக்கப்பட்டு சண்டைக்கு அனுப்பப்பட்டு இறந்துபோகும் பிள்ளைகளைப் பற்றி அவர்களுக்கு கவலை கிடையாது எனது பிள்ளைகள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் அங்குபோய் சண்டையிட்டு இறந்துபோவதை நான் அனுமதிக்க மாட்டேன். நான் மட்டுமல்ல கனடாவில் உள்ள எந்த ஒரு தமிழரும் தங்களது பிள்ளைகள் அங்குபோய் சண்டையில் இறப்பதை அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் அங்கே போராளிகளாக பாவிக்கப்படும் பிள்ளைகள் இருக்கின்றனர் இவர்கள் அதை

www.tamilarangam.net

எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். நான் எனது மருமக்கள் தொடர்பாக கவலைப் படுகிறேன்.[104]

## *பலாத்கார பணப்பறிப்புக்கான பொதுவான முறைகள்*

பிரியாவுக்கு ஏற்பட்ட அனுபவம் தனித்துவமானதல்ல. டொரன்டோவில் தொழில் புரியும் ஒரு வழக்கறிஞர் எம்மிடம் கூறுகின்ற பொழுது, 2005 மார்ச் முதல் நவம்பர் வரை, தனது வாடிக்கையாளர்களில் பத்து பன்னிரண்டு பேர் வரை, இலங்கைக்கு சென்ற பொழுது, அங்கு பணம் செலுத்த வேண்டும் என நெருக்குவாரத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளனர் என்றார். "இலங்கைக்கு சென்ற எனது எல்லா வாடிக்கையாளர்களுமே இவ் அனுபவத்தைப் பெற்றுள்ளனர். அவர்கள் தரைவழிப் பாதையால் சென்றால் கொடுப்பதுவே ஒரே வழி என்றார்.."[105]

அவர் மேலும் எம்மிடம் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்திற்கு விமானம் மூலம் சென்ற தன் வாடிக்கையாளர்கள் உடனடியாக இனங் காணப்படுவதில்லை. ஆனால் வெளிநாட்டில் இருந்து ஒருவர் வந்திருக்கிறார் என்ற செய்தி மிக விரைவிலேயே அக்கம் பக்கத்தில் பரவிவிடும். "இரண்டு மூன்று நாட்களுக்குள் யாராவது ஒருவர் அவரைத் தேடிவந்து 'நீங்கள் கோண்டாவிலில் உள்ள காரியாலயத்திற்கு செல்ல வேண்டும். [புலிகள் இயக்கத்தின் திறைசேரி]' நீங்கள் அவர் சொல்வதை தவிர்த்துவிட்டு போகாமல் இருக்க முனைந்தால் அவர் திரும்பவும் வருவார். அதன்பின் உங்கள் குடும்பத்தினரே உங்களிடம், 'நீங்கள் போகத்தான் வேண்டும் நீங்கள் போகாவிட்டால், நீங்கள் எங்களுக்குத்தான் பிரச்சினையை ஏற்படுத்தப் போகிறீர்கள்.' எனக் கூறுவார்கள்."

அவ்வழக்கறிஞரின் வாடிக்கையாளர்களின் கூற்றுப்படி, யாழ்ப்பாண நகரத்திற்கு அருகே உள்ள கோண்டாவில் புலிகள் இயக்க காரியாலயத்தில், அவர்களின் தனிப்பட்ட விபரங்கள் சகலதையும் விரிவாக வழங்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. புலிகள் இயக்கமானது ஏற்கனவே தங்களைப் பற்றி எவ்வளவு விபரங்களை சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி தெரியாததால், ஒவ்வொருவரும் தங்களைப் பற்றிய பிழையான தகவல்களைக் கொடுப்பதற்கு அஞ்சுகிறார்கள். அவரின் சில வாடிக்கையாளர்களின் கூற்றுப்படி, அவரிடம் கேட்கப்பட்ட தொகைப் பணம் வழங்கப்படும்வரை அவர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற முடியாது என்று கூறப்பட்டுள்ளதோடு, அவர்களின் கைகளில் பணம் இல்லாவிட்டால் கனடாவில் வாழும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களிடம் இருந்து பணத்தை தருவித்து தரும்படியும் கேட்கப்பட்டுள்ளனர். "அவ்வாறு அவர்கள் வெளியேறக் கூடாது, என கூறப்பட்டுவிட்டால், அந்த நபர்கள் அதை செய்யத் துணிய மாட்டார்கள். எனவே அவர்கள் இங்கு குடும்பத்தினரிடம் இருந்து பணத்தை தருவித்துக் கொள்வார்கள்." எவருமே பலாத்காரமாக தடுத்துவைக்கப்பட்டதாக தான் அறியவில்லை என்றும், ஆனால், "வாய்மூலம் வழங்கப்படும் உத்தரவே அவர்களை கலவரம் அடையச் செய்வதற்கு மிக மிகப் போதுமானது."[106] என தெரிவித்தார்.

வெளிநாடுகளில் வாழும்போது நிதி ரீதியாக பங்களிப்பு செய்தவர்களும்கூட இலங்கைக்கு திரும்பி போகும்போது பணம் தரும்படி நெருக்குவாரத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். அவ்வழக்கறிஞர் மேலும் கூறும்பொழுது, "நாங்கள் பணம் கொடுத்துள்ளோம், என நீங்கள் கூறுவீர்களாயின், 'இல்லை அப்படி எம்மிடம் எந்த ஆவணமும் இல்லை' என்று அவர்கள்

---

[104] Ibid
[105] 2005 நவம்பர், கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.
[106] Ibid



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறுவார்கள். அவர்கள் உங்களிடம், ‘உங்களிடம் அடையாள (PIN) இலக்கம் இருக்கிறதா?’ என்று கேட்பார்கள். அல்லது அவர்கள் உங்களின் பெயர் பிறந்த தினம் என்பவற்றை கணணியில் பதிவு செய்து பார்த்துவிட்டு, ‘இல்லை, நாங்கள் சோதித்து பார்த்தோம், நீங்கள் பணமேதும் வழங்கவில்லை. ஆகவே நீங்கள் பணம் வழங்கத்தான் வேண்டும்.’ என்று கூறுவார்கள்.”[107]

சில சந்தர்ப்பங்களில், கேட்கப்பட்ட தொகைப் பணத்தை வழங்கும்வரை அங்கு செல்லும் தமிழர்களின் கடவுச் சீட்டுக்களை புலிகள் இயக்கத்தினர் பறிமுதல் செய்து விடுகின்றனர். 2005ம் ஆண்டில், ஐரோப்பாவில் உள்ள நாடொன்றில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சென்ற இரண்டு பிள்ளைகளின் தாயான ஒரு தமிழ்ப் பெண்ணைப்பற்றி இலண்டனில் இருந்து எமக்கு கிடைத்த மிக நம்பிக்கையான தகவலின்படி,[108] புலிகளின் சோதனைச் சாவடியைக் கடந்து பாதையூடாக செல்பவர்களிடம், பணம் தரும்படி அவர்கள் நெருக்குவதாக கேள்விப்பட்டிருந்ததால் அவர்கள் கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு சென்றனர். அவரின் குடும்பம் யாழ்ப்பாணம் சென்றதும் கோண்டாவிலில் உள்ள காரியாலயத்திற்கு போகும்படி பணிக்கப்பட்டார்கள். கோண்டாவில் காரியாலயத்தில் இருந்த அலுவலர்கள், வெளிநாட்டில் இவர்கள் வாழ்ந்த காலத்தின் அடிப்படையில் இவர்கள் புலிகள் இயக்கத்திற்கு இதுவரை வழங்காமல் இருந்த ஒரு தொகையைக் கணக்கிட்டனர். யாழ்ப்பாணத்தைவிட்டு புறப்படுவதற்கு முன்னர் 500,000 ரூபாய்களை (பருமட்டாக 2,800 பவுண்டுகள் - 4,800 அமெ.டொலர்கள்) அப்பெண் செலுத்த வேண்டும் என கூறப்பட்டது. அப்பெண்ணிடம் அப்போது 100,000 ரூபாய்களே இருந்தன. அதை அவர் செலுத்தினார். அவரின் கடவுச்சீட்டை பறிமுதல் செய்த புலிகள் இயக்கத்தினர், மிகுதி 400,000 ரூபாய்களை அவர் செலுத்தினாலே கடவுச்சீட்டு திருப்பித் தரப்படும் என்று கூறினார்கள்.

பணத்தை கொடுப்பதற்கு பதிலாக, அப்பெண் அன்றிரவே விமானம் மூலம் கொழும்புக்கு வந்து மறுநாள் தூதுவராலயம் சென்று, தனது கடவுச்சீட்டு தொலைந்து விட்டதாக அறிவித்தார். அதற்கான மாற்றுக் கடவுச்சீட்டு வழங்கப்பட்டதும் அவர் உடனடியாக ஐரோப்பா வந்து சேர்ந்தார்.[109]

இன்னொரு சம்பவத்தில், பிரிட்டனில் வசிக்கும் ஒரு தமிழ்ப் பெண் இலங்கையில் வடக்கிற்கு சென்றபொழுது, அவர் இங்கிலாந்தில் வசித்த காலத்தில் புலிகள் இயக்கத்திற்கு எவ்வளவு நிதிப் பங்களிப்பு செய்திருக்கிறார் என புலிகள் இயக்கத்தின் சோதனைச் சாவடியில் வைத்துக் கேட்கப்பட்டுள்ளார். தமது கணவர் ஒவ்வொரு மாதமும் 35 பவுண்டுகள் வழங்குவதாக அவர் சொன்னார். அவர் வழங்குகின்ற அந்த தொகை “போதுமானதல்ல” எனக் கூறிய அவர்கள் 1.3 மில்லியன் ரூபாய்களை, (பருமட்டாக 7,300 பவுண்டுகள்/12,600 அமெரிக்க டொலர்கள்) அவர் செலுத்த வேண்டும் என கேட்டார்கள். அவரின் கடவுச்சீட்டை எடுத்து வைத்துக்கொண்ட புலிகள் இயக்கத்தினர், அவரை யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகள் இயக்க காரியாலயத்திற்கு செல்லும்படி கூறினார்கள். யாழ்ப்பாணத்தில் வைத்து, அவர் பணம் செலுத்த வேண்டும் என மேலும் அழுத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டாலும், அவர் அதை மறுத்து விட்டார். மீண்டும் அவர் தனது கடவுச் சீட்டை மீளப் பெற்றுக்கொள்வதற்காக சோதனைச் சாவடிக்கு வந்த பொழுது, அங்கு வைத்து இறுதியாக அவரது மாதாந்த தொகை 50 பவுண்டுகளாக கூட்டி

---

[107] 2005 நவம்பரில், கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[108] 2005 நவம்பரில், இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[109] 2005 நவம்பர் 30ல், இங்கிலாந்து, லண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இணக்கப் பத்திரத்தில் கையொப்பம் இடும் வரை அவர் பணம் கேட்டு வற்புறுத்தப்பட்டார்..[110]

வெளிநாடுகளில் இருந்து வடபகுதிக்கு செல்லும் ஒவ்வொருவரும் பணத்திற்காக நெருக்கப்படுவதில்லை. 2005 நடுப்பகுதியில், யாழ்ப்பாணத்திற்கு சென்ற டொரன்டோ பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு, யாழ்ப்பாண கோண்டாவிலில் உள்ள புலிகள் இயக்கத்தின் காரியாலயத்திற்கு செல்லும்படி, சோதனைச் சாவடியில் வைத்து கூறப்பட்டுள்ளது. "அவர்கள் என்னிடம், 'நீர் கட்டாயம் போகவேண்டும்.' எனக்கூறினார்கள். நான் ஒரு வகையில் அச்சம் அடைந்தேன். எனவே நான் அங்கு சென்றேன். நான் அங்கு செல்லாவிட்டால் எனக்கு பெரிய பிரச்சினை வரும் என்று சிலர் என்னிடம் சொன்னார்கள். நான் அங்கிருந்து திரும்பி வர முடியாமல் போகும் என்றும் அவர்கள் என்னிடம் கூறினார்கள்." கோண்டாவில் காரியாலயத்தில் வைத்து அவருடைய சகல தனிப்பட்ட விபரங்களும் கேட்கப்பட்டுள்ளன. அந்த சந்திப்பு தொடர்பாக அவர் எமக்கு கருத்து சொல்கையில்: "அவர்களின் முக்கியமான எண்ணம் எங்களிடம் இருந்து பணம் வேண்டும் என்பதே." என்றார். தான் இன்னமும் படித்துக் கொண்டிருப்பதாகவும், தான் வேலை செய்வதில்லை என்றும், தன்னிடம் தருவதற்கு பணம் இல்லை என்றும் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகளிடம் அவர் கூறியுள்ளார். அவருடைய விடயத்தில் புலிகள் இயக்கத்தினர், அவர் பணம் தர இணங்க வேண்டும் என்று அழுத்தம் செலுத்தவில்லை. ஆனால் தொழில் கிடைத்தவுடன் அவர் பணம் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும் என அவருக்கு கூறப்பட்டது. "என்னுடைய தற்போதைய முகவரி அவர்களிடம் உள்ளது எனவே அவர்கள் என்னுடைய வீட்டிற்கு வரலாம்."[111] என்று கூறிய அவர், இனிமேல் தன்னை அவர்கள் தொடர்ந்து கண்காணிக்கலாம் என்றும் தனது கவலையைத் தெரிவித்தார்.

இவ்வாறான சம்பவங்கள் பற்றிய கதைகள் பரவத் தொடங்கியதும், இலங்கைக்கு போனால் தங்களால் செலுத்த முடியாத அளவு பணத் தொகையை அல்லது தாங்கள் கொடுக்க விரும்பாத பணத்தை செலுத்தும்படி அழுத்தத்திற்கு உட்படுத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக, பல தமிழ்க் குடும்பங்கள், இலங்கைக்கான தமது பயணத் திட்டங்களையே மாற்றத் தொடங்கினார்கள் அல்லது கைவிட்டுள்ளார்கள். டொரன்டோவில் உள்ள அவ்வழக்கறிஞர், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறுகின்ற பொழுது, "புலிகள் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்களான பலர்கூட தமது பயணங்களை இரத்துச் செய்துள்ளனர். அவ்வாறு தமது பயணங்களை இரத்துச் செய்த மூன்று நான்கு குடும்பங்களை எனக்குத் தெரியும்" என்றார்.[112] 20 வருடங்களுக்கு மேலாக இங்கிலாந்தில் வாழ்ந்துவரும் இலண்டன் தமிழர் ஒருவர், 2005ம் ஆண்டு நடுப்பகுதியில், பணம் கேட்டு தாம் அணுகப்பட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறியதோடு, "உண்மையில் கடந்த வருடம் நான் அங்கு செல்வதற்காக திட்டமிட்டு இருந்தேன், ஆனால் இப்போது இவர்களுக்கு பணம் செலுத்துவது அடையாள(PIN )இலக்கம் பெற்றுக் கொள்வது, போன்ற பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன."[113]

---

[110] 2005 ஒக்டோபர் 30, இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[111] 2005 நவம்பர், கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

[112] 2005 நவம்பர், கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[113] 2005 நவம்பர், இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## VII. கனேடிய மற்றும் பிரித்தானிய அதிகாரிகளின் பதிலுரைகள்

*பலாத்காரப் பணப்பறிப்பு நடந்துகொண்டுதான் இருக்கிறது என்பது எமக்குத் தெரியும். பிரித்தானிய அரசால் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. பயங்கரவாத குழுக்கள் தொடர்பாக எமது வளங்களை எவ்வாறு பிரையோகிப்பது என்பது பற்றி நாம் பார்க்கின்ற பொழுது, இஸ்லாமிய குழுக்கள் மீதுதான் எமது கவனமே அதிகமாக உள்ளது.*

- இலண்டன் நகரப் பொலிஸ் பரிசோதகர்[114]

தங்களை நிதி தரும்படி கேட்டு நெருக்குவாரத்திற்கு உட்படுத்துகிறார்கள் என்று, பொலீசார் அல்லது ஏனைய அரசாங்க அதிகாரப் பிரிவுகளிடம் முறைப்பாடு செய்ததாக, இரண்டு நபர்கள் மட்டுமே மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தமது அநுபவங்ளைக் கூறினர். (கீழே பார்க்க) முறைப்பாடு செய்வதன் மூலம் தாங்கள் மேலும் தமிழ் சமூகத்திற்குள்ளே அம்பலப்படுவதுடன், மேலதிகமான அச்சுறுத்தல்கள், இடைஞ்சல்கள் அல்லது இன்னும் மோசமான விளைவுகளுக்கு முகம்கொடுக்க நேரிடலாம் என்றே பலர் அச்சம் தெரிவித்தனர். ஒரு டொரன்டோ தமிழர் எம்மிடம் கூறும்பொழுது:

> பொலீசாரினால் கொடுக்கப்படும் தொல்லையானது புலிகளினதைவிட மோசமாக இருப்பதினால் மக்கள் பகிரங்கமாக வருவதிற்கு அச்சப்படுகின்றனர். புலிகளைப் பொறுத்தவரை, ஆக மிஞ்சி மிஞ்சிப் போனால் என்ன 2,000 டொலர்கள் கொடுக்கவேண்டி வரும். ஆனால் நீங்கள் பொலீசாரிடம் கதைத்தாலோ அவர்கள் எந்த நேரமும் உங்கள் வீட்டிற்கு வரலாம். எனது வீட்டிற்கு பொலீசார் வந்தால் அதை நான் எனது அயலவர்களிடம் எப்படி விளங்கப்படுத்த முடியும்? எனது சமூகத்திற்குள் நான் தகவல் வழங்கும் நபராக என்னைக் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. பொலீசார் உங்கள் வீட்டு வாசலுக்கு வந்தால் நீங்கள் தகவல் கொடுப்பவர்களாக இனங் காணப்படுவீர்கள். நீங்கள் அந்நியப்படுவீர்கள் முற்று முழுதாக சமூகத்தில் இருந்து அந்நியப்படுத்தப் படுவீர்கள்.[115]

20,000 கனேடிய டொலர்களை செலுத்த முடியாது என்று மறுத்ததிற்காக, தனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் எதிராக அச்சுறத்தல் விடப்பட்டதாக, கூறிய ஒரு டொரன்டோ வர்த்தகர், எம்மிடம் கருத்து தெரிவிக்கையில், நான் முதலில் பொலீசாரிடம் முறையிட யோசித்தேன், ஆனால் இறுதியில் மனதை மாற்றிக் கொண்டேன், ஏனெனில் இச்சம்பவத்தை முறையிடுவதானது புலிகள் இயக்கத்திலிருந்து மேலும் பின் விளைவுகளை ஏற்படுத்தலாம் என அச்சமடைந்தேன். மேலும் அவர் கூறுகையில், "பொலீசார் பாரிய நடவடிக்கைகளை எடுத்து அந்த நபர்களை பிடிப்பார்களாக இருந்தால், நான் அவர்களுக்கு உதவி செய்யலாம். அவர்களும் எனக்கு உதவ வேண்டும், என்னைப் பாதுகாக்க வேண்டும். அவர்கள் வெறுமனே விசாரித்துவிட்டு பின்னர் ஒன்றும் நடக்கவில்லை என்றால், அது எனக்கு அவ்வளவு நல்லதல்ல."என்றார்.[116]

தமிழ் சமூகத்தில் உள்ள நபர்கள் தங்களிடம் வந்து முறையிடுவதற்கு தயக்கம் காட்டுவதால், தாங்கள் நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்புக்களும் மிக மட்டுப்படுத்தப் படுவதாக இலண்டன் நகர பொலீஸ் பரிசோதகர் எம்மிடம் கூறினார். "நாங்கள் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த ஓரிண்டு அங்கத்தவர்களை எங்களுடன் வைத்திருக்கிறோம். [எமக்கு

[114] 2005 டிசம்பர் 14ல், இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

[115] 2006 ஜனவரி 22ல், கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

[116] 2006 ஜனவரி, கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இரகசியத் தகவல்கள் தருவதற்காக], ஆனால் பாதிப்புக்கு உள்ளாகுகின்ற ஏனைய சகலரும், முறைப்பாடு செய்யப்பட முடியாத அளவிற்கு நெருக்குவாரத்திற்கு உள்ளாகி உள்ளனர். ஆகவே இறுதியில் எங்களிடம் இருப்பதெல்லாம், எந்தவித உறுதியான ஆதாரங்களும் அற்ற தகவல்கள் மட்டுமே."[117]

முறைப்பாடுகள் செய்யப்பட்டால், பொலீசாரினால் அக்குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் முடுக்கி விடப்படலாம் என அப்பொலீஸ் பரிசோதகர் கூறினார். எவ்வாறாயினும், இலண்டனில் இருக்கும் இரண்டு தமிழர்கள், புலிகள் இயக்கத்தினர் தம்மிடம் வந்த விடயம் தொடர்பாக தாங்கள் பொலீசாருக்கு தொலைபேசி மூலம் தெரிவித்ததாகவும், தமது முறைப்பாடுகளை அவர்கள் பாரிய அக்கறையுடன் எடுத்துக் கொள்ளவில்லை என்றே தாங்கள் உணர்ந்ததாகவும், மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவிடம் கருத்து தெரிவித்தனர். இலண்டன் பகுதியில் வாழும் இன்னும் ஒரு தமிழர் கருத்து கூறுகையில், 2005ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் புலிகள் இயக்கத்தினர் தொலைபேசியில் தன்னை அழைத்து, தாங்கள் அன்றைய தினம் மாலை புலிகள் இயக்கத்திற்காக நிதி சேகரிக்க வருவதாக தெரிவித்தார்கள். உடனே நான் பொலீசாரை தொலைபேசி மூலம் அழைத்து எனது வீட்டிற்கு வருமாறு கூறினேன், என்று கூறினார். "அவர்கள் [புலிகள் இயக்கத்தினர்] என்னிடம் பணம் கேட்கவே வருகிறார்கள், நான் மறுக்கப் போகின்றேன். ஆகவே இங்கு பிரச்சினைகள் ஏற்படலாம்." என கூறியதாகக் கூறினார். ஆனால் பொலீசாரோ, புலிகள் இயக்கத்தினர் அவர்களது உயிருக்கும் பாதுகாப்பிற்கும் நேரடியாக அச்சுறுத்தல் எதையும் ஏற்படுத்தியதாக தெரியவில்லை எனவும், ஆகவே தாங்கள் அதிகாரிகளை அங்கு அனுப்ப முடியாது எனவும், அவரிடம் தெரிவித்ததாக, அந்த நபர் எம்மிடம் தெரிவித்தார்.[118]

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பதிவு செய்த இன்னும் ஒரு சம்பவத்தில், புலிகள் இயக்கத்திற்காக பணம் கேட்டு நபர்கள் இரண்டு தடவைகள் தனது வீட்டிற்கு வந்ததனால் இலண்டனில் உள்ள ஒரு தமிழர் பொலீசாரை அழைத்திருந்தார். அந்த நபரின் வீட்டிற்கு பொலீசார் வந்ததும், அவர், பணம் கேட்டு வந்தவர்களின் வாகனத் தகடு இலக்கத்தையும், அவர்கள் தனது வீட்டில் இருந்து அடுத்ததாக எந்த வீட்டிற்கு போயிருக்கிறார்கள் என்பதனையும் பொலீசாரிடம் கொடுத்தார். ஆனால் பொலீசார் இங்கு எந்தவிதமான குற்றச் செயல்களும் நிகழ்ந்ததிற்கான "சாட்சியங்கள் ஏதுமில்லை" என்றும், சம்பவம் தொடர்பாக விபரங்களை மட்டும் தாம் எடுத்துச் செல்வதாக கூறியதாக, அவர் எம்மிடம் தெரிவித்தார்.[119]

இலண்டனில் வாழும் இன்னும் ஒரு தமிழர் கருத்து தெரிவிக்கையில், "தற்போதைய நிலையில் பொலீசாரிடம் முறையிடப்படும் இப்படியான சம்பவங்கள் தொடர்பாக பொதுவானதொரு அக்கறையின்மை நிலைமையே காணப்படுகின்றது............ தமது பொலீஸ் படையினரிடையே, இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், என்பது பற்றிய விழிப்புணர்வை பொலீசார் ஏற்படுத்த வேண்டும்."[120]

புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பலாத்காரப் பணப்பறிப்பு தொடர்பாக பொலீஸ் படையினர், பொதுவாகவே, மிக குறைவான நடவடிக்கைகளையே

[117] 2005, டிசம்பர் 14, இலண்டன், முன்னாள் நகர பொலிஸ் பரிசோதகர் Philip Perry உடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

[118] 2006 பெப்ரவரி, இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[119] 2006 பெப்ரவரி, இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

[120] 2005 பெப்பரவரி 11, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு கிடைத்த மின்னஞ்சல் தகவல்.

www.tamilarangam.net

எடுத்திருக்கின்றனர் என்பதை, நகரப் பொலிஸ் பரிசோதகர் ஏற்றுக் கொள்கிறார். சில அரசியல் காரணங்களுக்காவும் இவ்விடயம் தொடர்பாக குறைந்த அக்கறையே காட்டப்படுவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினர்;

> சில வருடங்களுக்கு முன்னர், இங்கு என்ன நடக்கின்றது என்பது தொடர்பாக வேண்டும் என்றே கவனிக்காமல் இருப்பது என்னும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. அக்கட்டத்தில் இங்கிலாந்து அரசாங்கமானது சமாதான ஒப்பந்தத்திற்கு [இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையேயான] ஆதரவு வழங்கியது, அக்கட்டத்தில் அவர்கள் புலிகள் இயக்கத்தை நெருக்கடிக்குள்ளாக்க விரும்பவில்லை. ஆகவே அக்காலகட்டத்தில் சகல தகவல்களும் கிடைக்கப் பெற்றாலும், பயங்கரவாத விடயங்கள் தொடர்பாக கையாளும் விசேட பிரிவானது இங்கு என்ன நடக்கின்றது என்பதை மறுத்தலித்தே வந்திருக்கின்றது.[121]

கனடாவில் தமிழ் சமூகத்தினர் ஒரு குறிப்பிட்ட தொகையான வாக்கு வங்கியை கொண்டிருக்கின்றனர். எனவே டொரன்டோ பகுதி தேர்தல் தொகுதிகளைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்கள் இத்தமிழர்களின் வாக்குகளில் தங்கி நிற்கின்றனர். இதன் காரணமாகவே அவர்கள் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல் தொடர்பாக கதைப்பதில்லை. டொரன்டோவில் உள்ள செயற்பாட்டாளர் ஒருவர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறுகின்றபொழுது, புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக கண்டித்துப் பேசுதல் அரசியல் ரீதியாக அவர்களுக்கு நட்டத்தை ஏற்படுத்தும். அத்துடன் இது அவர்களின் அரசியல் குறைபாடுமாகும். புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் பலாத்காரப் பணப்பறிப்பு நடவடிக்கை, கனேடிய பிரச்சியையாக பார்க்கப்படுவதில்லை. அது தமிழர்களின் பிரச்சினையாகவே பார்க்கப்படுகின்றது.[122]

முறையான முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதில் அதிக சிரமம் இருப்பதாக டொரன்டோ பொலீசாருடன் தொடர்புடைய புலனாய்வுப் பிரிவின், துப்பறிவு பரிசோதகர் ஒருவர் உறுதிப் படுத்தினார். “குற்றவியல் ரீதியான விசாரணைகளை மேற்கொண்டு ஆரம்பிப்பதற்கு தேவையான உறுதியான தகவல்களுடன் கூடிய நபர்கள் எமக்கு தேவை என்பதே இங்குள்ள சூட்சுமம் ஆகும்.” தமிழ் சமூகத்தடன் மிக நெருக்கமானதும் நம்பிக்கையானதுமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதே தமக்கு இங்கு பாரிய சவாலாக இருப்பதை அவர் இனங்காட்டினார்: “நாங்கள் அவர்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும்............ அதிகமான முறைப்பாடுகள் சேரக்கூடிய வகையில் போதுமான அளவு பாதிக்கப்பட்டவர்கள் முன்வருவார்களாயின், தாங்கள் மட்டும் பிரச்சினைக்கு முகம் கொடுக்கப்போவதாக அவர்கள் உணர மாட்டார்கள்.”[123]

தமிழ் சமூகத்தினரிடையே நடைபெறும் பணப்பறிப்பு தொடர்பாக, டொரன்டோ பொலீசார் ஏதாவது விசாரணைகளில் தற்போது ஈடுபட்டுள்ளனரா? என நாம் கேட்ட பொழுது, அவ்வாறான தகவல்களை வழங்குவதற்கான சுதந்திரம் தனக்கு இல்லை என அத் துப்பறிவுப் பரிசோதகர் சுட்டிக் காட்டினார்.[124] எவ்வாறாயினும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் பேசிய டொரன்டோவில் வாழும் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த

---

[121] 2005, டிசம்பர் 14, இலண்டன், முன்னாள் நகர பொலிஸ் பரிசோதகர் Philip Perry உடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

[122] 2006 பெப்பரவரி, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு கிடைத்த மின்னஞ்சல் தகவல்.

[123] 2006, ஜனவரி 19, டொரன்டோ பொலீசில், புலனாய்வுப் பிரிவின், துப்பறிவுப் பரிசோதகர் Steve Irwin உடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.

[124] Ibid

www.tamilarangam.net

எந்த ஒரு அங்கத்தவரும், அரசாங்கமோ பொலீசாரோ அவ்வாறான விசாரணைகளில் ஈடுபட்டு இருப்பதாக தாங்கள் அறிந்திருப்பதாக கூறவில்லை.

நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக பொலீசார் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இலண்டனில் உள்ள தமிழர் ஒருவர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார். "புலிகள் இயக்கத்தினர் பட்டப்பகலில் இங்கு பணம் சேகரிக்கிறார்கள். புலிகள் இயக்கமானது பிரிட்டனில் ஒரு பயங்கரவாத இயக்கமாக தடை செய்யப்பட்டுள்ளது. பயங்கரவாத சட்டத்தின்படி, எந்த ஒரு பயங்கரவாத அமைப்பிற்கும் உதவி செய்வது சட்ட விரோதமாகும்."[125]

"உண்மையிலேயே பொலீசார் இதை நிறுத்த வேண்டும் என்று நினைத்தால் அவர்களால் அதைச் செய்ய முடியும். அவர்கள் செய்ய வேண்டியது உலகத் தமிழர் இயக்கத்தின் ஊழியர்களை பின்தொடர வேண்டியது மட்டுமே. இங்கு நிதி சேகரிக்கும் சில நபர்களின் வாகனத் தகடு இலக்கங்கள் என்னிடம் உள்ளன. என்னால் அதை எடுக்க முடியும் என்றால், பொலீசாரும் அதை எடுக்க முடியும்."[126]

இன்னொரு நபர் தமது சந்தேகத்தை தெரிவிக்கையில் காத்திரமான விசாரணைகளை மேற்கொள்ளத் தேவையான அளவிற்கு, நிலமையை பொலீசார் நன்றாக புரிந்து வைத்திருக்கிறார்கள் என்று அவர் நினைப்பதாக கூறினார். உலகத் தமிழர் இயக்கத்தின் பிரதிநிதிகள் தன்னிடம் வந்தபொழுது, வந்தவர்களின் வாகன தகட்டு இலக்கங்களை அவரால் எடுக்கக்கூடியதாக இருந்தது. அனால் அவர் மேலும் சொல்லுகின்ற பொழுது, "நிலமையை எவ்வாறு கையாளுவது என்பது பொலீசாருக்கு தெரியாது. இதுவிடயமாக நான் பொலீசாரை அணுகினால், 'சரி, இந்த வாகன உரிமையாளரை நாங்கள் தண்டிப்போம்.' என்று கூறுவார். ஆனால் இதை அவர்கள் செய்யபோனால், இனந்தெரியாத தொலைபேசி அழைப்புக்கள் எனது வீட்டிற்கு வரத் தொடங்கும். எனது குடும்ப வாழ்க்கை நாசமாகிவிடும். நான் மன நிம்மதியை இழந்துவிடுவேன்." பொலீசார் தனிப்பட்ட முறைப்பாடுகளை எடுத்து விசாரணை செய்யாமல், உலகத் தமிழர் இயக்கம் மற்றும் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் நிதி சேகரிப்பு நடவடிக்கை தொடர்பாக ஓர் பரந்த விசாரணை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.[127]

பொலீசார் இதைவிட முறையான விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என இலண்டன் வாழ் தமிழர்கள் மேலும் கூறினார்கள். மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் ஒருவர் கூறுகின்ற பொழுது,

> இப்பிரச்சினை தொடர்பாக தேசிய/நகர மட்டத்தில் பொலீசார் நடவடிக்கைகளை எடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறார்கள் இல்லை என்பதே இங்கு பிரச்சினையாகும். ஒரு குறிப்பிட்ட பொலீஸ் நிலையத்தில் தனிப்பட்ட அதிகாரி ஒருவரின் மட்டத்திலேயே இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான அவர்களின் தனிப்பட்ட முயற்சிகள், சில பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு என்பவற்றினால்கூட தடைப்பட்டுப் போகலாம். எனவே இம்மாதிரியான முயற்சிகள் தற்காலிகமானவையே. அரசாங்க மட்டத்தில் எடுக்கப்படும் பிரதானமான தீர்மானங்களே இங்கு தேவையாக இருக்கிறது. அரசாங்கமானது இஸ்லாமிய பயங்கரவாதம் தொடர்பாக முழுமையாக

---

[125] 2005 டிசம்பர், இங்கிலாந்து, இலண்டனில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[126] 2006 ஜனவரி, கனடா, டொரன்டோவில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

[127] 2006 ஜனவரி, கனடா, டொரன்டோவில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஈடுபட்டுள்ளதே ஒழிய, தடைசெய்யப்பட்ட புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகள் பற்றி தனது வளங்களை பிரயோகிப்பதில்லை. ஆனால் தமிழர்கள் முகம் கொடுத்துள்ள நிலமை தொடர்பாக அரசாங்கம் முழுமையாக அறிந்தே வைத்திருக்கிறது.[128]

டொரன்டோ பொலீசுடன் தொடர்பான, புலனாய்வுப் பிரிவின் துப்பறிவு பரிசோதகரின் கருத்துப்படி, புலிகள் இயக்கத்திற்கு நிதி சேகரித்தல் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் கூடிய புலிகள் இயக்கம் தொடர்புள்ளதாக கனேடிய நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் என்பவை, தேசிய பாதுகாப்பு (National Security) என்கின்ற விடயத்தோடு சம்பந்தப் பட்டவையே. அத்துடன் அது, பொலிஸ் புலனாய்வுப் பிரிவு, குடிவரவு மற்றும் சுங்க இலாகா, என்பவற்றை உள்ளடக்கியதாக கனேடிய பொலீசாரினால் (Royal Canadian Mounted Police) நிர்வகிக்கப்படுகின்ற கூட்டுமுயற்சியான, ஒன்றிணைக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு அமுலாக்கல் குழுவின் (Intergrated National Security Team) சட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்ட விடயமாகும்.[129]

ஆள்கடத்தல் அல்லது வன்முறைகள் போன்ற சம்பவங்கள், சட்டத்தை நடைமுறைப் படுத்துபவர்களின் அதிக கவனத்தை பெற்றுள்ளன என்பது ஆச்சரியமானதல்ல. உதாரணமாக, புலிகள் இயக்கத்தினால் இலங்கையின் வட பகுதியில் நீண்ட நாட்கள் தடுத்துவைக்கப்பட்ட இங்கிலாந்துப் பிரஜையான ஜெயதேவன், ஜேர்மனியிலே மிக கடுமையான தாக்குதலுக்கு உள்ளான லோகனாதன், ஆகிய இருவரினதும் விடயத்தில், இங்கிலாந்து மற்றும் ஜேர்மன் அதிகாரிகள் பின்னர் நடத்திய விசாரணைகள் தொடர்பாக பொதுவாக திருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

லோகனாதனுடைய சம்பவத்தில் பொலீசாரின் எதிர் நடவடிக்கையானது, அவர்களின் நடவடிக்கைக்கு குறிப்பான ஒரு முன் மாதிரியை வழங்குகின்றது. லோகனாதனின் தாக்குதலுக்கு பொறுப்பான குற்றவாளிகளை அவ்வதிகாரிகளால் இனங்காண முடியாமல் போனாலும்கூட, தமிழ் சமூகத்தினுள் புலிகள் இயக்கத்திற்காக நிதி சேகரிப்பவர்கள் தொடர்பான நபர்களை தேடுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியின் மூலம், மேலதிக சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கப்பட்டதோடு, அவ்வதிகாரிகள் இவ் வாறான சம்பவங்கள் பற்றி அதீத அக்கறை காட்டுகிறார்கள் என்பதையும் எதிர் காலத்தில் இவ்வாறான சம்பவங்களை மிக பாரதூரமாகவே கருதுவார்கள் என்பதையும் தெளிவாக உணர்த்தியது. [130]

## VII. முடிவுரை

புலம்பெயர் வாழ் தமிழ் சமூகத்தினரின் அங்கத்தவர்கள் மீது புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அச்சுறுத்தல், நெருக்குவாரம் அளித்தல், பலாத்காரப் பணப்பறிப்பு மற்றும் உடல் ரீதியான வன்முறைகள் என்பவை, இலங்கையில் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் பற்றிய தமிழ் சமூகத்தின் மாற்றுக் கருத்துக்களை மிக தாக்கமான வகையில் நசுக்கி விடுகின்றன. அத்துடன், புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற பலாத்காரப் பணப்பறிப்பானது, புலிகள் இயக்கத்தை ஆதரிக்காதவர்கள் உட்பட சகல தமிழர்களையும், புலிகள் இயக்கம்

---

[128] 2006 பெப்பரவரி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு கிடைத்த மின்னஞ்சல் தகவல்.
[129] 2006, ஜனவரி 19, டொரன்டோ பொலீசின், புலனாய்வுப் பிரிவின், துப்பறிவுப் பரிசோதகர் Steve Irwin உடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தொலைபேசி ஊடாக நடத்திய நேர்காணல்.
[130] 2006, ஜனவரி 23ல், டசில்டோர்ஃப், ஜேர்மனியில், மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு நடத்திய நேர்காணல்.

மேற்கொள்ளுகின்ற அரசியல் படுகொலைகள், தொடர்ந்து பல்வேறு விதங்களில் மேற்கொள்ளப்படும் சிறார்களை படையில் சேர்த்தல் உட்பட அவர்களின் இராணுவ நடவடிக்கைகள் என்பவற்றிற்கு ஆதரவாக நிதி வழங்கும்படி நிர்ப்பந்திக்கின்றது. பலாத்காரப் பணப்பறிப்பு மற்றும் அச்சுறுத்தல் நடவடிக்கைகள் ஆகிய இரண்டும், புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் நடவடிக்கைகளுக்கு எதிரான, புலிகள் இயக்கத்தை ஆதரிக்காத மேற்கு நாடுகளில் உள்ள தமிழர்கள், வெளிப்படையாக பேசி அவர்களின் நடத்தையில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்குள்ள வாய்ப்புக்களை மிகக் கணிசமானளவு மட்டுப்படுத்துகின்றது.

தமது நாடுகளில் வாழும் பிரஜைகள் மற்றும் குடியிருப்பாளாகள் இவ்வாறான அத்துமீறல்களுக்கு உட்படுத்தப்படாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மேற்கு நாட்டு அரசாங்கங்களுக்கு இருந்தாலும்கூட, தமிழ் சமுகத்தினரை பாதிக்கின்ற விதத்தில் அவர்கள் மீது நடத்தப்படும் அச்சுறுத்தல் மற்றும் பலாத்காரங்கள் தொடர்பாக மிக குறைந்தளவு நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன. மிகக் கணிசமானளவு புலம்பெயர் வாழ் தமிழ் சமூகத்தினரைக் கொண்டுள்ள அரசாங்கங்கள் அச்சமூகத்தினரைப் பாதுகாப்பதற்காக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் அச்சமூகத்தின் மிக முக்கியமான விடயங்கள் பற்றி அவர்கள் கருத்து வெளியிடுவதற்கான உரிமையையும் அச்சமின்றி வாழ்வதற்கான பாதுகாப்பையும் உறுதி செய்தல் வேண்டும்.

www.tamilarangam.net

## நன்றிகள்

2005 ஒக்டோபர் மாதத்தில் இருந்து 2006 பெப்ரவரி மாதம்வரை டொரன்டோ கனடா, இலண்டன், இங்கிலாந்து, ஆகிய இடங்களில் தன்னால் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிறார்கள் உரிமைகள் பிரிவின் நியாயப் பிரச்சாரப் பணிப்பாளர் (Advocacy Director ) ஜோ பேக்கர் அவர்களால் இவ்வறிக்கையானது எழுதப்பட்டது. இவ்வறிக்கையானது மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிறார்கள் உரிமைகள் பிரிவு, ஆசியப் பிரிவு, கொள்கைகள் மற்றும் சட்டப்பிரிவு, நிகழ்ச்சித் திட்டப்பிரிவு, மற்றும் பயங்கரவாதம், பயங்கரவாத தடுப்பு நிகழ்ச்சித் திட்டப்பிரிவு ஆகியவற்றின் பணியாளர்களால் மீள் பரிசீலிக்கப்பட்டு தயாரிக்கப்பட்து.

தமக்கு ஏற்பட்ட அனுபவங்கள் தொடர்பாக எம்முடன் கதைத்தவர்களுக்கும், மற்றும் எமது ஆய்வுக்கு உதவி செய்த புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தை சேர்ந்த பல அங்கத்தவர்களுக்கும், மனித உரிமை கண்காணிப்பு அமைப்பானது கடமைப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்களின் பெயர் விபரங்கள் இங்கு இரகசியமாகவே வைக்கப்படுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

HUMAN RIGHTS WATCH
350 Fifth Avenue, 34th Floor
New York, NY 10118-3299

www.hrw.org

H U M A N
R I G H T S
W A T C H

# “இறுதி யுத்தத்திற்கு” நிதியுதவி செய்தல்

## புலம் பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும்

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையேயான பத்தொன்பது வருடகால ஆயுத மோதலானது, இலங்கைத் தமிழர்களில் கால்வாசியை அண்மித்த தொகையினரை நாட்டை விட்டு வெளியேறச் செய்துள்ளதுடன், பருமட்டாக 600,000ற்கும் 800.000ற்கும் இடைப்பட்ட புலம்பெயர் வாழ் தமிழ் சமூகமொன்றை உலகளாவிய ரீதியில் உருவாக்கியுள்ளது.

தற்போது கனடா, இங்கிலாந்து உட்பட ஏனைய மேற்கத்தேய நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களில் அனேகமானோர், சுதந்திரமான நாடு ஒன்றினை நிறுவுவதற்கு புலிகள் இயக்கத்தினால் நடத்தப்படுகின்ற போராட்டத்திற்கு, தீவிரமாகத் தமது ஆதரவினை வழங்குகின்றனர். அதேவேளை, ஏனையவர்கள் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களுக்கும், பலாத்கார பணப்பறிப்பிற்கும் உடல் ரீதியான தாக்குதல்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியதாக உள்ளனர். இதற்குக் காரணம் புலிகள் இயக்கமானது தமது மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான விமர்சனங்களை நசுக்குவதோடு அதன் மூலம் தமக்கான தங்கு தடையற்ற பண வருமானத்தை உறுதி செய்யும் அதன் நோக்கமேயாகும்.

2005ம் ஆண்டு பிற்பகுதியில், இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையே நடைபெறப்போகும் “இறுதி யுத்தத்திற்கு” நிதி தரும்படி கோரி, கனடா மற்றும் ஐரோப்பாவின் பல பகுதிகளில் புலிகள் இயக்கத்தினர், மிகத் திட்டமிட்டதும் தீவிரமானதுமான நிதி சேகரிப்பு நடவடிக்கை ஒன்றினை முடுக்கி விட்டனர். புலிகள் இயக்கத்தினரும், புலிகள் இயக்கத்திற்கு சார்பான குழுக்களும் தமிழ் குடும்பங்கள் மற்றும் வர்த்தக உரிமையாளர்களிடம் கணிசமான தொகைப் பணத்தைத் தரும்படி அழுத்தங்களை இட்டதுடன், அத்தொகையினை வழங்க மறுக்கின்ற பட்சத்தில், அவர்கள் தமது குடும்ப அங்கத்தவர்களைப் பார்ப்பதற்கு இலங்கைக்குத் திரும்பிப் போக முடியாது என்றும் அச்சுறுத்தப்பட்டனர். தமிழ்ப் புலிகள் இயக்கத்தை வெளிப்படையாக விமர்சிக்கின்ற அல்லது புலிகள் இயக்கத்திற்கு எதிரானவர்கள் என்று கருதப்படுகின்ற, புலம்பெயர் தமிழ் பத்திரிகையாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மரண அச்சுறுத்தல், கடுமையான தாக்குதல்கள், சேறடிப்பு பிரச்சாரங்கள் என்பவற்றுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

மேற்கு நாடுகளில் புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நெருக்குவாரமளித்தல் மற்றும் வன்முறைப் பிரயோகம் பொன்ற நடவடிக்கைகளாவன, இலங்கையில் தொடர்சியாக நிகழும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமிழ் சமூகத்தினரிடையே இருக்கும் மாற்றுக் கருத்துக்களை மிகத் திட்டமிட்ட முறையில் நசுக்கி விடுவதோடு, புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளை ஆதரிக்காத தமிழர்களையும், புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற அரசியல் படுகொலைகள் மற்றும் சிறார்களைப் படையில் சேர்த்தல் உட்பட ஏனைய நடவடிக்கைகளுக்கு ஆதரவாக நிதி வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கிறது.

புலம் பெயாந்து வாழும் தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்களை அச்சுறுத்தல்கள், வன்முறைகள் மற்றும் பலாத்கார பணப்பறிப்பு என்பவற்றிலிருந்து பாதுகாத்து அவர்கள் அச்சமின்றி வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்யக்கூடிய கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்படி, மேற்கத்தேய அரசாங்கங்களை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வலியுறுத்துகின்றது



© 2006 Reuters